66
66
OFFICE ... — 5 JUL 1933 MADR...

தொகுதி 12.] 1933வூ மே... [பகுதி 4.

மனமோகினி.

ஆசிரியர்
ஆரணி. குப்புசாமிமுதலியார்

பிரசுரகர்த்தா
நா முனிசாமி முதலியார்,
ஆனந்த நிலையம், சென்னை.

மாதவி மாதவன் 2-பாகம்

ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவு

இன்பரசம் பொருந்தியது; படிக்கப் படிக்கப் பேரவாக் கொடுக்கக் கூடியது; தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம்பியது; இதுவரையில் வெளிவராதது; சாமர்த்திய சம்பவங்கள் பொதிந்தது; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது. இரண்டு பாகமும் சேர்ந்து விலை ரூ. 2—0—0.

இரத்தினபுரி ரகசியம் 7-பாகம் விலை ரூபா 13-14-0

அமராவதி 2-பாகம்.

ஆரணி-குப்புசாமி முதலியாரவர்களியற்றியது.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமு முடையவனுயிருந்தால், அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்ருய் நிரூபிக்கப்பட் டிருக்கின்றன. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியை யளிக்கும். 2-பாகமும் விலை ரூபா 4.

இராஜாமணி

அல்லது

ஓர் அபூர்வ மர்மம்

கற்புக்கரசியாகிய ஓர் உத்தமியின் சரித்திரத்தை மெத்தத் தெளிவாக விளக்கிக் காட்டக் கூடியது. இராஜாமணி யென்னும் பெண்மணி, பெருந்திருட்டும், மிகுந்த கொலைத் தொழிலுமுடைய ஒருவனுக்கு மகளாயிருந்தும், அவனைப்போலவே பெரும் பாதகச் செயல்களையுடைய ஒரு முரடனுக்குச் சகோதரியாயிருந்தும் அவர்களிடம் அகப்பட்டுப் பெரிய ஆபத்திற் சிக்கிய பூபாலம் பிள்ளையென்பவரைக் காப்பாற்றி அவருடன் தானும் வெளியேறி அவரை மணந்து கொள்வதும், மிக்க அதிசயம் பொருந்திய செயல்களாயும் படிப்போர் மனத்தைக் கவரக்கூடியதாயும் இருக்கும்.

இதன் விலை ரூபா 2-0-0.

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.

8-MAR 1933

ஆ, என்ன அழகு! எப்படியாவது அவளது கன்னத்தில் ஒரு முத்தமிட வேண்டுமென்று ஆசைப்பட்டேன். அவள் அருகில் நெருங்கியதும் அவள் விழித்துக்கொண்டு விட்டாள். அவள் சத்தம் போட்டால் என்ன செய்வதென்று பயந்து கையால் ஜாடைகாட்டிப் பயப்பட வேண்டாம் என்று சொன்னேன். ஆனால் நான் அருகில் சென்றதும் அவள் அச்சத்தால் மூர்ச்சையாய் விட்டாள். ஆகவே நான் மனக் குழப்பமடைந்து அவ்விடத்திலிருந்து போய் விட்டேன். பிறகு ஒருநாள் முன்போலவே என் அறையை விட்டு அங்கே போனபோது அவ்வறையின் கதவு பாதி திறக்கப் பட்டிருப்பதைக் கண்டு ஆச்சர்யப்பட்டேன். உள்ளே போய்ப் பார்த்ததில் என் சிற்றப்பனும் மகாபாவியுமான தர்மலிங்கம் பிரபு அங்கு உட்கார்ந்து கொண்டு நான் கண்ட அந்த அழகிய பெண்ணை மிரட்டிக்கொண் டிருந்தார். அவள் கண்ணீர் விட்டு அழுதுகொண் டிருந்தாள். என் மனம் பொறுக்காமல் அவரது தலையில் ஒரு சரியான அறை கொடுத்துவிட்டு அப் பெண்ணின் கையைப் பிடித்துக் கொண்டு சர சர வென்று அக்கட்டடத்தை விட்டு வெளியே வரப் பார்த்தேன். ஆனால் வீரபாலய்யாவும், மங்களமும் இதர சேவகர்களும் வழிமடக்கி எனக்குச் சரியான அடி கொடுத்ததுடன் எங்கள் இருவரையும் மறுபடியும் கொண்டு போய்த் தனித் தனியான அறையில் போட்டு விட்டார்கள். பிறகு எனக்கு ஒன்றும் தெரியாது. நீ வந்து விடுவித்தது தான் தெரியும். என்னை அவ்வளவு கஷ்டத்தினின்றும் விடுவித்த உனக்கு மீண்டும் ஒரு வந்தனம் கூறுகிறேன்' என்று சபாபதி இந்திராபாயிடம் கூறினான்.

அப்போது இந்திராபாய் வேடிக்கையாக, 'அப்படியானால் நீங்கள் இன்னமும் அந்தக் கோகிலத்தினிடம் அதேவித

18580

மான அன்புடனும் பாசத்துடனும் இருக்கிறீர்களா?' என்று கேட்க அவர் 'ஆம், அவளை நான் அதிகம் நேசிக்கிறேன். மற்றொருமுறை அவளைப் பார்க்கவேண்டு மென்னும் ஆசை அதிகமாயிருக்கிறது' என்றார். அதற்கு அவள், 'சந்தேகமில்லாமல் நீங்கள் அவளைப் பார்ப்பீர்கள். அவள் இங்கு வருவாள் என்பது நிச்சயம்' என்று சொன்னதால் அவர் சந்தோஷமடைந்து, 'நான் எல்லா சங்கதிகளையும் உன்னிடம் சொல்லிவிட்ட விஷயத்தில் எனக்கு மனநிம்மதி ஏற்பட்டிருக்கிறது. இன்னும் பல விஷயங்களைச் சொல்ல வேண்டுமென்று நினைத்தேன். ஆனால் இடையிடையே பல விஷயங்கள் மறந்து விட்டன. நாளையதினம் எல்லாவற்றையும் சொல்லிவிடுகிறேன்' என்றார். அப்போது இந்திராபாய், 'சரி; இதுவரை சொன்னது போதும். நீங்கள் நிம்மதியாகப் படுத்துச் சிறிது நேரம் தூங்குங்கள்' என்றாள். அதற்கு அவர், 'நீ தயவு செய்து என் அருகிலேயே உட்கார்ந்திரு. நான் கவலையின்றித் தூங்குகிறேன். நீ போய்விட மாட்டேனென்று உறுதி கூறவேண்டும்' என்று கேட்க அவளும் அவ்வாறே ஒப்புக்கொண்டதால் ஒரு குழந்தை தன் தாய் அருகில் இருக்க எவ்வித கவலையுமின்றித் தூங்குவதுபோல் தூங்கலானார்.

இந்திராபாய் அவரது படுக்கையின் அறையில் உட்கார்ந்துகொண்டு சிறிது நேரம் கூறிய விஷயங்களைப் பற்றியெல்லாம் சிந்தித்துக்கொண்டிருந்தாள். பிறகு தான் அன்று காலை முதல் செய்த காரியங்களை யெல்லாம் ஒவ்வொன்றும் நல்லதாகவே இருப்பதைக் கண்டு சந்தோஷித்தாள். முதலில் தன் சகோதரனைச் சந்திக்கும் பாக்கியம் கிடைத்தது. பிறகு தன் தாயார் என்று தான் கருதும் ஒருமாதின் படம் கிடைத்தது. அப்படத்தை எடுத்தபோது தான் அனுஷ்டித்த சாமர்த்திய முறைகளை நினைத்துக் கொண்டதும் தானாகவே

சிரித்தாள். ஆனால் தன் நிலைமையைப் பற்றித் தன் தம்பிக்குத் தெரிந்தால் என்ன நினைப்பானோ என்று கவலைப்பட்டாள். பிறகு அவள் தான் பஞ்சநதம் பிரபுவின் வீட்டிலிருந்துகொண்டு வந்த படத்தைத் தன் கையில் எடுத்துவைத்துக் கொண்டு அதை உற்றுப் பார்த்துக்கொண்டே அப்படத்திலுள்ள மாதின் தோற்றத்திலும் தன் உருவமும் தன் தம்பியின் உருவமும் சிறிது காணப்படுவது கண்டு சந்தோஷப்பட்டாள். அச்சமயத்தில் திடீரென்று விழித்துக்கொண்ட சபாபதி என்ற அம் மனிதர், 'எனதன்புள்ள சிநேகிதையே! கையில் என்ன வைத்துக்கொண்டிருக்கிறாய். அதையே உற்றுநோக்கிக்கொண் டிருக்கிறாயே' என்று கேட்டார். அதற்கு இந்திராபாய், 'இது ஒரு அழகான படம். அதை நான் அதிகம் மதிக்கிறேன். அப் படத்தை உங்களுக்கும் காண்பிக்கிறேன், பாருங்கள்' என்றாள். அவரும், நீ அதிகம் மதிக்கும் ஒன்றை நானும் அவ்வாறே மதிப்பேன். ஆதலால் அப்படத்தை நானும் பார்க்க விரும்புகிறேன். நீ அதைக் கவனத்துடன் பார்த்துக்கொண்டே உன் மனதிலேயே எதையோ பேசிக்கொள்கிறாயே! அதன் காரணம் என்ன?'' என்று கேட்டார்.

இந்திராபாய் அப் படத்தைச் சபாபதியிடம் கொடுத்தாள். அதை அவர் பார்த்ததும் அவர் முகத்தில் ஒரு விதமான ஆச்சர்யமும் சந்தோஷமும் சேர்ந்த குறி தோன்றியது. உடனே அவர், 'ஆ! இது என் தாயாரின் படம். இதில் சந்தேகமே யில்லை' எனக் கூத்தாடினார். இதைக் கேட்டதும் இந்திராபாய் அதிக ஆச்சர்ய மடைந்தவளாய் அதனால் ஒன்றும் பேசமுடியாமல் சிறிது நேரம் மௌனமாயிருந்தாள். ஒரு கால் அவர் இன்னும் மனத் தெளிவு அடையாமல் அப்படிச் சொன்னாரோ என்று நினைத்தாள்

ஆயினும் அவர் அப்படத்தையே உற்று நோக்கியதிலிருந்தும், அவர் முகத்தில் உண்மையிலேயே சந்தோஷக் குறி ஏற்பட்டதிலிருந்தும் அவர் சொல்வது உண்மையாக இருந்தாலும் இருக்கலாம் என்று சிந்தித்தாள். ஆகவே அவள், 'ஐயா, இப்படம் உங்கள் தாயாருடையது என்கிறீர்களே. அப்படியானால் இது சுகானந்தம் பிரபுவின் மனைவியின் படமா?' என்று கேட்டாள். உடனே சபாபதியும், 'ஆம், இது என் தாயாரின் படந்தான். இப்படத்தை எப்படியோ எனக்காகச் சம்பாதித்துக்கொண்டு வந்தாயே அதற்காக மிகவும் சந்தோஷப் படுகிறேன். ஆ, என் தாயார் இன்னும் உயிருடன் இருக்கிறாளா. அப்படியிருந்தால் எங்கே இருக்கிறாள். நீ தயவு செய்து எப்படியாவது என்னை அவளிடமாவது அழைத்துச்செல் அல்லது அவளையாவது இங்கு அழைத்து வா' என்றுமிக ஆவலுடன் கூறினார். அப்போது இந்திராபாய் ஒன்றும் பதில் சொல்லவில்லை. தன் மனத்தில், 'சுகானந்தம் பிரபுவின் மனைவியே எனக்கும் என் சகோதரனுக்கும் தாயாக இருப்பாளேயாயின் இங்கே படுத்திருக்கும் இவர் எங்கள் சகோதராக இருக்கவேண்டும். ஆனால் அது எப்படி இருக்க முடியும்? இதில் ஏதோ தவறு இருக்கவேண்டும். இது சம்பந்தமாய் எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை. எப்படியிருப்பினும் இப்போது நான் அவசரப்பட்டு என் விஷயத்தை அவரிடம் சொல்லிக் கொள்ளக் கூடாது. நானும் என் தம்பியும் கூட அதே மாதுக்கு பிறந்தவர்கள் என்று சொன்னால் அம்மாது தன் கணவனுக்குத் துரோகம் செய்தவள் என்று ஏற்படு மல்லவா? ஆயினும் சுகானந்தம் பிரபு நீண்டகாலம் வெளி நாட்டுக்குப் போயிருந்தபோது என்ன நடந்ததோ யார் கண்டார்கள்?' என்று சிந்தித்தாள்.

இந்திராபாய் தான் கேட்டதற்குப் பதில் சொல்லாமல் எதைப்பற்றியோ சிந்தித்துக்கொண்டிருந்ததைக் கண்ட சபாபதி, 'மாதே! நீ என்ன யோசித்துக் கொண்டிருக்கிறாய்? எனக்கு ஏன் பதில் சொல்லவில்லை' என்று கேட்டார். அப்போது அவள், 'ஐயா, இப்படத்தைப்பற்றி எனக்கொன்றும் தெரியாது. ஏதோ ஒரு புஸ்தகத்திலிருந்து இப்படத்தைக் கிழித்துவைத்தேன். இதைக் கண்டதும் இப்படியெல்லாம் நீங்கள் சொல்லப் போகிறீர் என்று நான் எதிர்பார்க்கவேயில்லை. இருக்கட்டும். உங்கள் தாயார் அரசமாளிகைக்குப் போய்வரும் வழக்கம் இருந்ததா என்பதைத் தயவு செய்து சொல்லுங்கள்' என்று கேட்டாள். உடனே அவர், 'ஆம் இப்போதுதான் ஞாபகத்துக்கு வருகிறது. எனது தாயார் அடிக்கடி இளவரசரின் சகோதரியான கிருஷ்ணவேணி இளவரசியுடன் தங்கியிருப்பதுண்டு. அப்போது என் தாயாருடன் மற்றும் பல மாதர்களும் தங்கியிருப்பார்கள். அவர்களின் பெயர் என் ஞாபகத்தில் இல்லை' என்று சொன்னார். அப்போது இந்திராபாய், 'அந்தப் பெயர்கள் ஞாபகமில்லாவிட்டாலும் பாதகமில்லை. பஞ்சநதம்பிரபு என்னும் பெயரையாவது நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?' என்று கேட்டாள். அப்போது அவர், 'ஆம், பஞ்சநதம் பிரபுவைப் பார்த்திருக்கிறேன். அவர் அடிக்கடி நாங்கள் தங்கியிருந்த மாளிகைக்கும் வருவார். அரச மாளிகையிலும் அவரைப் பார்த்திருக்கிறேன். கிருஷ்ணவேணி இளவரசியின் மாளிகையில் அவர் பெரிய வேலையில் இருந்ததாகத் தெரிகிறது. இந்தப் படம் என் தாயினுடையதே என்பதில் சந்தேகமேயில்லை. அதற்குமேல் ஒன்றும் பேசமுடியவில்லை' என்றார்.

பிறகு அவர் பேசாமல் தன் படுக்கையில் சாய்ந்து கண்ணை மூடிக்கொண்டு ஓய்வு பெற்றார். அப்படியே அவருக்

குத் தூக்கமும் வந்துவிட்டது. ஆகவே இந்திராபாய் தாதியைக் கூப்பிட்டு அவளைக் கவனித்துக்கொள்ளும்படி சொல்லிவிட்டுக் கீழ்க்கட்டுக்கு வந்து தன் அறைக்குப் படுக்கச் சென்றாள். அப்போது அவளது அந்த வேலைக்காரியாகிய புஷ்பவல்லி அவளிடம் மாணிக்கம் என்னும் ஒரு ஆள் அவளைக்கண்டு பேசுவதற்காக வந்திருப்பதாகத் தெரிவித்தாள். சமுத்திரவிலாச மாளிகையின் வேலைக்காரனாகிய மாணிக்கத்தை உள்ளே அழைத்துவரும்படி கட்டளை யிட்டதால் அவனும் அவ்வாறே இந்திராபாய் இருக்கு மிடத்துக்கு அழைத்து வரப்பட்டான்.

51-வது அத்தியாயம்

உளவு கண்டுபிடிக்க முயற்சி

முன் அத்தியாயத்தில் கூறியபடி நமது இந்திராபாயைச் சந்தித்த மாணிக்கம் என்னும் சமுத்திரவிலாச மாளிகையின் சேவகன் சாதாரண உடையை அணிந்திருந்தான். அவனுக்குச் சுமார் நாற்பது வயது இருக்கும். அவன் மிக்க அயோக்கியனைப் போலக் காணப்படாவிட்டாலும் அதிக தந்திரசாலிஎன்பது அவனது முகத்தோற்றத்தாலேயே தெரிந்தது. இந்திராபாய் அவனை ஒரு ஆசனத்தில் அமரச் சொன்னாள். அவன் அவளை முதலில் சமுத்திரவிலாச மாளிகையில் கோகிலத்தை விடுவிக்க வந்தபோது ஆடவன் உடையில் பார்த்ததுதான் இப்போது இரண்டாவது முறையாக அவளைப் பெண் உடையிலேயே பார்க்கவும் அவளது அழகையும் பெருந்தன்மையையும் கண்டுஆச்சர்யப்பட்டான். இப்படிப்பட்ட மாது அங்குள்ள சொத்துக்களை

யும் கொள்ளையடித்தாளே என்று நினைத்தபோது அவன் மனம் திடுக்கிட்டது. இந்திராபாய் மாணிக்கத்தைப் பார்த்து, 'சமுத்திரவிலாச மாளிகையில் என்ன செய்தார்கள். அங்கிருந்து வெளியேற்றப்பட்ட அம்மணிதனைத் தேடிக்கொண்டிருக்கிறார்களா?' என்று கேட்டாள். அதற்கு அவன், 'இல்லை அவரைத்தேட எத்தகைய முயற்சியும் செய்யவில்லை. தர்மலிங்கம் பிரபு அச்சத்தாலும் பிரமையாலும் காயலாவாய்க் கிடக்கிறார். மாளிகையில் எங்கு பார்த்தாலும் இதே பேச்சாக இருக்கிறது. என்ன செய்வதென்று ஒருவருக்கும் ஒன்றும் தெரிவதில்லை. எப்படியிருந்தாலும் எல்லா ரகசியங்களும் வெளியாய் விடக்கூடிய காலம் வந்து விட்டதென்றே எல்லாரும் கருதுகின்றனர்' என்றான். அப்போது அவள் அவனை உற்று நோக்கியவண்ணம், 'மாணிக்கம்! என் அம்மாளிகையினின்றும் விடுவித்த அம்மணிதன் யார் என்பதை உண்மையாகச் சொல். இதில் ஒன்றும் மறைக்கவேண்டாம்,' என்று கேட்டாள்.

அதற்கு அவன், 'அம்மணி! என்னைத் தவிர வேறு எந்த சேவகனுக்கும் இதைப்பற்றி ஒன்றும்தெரியாது. தர்மலிங்கம் பிரபுவின் மூத்த சகோதரரான சுகானந்தம் பிரபுவின் குமாரனே அவர். நியாயமாக இந்த ஆஸ்திபாஸ்திகளும் பட்டமும் அவருக்குத்தான் சேரவேண்டும். இந்த விஷயங்களெல்லாம் வீரபாலய்யாவுக்கும் மங்களத்துக்கும் தெரியும். அவர்கள் என்னிடம்மட்டும் இதையெல்லாம் சொல்வார்கள். நாங்கள் இந்த விஷயங்களையெல்லாம் வெளியிடக்கூடாதென்பதற்காக எங்களுக்குக் கொழுத்த சம்பளத்தைக் கொடுத்ததால் நாங்கள் எதையும் ரகசியமாகவே வைத்திருந்தோம்!' என்றுகூறினான். அப்போது இந்திராபாய், 'நீ அப்படி நினைக்காதே. அந்த சமுத்திரவிலாச மாளிகை இருக்கும் கோயில்

ஸாவில் ஜனங்களெல்லாம் அதில் அடைபட்டிருந்த பைத்தியக்காரன் எனச் சொல்லப்பட்ட அம்மனிதனைப் பற்றிப் பலவாறு பேசிக்கொள்கிறார்கள். கோகிலம் என்னும் பெண் அங்கிருந்தபோது அவள் ஜன்னல் வழியாக விட்டெறிந்த துண்டுக் கடிதம் எனக்குக் கிடைக்கவே அவளை நான் விடுவிக்க வேண்டுமென்னும் எண்ணத்துடன் அன்றுபகல் அங்குவந்து அக்கட்டடத்தைப் பற்றி விசாரித்ததில் அங்குள்ள ஜனங்கள் அது பைத்தியக்காரர் விடுதி என்று சொல்லப்படுவதாயும் ஆயினும் குறிப்பிட்ட ஒரு பைத்தியக்காரன் விஷயத்தில் மட்டும் சந்தேகமிருப்பதாயும், அவன்தான் தர்மலிங்கம் பிரபுவின் சொத்துக்களைப் பெறத் தகுதி வாய்ந்தவன் என்றும் பேசிக்கொண்டனர். அது கிடக்கட்டும், அவர்தான் நியாயமாக பாத்தியதை யுடையவர் என்பது உனக்குத் தெரியுமே. நீ ஏன் அவரை விடுவித்திருக்கக் கூடாது. அல்லது அவர் தப்பிச் செல்ல உதவி செய்திருந்தால் உனக்குப் பெருந் தொகை சன்மானம் கிடைக்காதா' என்று கேட்டாள்.

அதற்கு மாணிக்கம், 'அம்மணி! உண்மையைச் சொல்லுகிறேன், கேளுங்கள். விடுவிப்பதென்றால் எளிய காரியமல்ல, ஏதோ நம்பிக்கை வைத்துக் கொண்டு கஷ்டமான காரியத்தில் இறங்கி அதுவும் கைகூடாமல் அகப்பட்டுக் கொண்டு அவஸ்தைப் படுவதில் என்ன பிரயோசனம் என்று நினைத்தேன். சபாபதி என்னும் அந்தமனிதர் பன்னிரண்டு வயதானவராக இருக்கும்போதே அவர் இறந்துவிட்டதாகப் பிரஸ்தாபப் படுத்தி ஏதோ ஒரு பிணத்தை எடுத்துக்கொண்டு போய் அடக்கம் செய்து விட்டுத் தர்மலிங்கம் பிரபுவும் உடனே சொத்து சுதந்தரங்களையெல்லாம் அபகரித்துக் கொண்டு இன்பமாக வாழ்ந்துவரும்போதும், அப் பிரதேசத்திலுள்ள ஜனங்களெல்லாம் அதுதான் உண்மையென்று

விளைத்து நிம்மதியாக இருந்து வரும்போதும் நான் எப்படி இந்தக் காரியத்தில் வெற்றியடைய முடியும்? மேலும் இது பதினறு வருஷத்துக்கு முன் நடைபெற்றது. அப்போது பையனே மிகச்சிறியவன். நானும் அப்போது சுமார் இரு பத்துநான்கு வயதினனாக இருந்தேன். அந்த வேலைக்கு வந்தே சொற்ப காலந்தான் ஆகியிருந்தது. பிறகு நாளாகி விட்டதால் அதில் தலையிட முடியவில்லை.

ஆகவே நான் என் வயிற்றுப்பாடு கழிந்தால் போது மென்று சொல்லி அவர்கள் கொடுத்த சம்பளத்தை வாங் கிக்கொண்டு காலங் கழித்து வந்தேன்,' என்று தன் நிலை மையை உள்ளபடி உணர்த்தினன்.

இதை யெல்லாம் கேட்ட இந்திராபாய், 'சரி; அப் போது நடந்துகொண்ட விதத்தைப் பற்றி இப்போது நாம் கவலைப்பட வேண்டியதில்லை. இப்போதாவது நீ சபாபதி என்னும் அம்மனிதர் தன் சொத்து சுதந்தரங்களை அடைவ தில் உன்னலியன்ற உதவி செய்ய முடியுமா? அப்படிச் செய்வதானல் உனக்குத் தக்கபடி சன்மானம் அளிக்கப் படும்' என்று கூறினள். அவன் அதற்கு, 'தக்கபடி உதவி செய்வதில் எவ்வித ஆட்சேபமும் இல்லை. ஆனல் தர்மலிங் கம் பிரபுவின் விரோதத்தைச் சம்பாதித்துக்கொண்டுதான் இதில் நான் இறங்கவேண்டும். ஆதலால் கட்டாயமாக சன் மானம் அளிக்கப்படும் என்று நீ உறுதி கூறினல் என்னல் இயன்றதைச் செய்கிறேன். இவ்வேலையில் ஈடுபடுவதால என் வயிற்றுக்கே திண்டாட்டமாய் விட்டால் என்ன செய்வது என்னும் பயத்தினல்தான் அக்கிரமத்தையும் மூடி வைப்பதில் உதவியாக இருக்கவேண்டி யிருந்தது,' என்றன். அதற்கு அவள், 'இல்லை, இல்லை; பயப்பட வேண்டாம். எப்படி யிருந்தாலும் தர்மலிங்கம் பிரபு ஒழிந்துபோய் அந்த

ஸ்தானத்துக்கு நமது சபாபதி வருவது நிச்சயம். ஆதலின் நீ முன்னதாகவே புத்திசாலித் தனமாக இவ் விஷயத்தில் உதவி செய்தால் உனக்குத் தக்க சன்மானம் கிடைக்கு மென்பது நிச்சயம். எந்த வழியில் உன்னால் உதவி செய்ய முடியுமென்பதை உடனே சொல்,' என்று கேட்டாள்.

அப்போது மாணிக்கம், 'அம்மா! முனியன் என்னும் பெயரையுடைய ஒரு முரட்டு மனிதனை நீ கண்டு பிடிக்க வேண்டும்,' என்று சொன்னதும் இந்திராபாய், 'ஓ, ஆற்றிலோ குளத்திலோ விழும் மனிதர்களின் பிரேதங்களை அடிக்கடி வெளியிலெடுத்து அதை ராசாயன சாஸ்திரிகள் டாக்டர்கள் முதலியவர்களுக்கு விற்பானே அந்த முனியன் தானே' என்று கேட்டாள். நடுக் குப்பத்தில் கோபாலன் தம்பதிகளின் வீட்டில் கூடும் பலரில் முனியன் என்பவனும் ஒருவன் என்பது அவளுக்குத் தெரியும். ஆகவே அவள் அவ்வாறு தைரியமாகக் கூறினாள். இதனால் ஆச்சரிய மடைந்த மாணிக்கம், 'ஓ! அந்த மனிதன் உனக்குத் தெரியுமா? அவன் பிழைத்திருக்கிறானா? அவன்தான் நான் குறிப்பிடும் மனிதன்' என்று கூறினான். அதற்கு அவள், 'அந்த மனிதனைப் பற்றி எனக்கொன்றும் தெரியாது. ஆயினும் அவன் எங்கு இருக்கிறான் என்பதைக் கண்டு பிடிக்க என்னால் முடியும். அவன் இன்னும் உயிருடன் இருக்கிறான் என்றுதான் நினைக்கிறேன். அவனால் நமக்கு என்ன பிரயோசனம்?' என்று கேட்டாள். அப்போது அச் சேவகன், 'அவன் தான் ஒரு வாலிபனுடைய பிரேதத்தைக் கொடுத்தான். அப் பிரேதம்தான் சபாபதியினுடையதென்று சொல்லி நாங்கள் வேலையை முடித்துவிட்டோம். அவன் கொடுத்த பிரேதத்தை நான்தான் அவர்கள் வீட்டில் எடுத்துக்கொண்டு போனேன். மேலும் சபாபதியைத்

தூக்கிக்கொண்டு வரும்போதும் நான் உடன் இருந்தேன். ஆகவே என் சாட்சியமும், அந்த முனியனுடைய சாட்சிய மும் இதில் முக்கியமானது' என்றான்.

இதைக்கேட்ட இந்திராபாயும், 'ஆம்; மிக முக்கியமான தகவலைத்தான் இப்போது நீ கொடுத்திருக்கிறாய். மிகவும் சந்தோஷம். பயப்பட வேண்டாம். இறுதியில் உனக்குத் தக்க சன்மானம் கொடுப்போம். அந்த மங்களம் என்னும் மாது யார் என்பதைச் சொல்,' என்று கேட்டாள். அதற்கு அவன், 'மங்களம் என்பவள் ஒரு காலத்தில் தர்மலிங்கம் பிரபுவின் வைப்பாட்டியாக இருந்தாள். வாலிபத்தில் அவள் மிக அழகுடையவளாயும், நகரில் பலரால் மோகிக்கப்பட்டவ ளாயும் இருந்ததாகத் தெரிகிறது. இப்போதும் அவள் தர்ம லிங்கம் பிரபுவின் ஆதரவிலேயே சமுத்திர விலாச மாளிகை யில் சௌக்கியமாகவே வசித்து வருகிறாள். அவளுக்கு வேண்டிய எல்லாச் சௌகரியங்களும் அளிக்கப்படுகின்றன. ஆனால் அவள் மகா பொல்லாதவள். சுயநலத்தில் கருத் துடையவள். தர்மலிங்கம் பிரபு சொல்லும் எந்த வேலையை யும் செய்வாள். அந்த வீரபாலய்யா என்பவனும் அப்படிப் பட்டவன்தான். அவனும் அப்பிரபுவின் இஷ்டப்படி யெல் லாம் ஆடிவிட்டு அங்கு சுகமாகக் காலங்கழிக்கிறான்' என்று அவ்விருவருடைய நிலைமையையும் சொன்னான்.

பிறகு இந்திராபாய், 'சரி, சுகானந்தம்பிரபுவின் மனைவி யும் சபாபதியின் தாயாருமான அச் சீமாட்டியின் நிலைமை என்ன? அவள் உயிருடன் இருக்கிறாளா?' என்று கேட் டாள். அதற்கு அவன், 'அம்மாது இங்கிருந்து அதிக தூரத் தில் அதாவது நமக்கு அடுத்த ராஜ்யமாகிய புதுக்கோட்டை யில் தனியான இடத்தில் மறைவாகயிருப்பதாகத் தெரிகிறது.

ஆனால் அதைப்பற்றி நிச்சயமாக எனக்கொன்றும்தெரியாது' அம்மாதைப்பற்றி சமுத்திரவிலாசமாளிகையில் ஒன்றும்பேச படுவதில்லை, ஆனால் அவள் உயிருடன் இருக்கிறாள் என்பது மட்டும் தெரியும்,' என்றான். உடனே அவள், 'அதுமட்டு மாவது தெரிந்ததற்காகச் சந்தோஷம். அவள் எங்கேயிருக்கி றாள் என்பதைக் கண்டுபிடிக்க உன்னால் இயன்றதை யெல் லாம் செய்யவேண்டும். இதோ இந்த நூறுபவுன் நோட் டைச் சன்மானமாக வைத்துக்கொள். இன்னும் இந்த வேலை பூர்த்தியானபிறகு அதிகமாகச் சன்மானம் கொடுக்கப்படும். நீ சமுத்திர விலாச மாளிகை சென்று அங்கு நடக்கும் காரி யங்களையெல்லாம் கவனித்து வந்து எனக்குச் சொல்வதுடன் சபாபதியின் தாயார் எங்கு இருக்கிறாள் என்பதையும் கண்டு பிடிக்க முயற்சி செய்!, என்று சொல்லி நூறு பவுன் நோட் டைக் கொடுத்தாள். அதைப் பெற்றுக்கொண்டதும் அவன் அதிக சந்தோஷமடைந்து சில இரகசியங்களைச் சொன்ன தற்கே நூறுபவுன் கிடைத்ததென்றால் இவ்வேலை பூர்த்தியா கும்படி உதவி செய்தால் அதிகமாகக் கிடைப்பது நிச்சய மென்று நம்பி, 'அப்படியே ஆகட்டும் என்னால் முடிந்ததை யெல்லாம் செய்கிறேன்' என்றான். பிறகு மாணிக்கம் அவ் விடத்தை விட்டுச் சென்றான்.

அப்போது இரவு எட்டு அல்லது ஒன்பது மணி இருக் கும். வியாதியஸ்தரான சபாபதி நன்றாகத் தூங்கிக்கொண்டி ருப்பதால்தான் அப்போதே நடுக்குப்பம்சென்று முனியனைப் பற்றி விசாரிக்கலாமென நினைத்து இந்திராபாய் வழக்கப்படி தன் ஆண் உடையைத் தரித்துத் தன் குதிரைமீது ஏறிச் சென்றாள். அவள் பல இடங்களையும் சுற்றிக்கொண்டு நடுக் குப்பத்திலுள்ள கோபாலன் தம்பதிகளின் கட்டடத்துக்குப் போய்ச் சேர்ந்தாள். உள்ளே பல முரடர்கள் பேசிக்கொண்

டிருந்தார்கள். அவர்கள் அதற்கு முன்னாள் இரவு அவ்விடத்துக்குச் சிறிது அப்பாலுள்ள பள்ளக் குடிசையில் ஒரு குடும்பமே கொலை செய்யப்பட்டுக் கிடந்ததைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர். ஆனால் ஒருவராவது அது ராட்சஸ குப்பனுடைய வேலையாயிருக்கலாமென்று கூட நினைக்கவில்லை. அவன் அங்கே சில நாட்கள் வரை ஒளித்துக்கொண்டிருந்தான் என்பதுகூட அவர்களுக்குத் தெரியாதாகையால் அவன் அவ்வாறு செய்திருப்பானென்று நினைக்க வேண்டிய சந்தர்ப்பம் அவர்களுக்கு ஏற்படவில்லை. இந்திராபாய் முதவில் இப்பேச்சைக் கேட்டது அப்போதுதான். ஏனெனின் அன்று காலை முதல் மாலை வரையில் அவள் பல வேலைகளில் கவனம் செலுத்தியிருந்தபடியாலும், இத்தகைய சமாசாரங்கள் கிடைக்கும் வம்புப் பேச்சுகளுக்குப் போகாததாலும் அவள் அதை அறிய முடியவில்லை. கோபாலன் தம்பதிகள் வீட்டில் மூடர்கள் இதைப் பேசிக்கொண்டது அவள்காதில் கேட்டதும் அவள் ஆச்சர்யத்துடனும் ஆவலுடனும் அதை விசாரிக்கும் பொருட்டு கோபாலனிடம் என்ன சமாசாரமென்று விசாரித்தாள்.

அவன் அவளை மாடிமீதுள்ள பிரத்யேக அறைக்குச் செல்லும்படி சொல்லிவிட்டுத் தானும் அவளது பின்னலேயே சென்றான். அப்பிரத்யேக அறையில் அவர்கள் இருவர்மட்டுமே இருந்ததால் இந்திராபாய் கோபாலனைப்பார்த்து 'இப்போது நான் கீழ்க்கட்டில் கேள்விப்பட்டது உண்மை தானா?' என்று கேட்க, அவன், 'மாதே! இதைக் கேட்டுப் பீதியடையவேண்டாம். நமது ராட்சஸ குப்பன்தான் அக்காரியத்தைச் செய்திருக்க வேண்டும். அந்த சந்தர்ப்பத்தில் அவன்தானே அங்கு இருந்தான். குப்பனுக்குக் கொலைசெய்வதென்பது ஒரு சாதாரண காரியமே' என்றான். இதைக்

கேட்டதும் இந்திராபாய், 'ஐயோ! கடவுளே என்று வாயால் அலறி அப்படியே ஒரு ஆசனத்தில் சாய்ந்தாள். அப்படிப் பட்ட ஒரு மகா பாவியுடனும் தான் சம்பந்தப்பட்டுப் பல வேலைகளைச் செய்ததற்காகத் தன்னைத்தானே நொந்துகொண் டாள். அப்போது அவள் மூர்ச்சையாய்விடுகிறுளோ என்று பயந்த கோபாலன், 'அன்புள்ளமாதே! உனக்கு என்ன நேர்ந் தது? மயக்கம் வருகிறதா? ஏதேனும் மதுபானவகை கொண் டுவாட்டுமா?' என்றுகேட்டான். அப்போது அவள், 'அதெல் லாம் ஒன்றும் வேண்டாம், நீ அமைதியுடன் இரு. இச்செய் தியைக் கேட்கும்போதே எனக்கு அதிக கஷ்டமாக இருக் கிறது. இது மகா கொடிய காரியமல்லவா? அவனைத் தங்க இடங்கொடுத்த அத்தம்பதிகளைக் குழந்தையுடன் சேர்த்துக் கொலை செய்வது நீதியா? எனக்கென்னமோ ஆத்திரமாகத் தான் இருக்கிறது' என்றுள். அப்போது கோபாலன், 'இதி லென்ன ஆச்சர்யமிருக்கிறது. ராட்சஸ குப்பன் இக்காரியங் களையெல்லாம் எளிதில் செய்கிறவன் தானே. அவன் வாலி பனுயிருக்கும்போதே ஒரு மனிதன் மாமிசத்தையே தின்று விடவில்லையா' என்றுன்.

அதற்கு இந்திராபாய், 'நானும் அப்படித்தான் கேள்விப் பட்டேன். ஆயினும் அது பெருமைக்காகச் சொல்லிக்கொள் ளப்பட்ட விஷயமாயிருக்குமென்று நினைத்தேன். இப்போது இதைக் கேட்கும்போது எனக்கு அருவருப்பாகவும், கவலை யாகவும்தான் இருக்கிறது. நான் அவனை வெறுக்கிறேன். ஆயினும் இதையெல்லாம் நீ அவனிடம் சொல்லவேண்டாம்' என்றுள். கோபாலனும், 'நான் அப்படியெல்லாம் ஒருவர் சமாசாரத்தை மற்றவரிடம் சொல்பவன் அல்ல, மேலும்இனி அவன் இங்கு வருவதே சந்தேகம். இச்செய்தியைக் கேட்ட தால் மிகவும் களைத்துப்போ யிருக்கிறுயே. ஏதேனும் மது

பானவகை வேண்டுமா?' என்று கேட்டான். அதற்கு அவள் 'எனக்கு ஒன்றும் வேண்டியதில்லை. நகன் மதுபானம் அருந்துவதில்லையென்பது உனக்குத் தெரியாதா?' என்று சொல்லவும் கோபாலன், 'ஆம்; உன்னிடம் எந்தத்தவறுன நடத்தையும் இல்லை என்பது எனக்குத் தெரியும்,' என்றதும் அவள் வெளியே போய்விடுபவள்போல் வாயிற்படிவரை சென்றுள். இதற்குள் தான் வந்த வேலையின் ஞாபகம் வந்தது. ஆகவே அவள் மறுபடியும் தான் முன்பு இருந்த இடத்துக்குவந்து, 'நண்பனே! நான் முக்கியமாய் வந்த வேலையை மறந்து விட்டேனே. நீ தயவு செய்து இங்கு வந்துகொண்டிருந்த முனியன் என்பவன் இப்போது எங்கு இருக்கிறுன் என்பதைத் தெரியப்படுத்துவாயா?' என்று கேட்டாள். அதற்கு அவன், 'ஓ, நமது முனியனு? அவன் முன்பு பிரேதங்களை இழுத்துக் கொண்டுவந்து டாக்டர்கள் முதலிய ரசாயன சாஸ்திரிகளுக்குக் கொடுத்துப் பணம் பெற்று வந்தான். இப்போது அவன் நமது நகருக்கு அப்பாலுள்ள சேம்பாக்கத்தில் மிருகங்களை வெட்டி மாமிசத்தைப் பக்குவப்படுத்தி மிலிடேரி ஓட்டல்களுக்கும் கசாப்புக் கடைகளுக்கும் கொடுக்கும் பெரிய மாமிச பக்குவ சாலையை வைத்திருக்கிறுன். அவனிடமும் சில ஆட்கள் வேலைசெய்கிறுர்கள். இப்போதும் அந்தச்சாலையிலேயே இருப்பான்' என்றுன்.

உடனே இந்திராபாய் இரவு பத்துமணியாயிற்றே, அந்த இடத்துக்கு எப்படிச் செல்வது என்று சிறிதும் அஞ்சாமல் எப்படியாவது தான் மேற்கொண்ட காரியத்தை முடிக்க வேண்டுமென்னும் எண்ணத்துடன் 'மெய் வருத்தம் பாரார், பசி நோக்கார், கண் துஞ்சார்........கருமமே கண்ணுயினுர்' என்பதுபோல அவள் அப்போதே அங்குச் செல்வதென்று

தீர்மானித்துத் தான் தனது குதிரையின்மீது இரத்தினபுரி நகரத்தின் வழியே செல்வது சரியல்லவென்று கருதித்தான் திரும்பி வரும்வரை தனது குதிரை அங்கேயே இருக்கட்டுமென்று சொல்லி விட்டுப் புறப்பட்டாள். அவள் நடுக் குப்பத்தைத் தாண்டியதும் அங்கு வண்டிகள் நிற்குமிடத்தில் இருந்த ஒரு குதிரை வண்டியை அமர்த்திக்கொண்டு தான் அணிந்திருந்த ஆண்வேடத்துடனேயே சேம்பாக்கம் சென்ருள். அதுவும் ஒரு குப்பம்தான். ஆகவே ரஸ்தாவிலேயே வண்டியை விட்டிறங்கித் தான் சிலநிமிஷங்களுக்குள் திரும்பி வருவதாகவும் வண்டி அங்கேயே இருக்க வேண்டுமென்றும் சொல்லிவிட்டு அக்குப்பத்தில் புகுந்தாள்.

சேம்பாக்கமென்னும் அக்குப்பம் தாழ்ந்த ஜாதியினரும், கூலி வேலைக்காரர்களும், படிப்பில்லாத காரணத்தினுலும் தரித்திரத்தாலும் கொலை களவு முதலிய எப்படிப்பட்ட காரியங்களையும் செய்பவர்களும் வசிக்கும் பிரதேசம் அங்குள்ள இரண்டொரு வீதிகளைத் தாண்டித்தான் முனியனுடைய மாமிச பக்குவ சாலைக்குச் செல்ல வேண்டும். ஆனுல் அவ் வீதிகளில் சுத்தமானவர்கள் காலடியும் வைக்க முடியாது. அவை அவ்வளவு ஆபாசமாக இருக்கும். எங்கு பார்த்தாலும் சிறுவர்கள் கழித்த மலங்களும், குப்பை கூளங்களும், ஜனங்கள் உபயோகித்த பின் எறிந்துவிட்ட மாமிசத் துண்டு, எலும்புகள் முதலியனவும் வழி நெடுகக் கிடக்கும். துர் நாற்றம் சொல்லி முடியாது. மூக்கைக் கையால் மூடிப் பிடித்துக்கொண்டுதான் அவ்வழியே செல்ல வேண்டும். அங்கு வீசும் துர்க்கந்தம் அவ்வழியாகச் செல்பவர் ஆடைகள் மீதும் படிந்து விடுமோ என்று அஞ்ச வேண்டியது தான். நாகரிகம் முதிர்ந்ததெனப் பிரமாதமாகச் சொல்லப்

படும் இக்காலத்திலும், ஒரு ராஜ்யத்துக்கே தலை நகராக விளங்கும் ஒரு பட்டணத்தின் ஒரு பாகம் இவ்வாறு ஆபாசமாக இருக்கிறதென்றால் அதற்காக வருத்தப்படாமல் இருக்க முடியவில்லை. இதற்குச் சமூக அரசியல் அமைப்புகளே காரணமாகும். படித்தவர்களும் பணக்காரர்களும் மட்டும் சௌக்கியமாகக் காலங்கழிக்கவும், இதரர்கள் காலமெல்லாம் உழைத்தும் அசுத்தத்திலும், கஷ்டத்திலும், பசியிலும் உழல வேண்டியதான நிலைமையைத்தான் இப்போதுள்ள அமைப்பு ஏற்படுத்தியிருக்கிறது. ஒரு சில படித்தவர்களும் பணக்காரர்களுமாவது தங்கள் கடமையை உணர்ந்து சமூக சேவை செய்ய முன் வருவார்களானால் ; இந்த சேம்பாக்கம் போன்ற குப்பங்கள் இவ்வளவு ஆபாசமாகவும் அதில் வசிக்கும் ஜனங்கள் இவ்வளவு கஷ்டப்படுகிறவர்களாயும் இருக்க மாட்டார்கள் என்பது நிச்சயம்.

நமது இந்திராபாய் ஆண்வேடத்துடன் அவ்வீதிகளின் வழியே செல்லும்போது துர்க்கந்தம் பொறுக்க முடியாமல் கஷ்டப்பட்டாள் என்றாலும் தன் காரியத்திலேயே கண்ணாயிருப்பவனாதலால் ஒருவாறு அதைச் சமாளித்துக்கொண்டு அவ்வீதிகளைக் கடந்து முனியனுடைய சாலையை அடைந்தாள். அதன் வெளிப்புறத்திலேயே சில குதிரைகள் கட்டப்பட்டிருந்தன. அவைகள் மாமிசத்தை ஏற்றிக்கொண்டு போகவும் வரவும் உபயோகிக்க முதலாளியால் வாங்கப் பட்டவை. அவற்றின் உடலில் உயிர்மட்டும் ஓட்டிக்கொண்டிருந்ததே தவிர அவை புஷ்டியாக இருக்கவில்லை. அவள் அக்கட்டடத்தின் முதல் கட்டில் நுழைந்ததும் அங்கு சிலர் மிருகங்களின் மாமிசத்தை ஒரு புறமும், தோலை வேறொரு புறமுமாகப் போட்டுக் கொண்டிருந்தனர். துர்நாற்றம் பொறுக்க முடியவில்லை. அதைக் கண்டதும்

இந்திராபாய் வெறுப்பும் திக்பிரமையும் அடைந்து வெளியே போய் விடலாமா என்றும் நினைத்தாள். ஆயினும் தான் வந்த வேலை ஆகவேண்டுமே என்னும் எண்ணத்துடன் அங்குள்ள வேலைக்காரர்களைப் பார்த்து, 'ஐயா, உங்கள் முதலாளி எங்கே இருக்கிறார்' என்று கேட்டாள். அவர்கள் இவளைப் பார்த்ததும் இவ்வளவு அழகும் சுத்தமும் உள்ள ஒரு மனிதன் அங்கு எப்படி,' எதற்காக வந்தான் என்று நினைத்தார்கள். ஆயினும் அவர்கள் நன்ருக உற்றுப் பார்த்த போது யாரோ ஒரு பெண் அவ்வாறு ஆண் வேடத்துடன் வந்திருக்க வேண்டுமென்றும் சந்தேகித்தார்கள். ஆயினும் அதை எப்படிக் கேட்பது? ஆகவே அவர்கள், 'நீங்கள் அம்மாவோ அல்லது ஐயாவோ தெரியவில்லை. எப்படியாயினும் சரி, எங்கள் எஜமானர் இதே கட்டடத்தின் இரண்டாவது கட்டில் இருக்கிருர். கதவு வெறுமனே மூடியிருக்கிறது. நீங்கள் அவருக்கு முன்பின் தெரிந்தவராயிருக்கும் பட்சத்தில் அக் கதவைத் திறந்துகொண்டு போகலாம்' என்று வேடிக்கையாகச் சொன்னுர்கள்.

இந்திராபாயும் சிறிதும் சளைத்து விடாமல் இரண்டாம் கட்டின் கதவைத் திறந்துகொண்டு உள்ளே போனுள். அங்கு முனியனைத் தவிர வேறு யாரும் இருக்கவில்லை. அவன் எழுபது வயதுக்கு மேற்பட்ட கிழவன். ஆயினும் தக்க பலமும் உற்சாகமும் உடையவன். அவன் தான் இருந்த இடத்துக்கு வந்த ஆள் யாரென்று விசாரித்தான். இந்திராபாய் சிரித்துக்கொண்டே அவனருகில் போய் நின்ருள். பார்த்ததும், 'ஓ, இந்திராபாயா! நடுக்குப்பத்துக்கு வந்துகொண்டிருந்த மாதுதானே! வழக்கப்படி ஆண்வேடத்துடன் வந் திருக்கிறது போலத் தெரிகிறது. எது இவ்வளவு தூரம்; அதுவும் இந்நேரத்தில். என் வேலையைப் பார்த்தாயா!

மாமிசங்களைப் பக்குவப் படுத்திக்கொண் டிருக்கிறேன். நமது நகரிலுள்ள பிரபல மிலிட்டேரி ஓட்டல்களுக்கும் கசாப்புக்கடைகளுக்கும், பணக்காரர் வீடுகளுக்கும் நானே சப்ளை செய்கிறேன். இது மிக ருசியாக யிருக்கும்' என்று இன்னும் ஏதோ பேசப்போனன். அப்போது இந்திரா பாய் குறுக்கிட்டு, 'நண்பனே! நீ என்னைத் தெரிந்து கொண்டதற்காக மிகவும் சந்தோஷப்படுகிறேன். இப்போது அதிக நேரம் இங்கிருந்து உன்னுடன் பேசிக்கொண்டிருக்க என்னல் முடியவில்லை. ஆனல் நான் ஒரு அவசர காரியமாக உன்னிடம் வந்திருக்கிறேன். நீ கை கால்களைச் சுத்தம் செய்து கொண்டு எங்கேனும் தனி இடத்துக்குச் சிறிது நேரம் வருவாயா?' என்று கேட்டாள்.

உடனே அவனும், 'ஆஹா! அதற்கென்ன சந்தேகம். நீ எவ்வளவு உதார குண முடையவள் என்பதும், நல்லவள் என்பதும் எனக்குத் தெரியாதா? நீ கூப்பிட்டும் நான் மறுப்பேனே? உன் வேலை எப்படிப்பட்டதாயினும் அதைக் கட்டாயம் முடித்துக் கொடுப்பேன். இந்த குப்பத்துக்கு அப்பால் நகருக்குச் செல்லும் ரஸ்தாவில் ஒரு ஓட்டல் இருக்கிறது. அது இராக்காலங்களிலும் திறந்திருக்கும். அங்கு தான் நான் அடிக்கடி செல்வது வழக்கம். நீ உடனே அங்கு போய்த் தனியாக ஒரு அறை நமக்கென அமர்த்திக் கொண்டு எனக்காக ஒரு புட்டி மதுபான வகையும் வாங்கி வை. பத்து நிமிஷத்திற்குள் வந்து விடுகிறேன்! என்றான். அதைக்கேட்டுச் சந்தோஷமடைந்த அவள் அவனுக்கு வந்தனம் செலுத்திவிட்டு வந்த வழியே போய் ரஸ்தாவில் விட்டிருந்த தன் வண்டிக்குச் சென்று அதில் ஏறிக்கொண்டு அங்கிருந்து சுமார் கால் மைல் தூரத்திலுள்ள ஓட்டலுக்குப்போனாள். வண்டி வெளியில் காத்திருக்

தது. அவள் உள்ளே போய் அந்த ஓட்டல் சொந்தக்காரனை விசாரித்து ஒரு தனியறை தனக்கென சொற்ப நேரத்துக்கு அமர்த்திக்கொண்டு அவனிடமே ஒரு புட்டி மதுபான வகையையும் வாங்கிக்கொண்டு முனியனுக்காகக் காத்திருந்தாள். அவள் எதிர்பார்த்தபடியே பத்து நிமிஷங்களுக்குள் முனியன் வந்து சேர்ந்தான். அவன் அப்போது நேர்த்தியான உடைகளை அணிந்துகொண்டும் சுத்தமாகவும் மிகவும் யோக்கியன் போலவும் காணப்பட்டான்.

உடனே இந்திராபாய் காலத்தை வீணுக்க இஷ்டப்படாமல், 'முனியா! இதோ மேஜைமீது பத்து பவுன் வைத்திருக்கிறேன். நான் கேட்கும் விஷயங்களை நீ சொல்லிவிட்டால் இதை நீயே எடுத்துக்கொள்ளலாம்' என்ருள். பணமென்ருல் பிணமும் வாயைத் திறக்குமல்லவா? பளபளவென மின்னும் அத்தொகையை எடுத்துக்கொள்ள வேண்டுமென்னும் ஆவலால் முனியன், 'அம்மா! நீ கேட்டபிறகும் நான் எதையும் சொல்லாம லிருப்பேஞ? நீ விரும்பும் சமாசாரம்தான் யாது?' என்று கேட்டான். உடனே அவள் அவனது முகத்தை உற்று நோக்கியவண்ணம், 'பதிஞறு வருஷங்களுக்கு முன் ஒரு கனவான் உன்னிடம் வந்து சுமார் பன்னிரண்டு வயதான வாலிபன் ஒருவனுடைய பிரேதம் கேட்டதுண்டா? நீயும் கொடுத்தாயல்லவா? அதுவிஷயமாக உனக்குத்தெரிந்த எல்லாவற்றையும் சொல்லவேண்டும்;' என்ருள். இதைக் கேட்ட முனியன், 'ஓ' அந்த சங்கதியா! அதைச் சொல்வதால் நான் எவ்வித கஷ்டத்திலும் அகப்பட்டுக் கொள்ளமாட்டேன் என்பதற்கு என்ன உறுதி இருக்கிறது?' என்று கேட்டான்.

அதற்கு இந்திராபாய், 'நீ இதைச் சொல்லாவிட்டால் தான் கஷ்டத்தில் அகப்பட்டுக் கொள்வாய். ஏனென்ருல்

நான் இது சம்பந்தமான எல்லா சமாசாரங்களையும் தெரிந்து கொண்டிருக்கிறேன். அரசாங்கச் சட்ட உதவியை நாடினல் எல்லாச் சங்கதிகளும் தானுக வெளிப்பட்டுவிடும். ஆனல் இதைப் பகிரங்கத்துக்குக் கொண்டு வாராமல் யார் குற்றவாளியோ அவனிடம் அவன் சங்கதியெல்லாம் இன்னின்னவர் மூலமாக வெளிப்பட்டுவிட்டதாகச் சொல்லி அவன் அநியாயமாய் அபகரித்துக்கொண்ட சொத்து சுதந்தரங்களையும் பட்டத்தையும் உரியவருக்கே கொடுத்துவிடும்படி செய்யவேண்டுமென்பதுதான். ஆதலால் பயப்படாமல் தாராளமாகச் சொல்' என்ருள். அப்போது முனியன், 'சரி, விஷயம்தெரிந்துவிட்டது. அப்பிரபு பயந்து விடுவார் என்பது நிச்சயம். ஆயினும் இப்படிப்பட்ட இரகசியத்தைப் பல சங்கடங்களினிடையிலும் சொல்வதற்குப் பத்து பவுன்தானு' என்று கேட்டான். பணத்தைத் தாராளமாகக் கொடுத்தால்தான் அவன் தைரியமாக எல்லாவற்றையும் சொல்வான் எனத் தெரிந்துகொண்ட இந்திராபாய், 'இந்தா வைத்துக்கொள். இன்னும் பத்து பவுன். அதுமட்டுமா? என்காரியம் சித்தியாகி உண்மையில் யார் பட்டத்தையும் சொத்துக்களையும் அடைய வேண்டுமோ அவர் அடைந்ததும் உனக்கு இன்னும் முப்பதுபவுன் கொடுப்பேன். சந்தேகமாக இருந்தால் வேண்டுமாயின் எழுதிக்கொடுக்கிறேன்,' என்றதும் அவன், 'வேண்டாம். நீயுமா எழுதிக்கொடுப்பது? உன் வார்த்தையில் எனக்கு நம்பிக்கை இல்லையா! உனக்கும் வேளையாகிவிட்டதுபோ லிருக்கிறது. இனிக் காலப்போக்கு செய்யாமல் விஷயத்தைச் சொல்லி முடிக்கிறேன்' என்று சொல்லிப் பின்வருமாறு கூறினன்:—

"நீ கூறியதுபோலவே சுமார் பதினறு வருஷங்களுக்கு முன் ஒரு கனவான் என்னிடம் வந்து அவனுக்கு நான் ஒரு உதவி செய்யவேண்டுமென்றும் அதற்கு அவன் தக்கபடி

பணம் கொடுப்பதாகவும் கூறினன். என்னைப்பற்றி அவ னுக்கு எப்படித் தெரியுமென்று கேட்டேன். அவன் தான் டாக்டரைப்போல் வேஷம் போட்டுக்கொண்டு நான் அப் போது வசித்து வந்த இடத்தைச் சுற்றிலுமுள்ள பலரிடம் பிரேதத்தைச் சேகரித்துக் கொடுப்பவன் யாரேனும் இருக்கி ருனு என்று விசாரித்ததாகவும் அவர்களெல்லாம் என் பெய ரைச் சொன்னதாகவும் சொன்னன். பிறகு அவன் தனக்கு சுமார் 12-வயதுள்ள வாலிபனின் பிரேதம் தேவை என்றும் அப்பிரேதம் குறிப்பிட்ட உயரமுள்ளதாயும், கரிய மயிரையு டையதாயும் இருக்கவேண்டுமென்றும் சொன்னன். அவ் வாறெல்லாம் அவன் விரும்புகிறபடி அகப்படுவதென்றால் மிகக் கஷ்டமாய் இருக்குமென்றும், ஆதலால் பெருந்தொகை கொடுக்க வேண்டுமென்றும் நான் சொன்னேன். அவனும் இருநூறு பவுன் கொடுக்க ஒப்புக்கொண்டு அப்போதே அட் வான்சாக இருபதுபவுனும் கொடுத்தான். மேலும் நான் இத னல் அதிக கஷ்டத்தில் அகப்பட்டுக்கொள்ள நேருமோ என் னும் எண்ணத்துடன் அவனுக்கு அப்பிரேதம் எதற்காக என்று கேட்டேன். அவன் தன் குடும்ப விஷயத்தில் ஏதோ மோசம் செய்யப் போவதாயும், 12 வயதுடைய பையன் ஒரு வனை மறைக்கவேண்டியிருப்பதாயும், அப்பையனைக் கொல் லத் துணியாவிட்டாலும் பைத்தியக்கார ஆஸ்பத்திரியைப் போன்ற ஒரு விடுதியில் போட்டு அடைத்துவிட்டு அவன் இறந்துபோனதாகப் பகிரங்கப்படுத்தி நான் கொடுக்கும் பிரே தத்தை அவனது பிரேதமெனச் சொல்லி அடக்கம் செய்து விடப் போவதாகவும் சொன்னன். அவன் தன் பெயர் தர்ம லிங்கம் என்றும் இரத்தினபுரிக்குச் சற்று அப்பாலுள்ள பிர தேசத்தில் வசிப்பதாகவும் சொல்லி அந்த இடத்தைக் குறிப் பாகத் தெரிவித்தான். நான் பத்து நாட்கள் வரை கஷ்டப் பட்டு அங்குமிங்கும் தேடியலைந்து கடைசியில் ஒரு ஆஸ்பத்

திரியில் வியாதியால் இறந்துபோன நான் எதிர்பார்த்த வய தும் உயரமும் உடைய வாலிபனின் பிரேதத்தை ஒருநாள் இரவு பதினொரு மணிக்குமேல் அங்கிருந்து அப்புறப் படுத்தி வைத்து சற்று நேரத்துக்கெல்லாம் தர்மலிங்கம் குறிப்பிட்ட சிறு மாடி வீட்டுக்கு ஒரு வண்டியில் போட்டுக்கொண்டு போனேன். நானும் ஒரு சேவகனுமாகச் சேர்ந்து அப்பிரே தத்தை அவ்வீட்டின் உட்புற அறையில் கொண்டு போய்ப் போட்டோம். உடனே அவன் எனக்குச் சேரவேண்டிய தொகையைக் கொடுத்து விட்டான்; இவ்வளவுதான் எனக் குத் தெரியும்.

இதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த இந்திராபாய் 'சந்தோஷம். நீ இவ்வளவு சொன்னதற்காக இப்போது. இந்த இருபது பவுனை எடுத்துக்கொள், என் காரியம் முடிந்த பின்னர் நான் வாக்களித்தபடி முப்பது பவுனைத் தரு கிறேன். சந்தேகப்பட வேண்டாம்!' என்று சொன்னாள். உடனே அவன் அதை யெடுத்துத் தன் பையில் போட்டுக் கொண்டு அவளுக்கு வந்தனம் செலுத்தி விட்டுப் போய் விட்டான். அவளும் அந்த ஒட்டலை விட்டு புறப்பட்டுத் தான் அமர்த்திக் கொண்டு வந்த வண்டியிலேயே மீண்டும் நடுக்குப்பம் வந்து வண்டிக்காரனை அனுப்பி விட்டுக் கோபா லன் தம்பதிகள் கட்டடத்துக்குச் சென்று தன் குதிரையை அது வரை பார்த்துக்கொண்டதற்காகக் கோபாலனுக்கு வந்தனம் செலுத்திவிட்டுத் தன் குதிரைமீது ஏறிக்கொண்டு இரவு பன்னிரண்டு மணி சுமாருக்குத் தன் வீட்டை யடைந் தாள். அவள் குதிரைமீதிருந்து இறங்கியதும் அவ் வீட்டின் முன்கதவு அவசரமாகத் திறக்கப்பட்டது. அவளது சகோதரனாகிய மோகனசுந்தரம் அவசரமாக வெளியே ஓடி வந்தான். தன் சகோதரி ஆண்வேடம் தரித்திருப்பதையும்

குதிரைமீது சவாரி செய்ததையும் பார்த்தான். அன்று பகலில் ஹேமவதி சீமாட்டி அவனுடைய சகோதரி கொள்ளைக்காரி என்று சொன்னது சரியாக இருக்கும்போலத் தோன்றியது. ஆகவே மதிமயங்கிப் பீதியால் ஓ வென்று அலறினான். அப்படியே மூர்ச்சையாய் விழுந்து விட்டான்.

52-வது அத்தியாயம்

—:(0):—

பிரதிக்ஞை வாங்க ஏற்பாடு

இந்திராபாய் முன் அத்தியாயத்தில் கூறியபடி பல நூதன விஷயங்களையும் கண்டுபிடித்த அதே தினத்தின் பகலில் ஹேமவதி சீமாட்டியின் இளைய குமாரி கற்பகம் தன்னுடைய அறையில் ஒரு சோபாவில் உட்கார்ந்துகொண் டிருந்தாள். அப்போது அவள் தனியாகவே இருந்தாள். சங்கீத புஸ்தகங்களும் கருவிகளும் அவளைச் சுற்றிக் கிடந்தன. அவள் சங்கீதக் கருவியில் சங்கீதத்தைப் பாடிக்கொண் டிருந்தா ளென்றாலும், அப்பாட்டுகளெல்லாம் அவளைப் போன்ற தக்க பிராயமடைந்த பெண்களின் மனதில் எந்த எண்ணம் உதயமாயிருக்குமோ அப்படிப்பட்ட எண்ணமாகிய காதல் நிறைந்ததாக இருந்தன. அதிலும் அவளுடைய காதலனை துளசிங்கம் பிரபுவுக்கு அதிகம் எவை பிடிக்குமோ அவைகளையே பாடிக்கொண் டிருந்தாள். திடீரென்று அவள் தன் பாட்டை நிறுத்திவிட்டுக் கையில் ஒருசங்கீத புஸ்தகத்தைப் பிடித்தவண்ணம் தன் மனதில் குடிகொண்டுள்ள அந்தப் புருஷனைப் பற்றியே சிந்திக்க ஆரம்பித்தாள். அப்போது அவள் மனதில் காதல் நினைப்பு

தோன்றியிருந்ததால் அவளது முகம் பிரகாசமாக விளங்கிற்று. உண்மையிலேயே கற்பகம் தன் மூத்த சகோதரியைப் போலவோ அல்லது தாயாரைப்போலவோ அதிக கர்வமும் அகங்காரமும், நாகரிகப் பித்தமும் கொண்டவள் அல்ல என்பதும், கூடியவரை அடக்கத்துடனும் ஒழுங்காகவும் நடந்துகொள்பவள் என்பதும் முன்னரே கூறப்பட்டிருக்கிறது. ஆனால் அவளைச் சுற்றியிருக்கும் சமய சந்தர்ப்பங்களெல்லாம் அவளைத் தவறான வழியில் தூண்டக் கூடியதாகவே இருந்தன. எப்படிப்பட்ட மனோ உறுதி வாய்ந்தவர்களும் சமய சந்தர்ப்பங்களால் நிலை தவறுவது சகஜம்.

அதுபோலவே கற்பகம் அப்போது தன் மனதில் தன் காதலனான துளசிங்கம் பிரபுவைப் பற்றியே நினைத்தாள். அவனுக்கு ஒரு நல்ல உத்தியோகம் கிடைத்து அவளைக் காப்பாற்றக்கூடிய அந்தஸ்து கிடைத்ததும் அவனுடன் ஓடிப்போயாவது, பொதுஜனங்களின் அபிப்பிராயத்தையும் மதியாமல் கலியாணம் செய்துகொண்டு விடுவது என்று அவனுக்கு அளித்திருந்த வாக்கு அவள் ஞாபகத்துக்கு வந்தது. அதனால் அவள் எப்படி அவனுடன் போய்விடுவது என்பது பற்றிப் பயப்படவில்லை. அவள் மனதில் பல எண்ணங்கள் தோன்றி அவளுக்கு உற்சாகத்தைக் கொடுத்தன. அன்றொரு நாள் தன் தாயுடன் செல்வநாதர் பேசிக்கொண்டிருந்தபோது அவள் தன் சகோதரியுடன் மறைவிலிருந்து கேட்டதிலிருந்து தன் தாயார் மோகனதாஸிடம் காதல் கொண்டு அவனைக் கலியாணம் செய்துகொள்ள முடியாதென்பதற்காக அவனது கள்ளக் காதலியாகவாவது இருப்பதென்று நிச்சயம்செய்தது அவளுக்குத்தெரியுமல்லவா? அவள் அப்படி யிருக்கத் தன் மூத்த சகோதரி ராஜேஸ்வரி கேவலம் வேலைக்காரனான மோகன சுந்தரத்தினிடம் மையல் கொண்டு

அவனைக்கலியாணம் செய்துகொள்ள முடியாதென்பதற்காக வும் மோகத்தை யடக்க முடியாமலும் அவனைக் கள்ளக் காதலனாக ஏற்று அவளுடைய அங்கத்தையே அவனுக்கு ஒப்படைத்து விட்டதும் அவளுக்குத் தெரிந்ததுதானே? இவர்கள் இவ்வாறு செய்யும்போது தான் மனமாரக் காத லிக்கும் ஒரு பிரபுவினுடன் ஓடிப்போய் அவனை மணந்து இன்புற்று வாழ்வது தவறு என்று அவள் புத்திக்குப் படுமா? ஆதலின் துளசிங்கம் பிரபு எப்போது நற்காலம் ஏற் பட்டுவிட்டதென்று தெரியப்படுத்துவானோ என்று ஆவ லுடன் எதிர் பார்த்து அதைப்பற்றியே சிந்தித்துக் கொண் டிருந்ததில் ஆச்சர்யமொன்று மில்லை.

கற்பகம் சோபாவில் சாய்ந்தவண்ணம் அவ்வாறு சிந்தித் துக்கொண்டிருந்த போது அவ்வறையின் கதவுதிறக்கப்பட்டு அவளுடைய தாயார் ஹேமவதி சீமாட்டி அங்கே வந்தாள். உடனே கற்பகம் அகத்தினழகு முகத்தில் தெரியும் என்பது போல் தன் மனதில் சிந்தித்தவைகள் முகத் தோற்றத்தால் தாய்க்குத் தெரிந்துவிடுமோ என்று வெட்கமடைந்து ஒரு வாறு சமாளித்துக்கொண்டு தன் அருகில் சோபாவின் மீது தாயாரும் உட்காருவதற்காகச் சிறிது இடம் ஒதுக்கிக்கொடுத் தாள். தாயின் முகத்தைப் பார்த்ததும் அவள் ஏதோ கண் டிப்பாகப் பேசி முடிவு செய்ய வந்தவள்போல் காணப் பட் டது. ஹேமவதி சீமாட்டியும் காலப்போக்கு செய்யாமல் தன் மகளின்முகத்தை உற்று நோக்கிக்கொண்டே, ‘எனதன் புள்ள கற்பகம்! நான் திடீரென்று இந்நகரைவிட்டுக் கிருஷ்ண கிரி ஜமீனுக்குச் சென்று இரண்டொருமாதங்கள் அங்கேயே நமது சுந்தரவிலாச மாளிகையில் காலங்கழிப்பதென்று நிச்ச யித்திருக்கிறேன். நீயும் என்னுடன் வரத்தயாராக இருக்க வேண்டும்’ என்று தெரிவித்தாள். இதைக் கேட்டதும் ஆச்

சர்யமும் பிரமையும் அடைந்த கற்பகம், 'தாயே! எப்போது புறப்படப் போகிருய்?' என்று கேட்டாள். அதற்கவள், 'நாளைக்கு மறுநாள் புறப்படுவது நிச்சயம்,' என்று தெரிவித்தாள்.

அப்போது கற்பகம், 'தாயே! நீ இவ்வாறு முடிவு செய்தது அவசரப்பட்டு செய்துவிட்ட காரியமாகத் தோன்றவில்லையா?' என்று கேட்கத் தாயார், 'நீ கூறுகிறபடி அவசரப்பட்ட முடிவாகவும் இருக்கலாம். ஆயினும் எனக்கு இக்கர வாழ்க்கையில் அதிகவெறுப்பு ஏற்பட்டுவிட்டிருக்கிறது. உண்மையிலேயே சொல்லுகிறேன். எனக்குச் சந்தோஷமென்பது சிறிதும் கிடையாது. என்னை மீறி எனக்கு எதிராகச் சதிசெய்யும் மக்களையே நான் பெற்றிருக்கிறேன்' என்று இன்னும் ஏதோ சொல்வதற்குள் தாயின் முகத் தோற்றத்தையும், பேசும் தோரணையையும் கண்டு மனமிரங்கிய குமாரியாகிய அவள், 'தாயே! நீ இவ்வாறெல்லாம் பேசக் கூடாது. இப்போது நீ சொன்ன குற்றச் சாட்டில் என்னையும் சேர்த்திருப்பாய் என்று நான் நம்பவில்லை. உண்மையிலேயே நமது தினகரன் அவன் இருக்கவேண்டிய ஒழுங்கின்படி இல்லாமலிருப்பது விசனிக்கத்தக்கதே' என்றுள். அப்போது ஹேமவதிசீமாட்டி, 'அது ஏன் கேட்கிருய். அவனுடைய தவருன செயல்களால் சொல்ல முடியாத கஷ்டத்துக்கு நான் ஆளாய் இருக்கிறேன். அவன் எனக்குப் பலவிததீங்குகளையும் செய்ய ஆரம்பித்து விட்டான். இவ்வாறு ஒரு மகனின் குற்றத்தைப் பற்றி மகளிடம் சொல்லிக் கொள்வது சரியல்ல. கற்பகம்! நீ ராஜேஸ்வரியுடன் இரகசிய சங்கதிகளையெல்லாம் பேசுவது வழக்கமுண்டல்லவா?' என்று கேட்டாள்.

இவ்வாறு தாயார் திடீரென்று வேறுவிதமான கேள்வி கேட்டது பற்றித் திடுக்கிட்டுக் கற்பகம், 'தாயே! நீ கேட்

பதன் அர்த்தம் எனக்கு விளங்கவில்லையே' என்று கெஞ்சிக் கேட்டாள். அதற்குத் தாயார், 'ராஜேஸ்வரி சிறிதும் வெட்கமில்லாமல் தான் செய்த வெட்கக்கேடான காரியத்தை உன்னிடம் சொல்லிக் கொண்டதாகவும் தெரிகிறது. அவ்வாறு சொல்லிக்கொள்வது அவமானமல்லவா? இதை மறுக்கத் துணிய வேண்டாம். உன் முகத் தோற்றத்திலிருந்து உன் மனதிலுள்ளதை நான் தெரிந்துகொண்டு விடுவேன்' என்றாள். அப்போது கற்பகம் எவ்வித பதிலும் சொல்லாமல் தலையைச் சாய்த்துக்கொண்டே சிறிது நேரம் யோசனை செய்தாள். தன் சகோதரியின் இரகசியத்தை அறிந்துகொண் டிருப்பதும் வெட்கக் கேடான காரியமே என்று உணர்ந்தாள். தனக்கும் ஒரு இரகசியக் காதல் சமாசாரம் இருப்பதினால் தானே சகோதரியின் இரகசியத்துக்கு உடந்தையாய் இருக்க நேரிட்டது என்று எண்ணினாள். இதையெல்லாம் தாயாரும் சிந்தித்திருப்பாள் அல்லவா என்றும் யோசித்தாள்.

அப்போது ஹேமவதி சிமோட்டி, 'கற்பகம்! என்ன யோசிக்கிறாய். உன்னுடன் நான் சில முக்கிய விஷயங்களைக் கண்டிப்பான முறையில் பேசவேண்டியிருக்கிறது. தினகாஹும் ராஜேஸ்வரியும் என்னை எதிர்த்து வருகிறார்கள். நீயாவது என்னுடைய அடக்கமும் ஒடுக்கமும் வாய்ந்த குமாரியாக இருக்கிறாயா இல்லையா என்பதைச் சொல்லி விடு. நான் இன்னமும் சொற்ப ஆறுதலுடனாவது இருக்க முடியுமா? இல்லையா என்பதை முடிவு செய்து விடுகிறேன்,' என்று பரபரப்புடன் கேட்டதால் கற்பகம் தன் தாயின் கையை பிடித்துக்கொண்டு,' அன்புள்ள தாயே! தினகரனையும் ராஜேஸ்வரியையும் கூட அவ்வளவு கேவலமாகத் தள்ளிவிட வேண்டாம். அவர்கள் விஷயத்திலும் சிறிது தாராளமாக

நடந்து கொள்' என்று இன்னும் ஏதோ சொல்ல முயன்ற போது தாயார் குறுக்கிட்டு, 'இப்போது நான் உன்னைப் பற்றிப் பேசுகிறேனே யொழிய அவர்களைப் பற்றிப் பேச வில்லை. நீ அவர்களைப் பற்றிப் பேசுவதில் காலங் கழிக்க வேண்டாம். உன்னைப்பற்றி நான் என்ன நினைப்பது என் பதை மட்டுமே சொல். கடமையை உணர்ந்து எனக்கு அடங்கி நடப்பவள் என்று கருதுவதா அல்லது என்னை எதிர்த்துப் போராடப்போகும் அடங்காப்பிடாரி என நினைப் பதா என்பதைச் சொல்லிவிடு. எனக்கு ஆறுதல் அளிக்கப் போகிறாயா? அல்லது எரிகிற தீயில் நெய்யை ஊற்றப் போகிறாயா? என்பது தெரிந்து விடட்டும்' என்று கேட் கேட்டாள். அவள் கேட்கும் தோரணையில் பரிதாபங் கொண்டு கற்பகம், 'தாயே! என்னை இப்படி யெல்லாம் கேட் கலாமா? நீ எப்போதும் சந்தோஷமாக இருக்கவேண்டுமென் பதைத்தான் நான் விரும்புவேன் என்பது நிச்சயம்' என்று சமாதானம் கூறினாள்.

அதனால் சந்தோஷமடைந்த ஹேமவதி சீமாட்டி தன் குமாரியின் கன்னத்தில் ஒரு முத்தம் கொடுத்து, 'அப்படியா னால் நீ எனக்கு அடங்கி நடக்கும் ஒரு சற்புத்திரியே என்று கொண்டு சந்தோஷமடைகிறேன். ஆனால் உன்னுடைய இந்த உறுதி மொழியை இப்போதே சோதனையில் விடப் பார்க்கி றேன். என் முகத்தைப் பார்த்து உண்மையை ஒளிக்காமல் பேசு. கடவுள் முன்னிலையில்நின்று அவருக்குப்பதில் அளிப் பதுபோல் நினைத்துக்கொண்டு சத்தியத்தைச் சொல். நீயா வது நான் ஆசைப்படுவதுபோல் சுத்தமாகவும் கற்புடையவ ளாயும் கபடமற்றவளாயும் இருக்கிறாயா? அல்லது காதலுக்கு இரையாகி உன் கற்பை அழித்துவிட்டாயா?' என்று கேட் டாள். இக்கேள்வியைக் கேட்டதும் கற்பகம் திடுக்கிட்டுப்

போனுளென்றாலும் அவமானப்படாமல், தைரியத்துடன் 'தாயே! நான் எப்படி இருக்கவேண்டுமென்று நீ விரும்புகிருயோ அதுபோலவே பரிசுத்தமாக இருக்கிறேன் என்று கடவுள் சாட்சியாகச் சொல்லுகிறேன்' என்று விடை யளித்தாள்.

அதைக் கேட்ட ஹேமவதி சிமாட்டி, 'சரி; அந்த விஷயத்தில் நான் உன்னை நம்புகிறேன். இப்போது மற்ருெரு விஷயத்தைப்பற்றிக் கேட்கவேண்டியிருக்கிறது. இராஜேஸ்வரியின் வாயினுலேயே வெளியான விஷயம், அந்த முரட்டுக் கிழவன் செல்வநாதருடன் நான் அன்று பேசிக்கொண்டிருந்தபோது நீயும் ராஜேஸ்வரியுமாக மற்ருெரு அறையில் ஒளிந்துகொண்டு நாங்கள் பேசியதைக் கேட்டதுண்டா இல்லையா? ஒரு தாயின் விஷயத்தில் இவ்வாறு மறைந்து நின்று கேட்பது உனக்குத் தர்மமா! அது கிடக்கட்டும். இப்போதாவது நீ பணிவுடனும் உண்மையுடனும் நடந்து கொள்வதாகச் சொல்லி இருப்பதால் அதை மன்னித்து விடுகிறேன். எனினும், அந்தக் கிழவன் உன் தாயாராகிய என்மீது சுமத்திய பழியை நீ நம்புகிருயா? அது உண்மைதான் என்று உன் மனதில் படியும்படி ராஜேஸ்வரி சொல்லியிருப்பதாகத் தெரிகிறது, என்னுல் அதிகம் நேசிக்கப்படுபவளும், என்னிடம் அதிக அபிமானம் வைத்திருப்பவளுமான நீ அச்செய்தியை உண்மையாகநம்பினுல், ஆ! என்மனம் எவ்வாறுதான் துடிக்கும் தெரியுமா?' என்று கேட்டாள். அதற்குக் கற்பகம், 'தாயே! செல்வநாதர் சாட்டிய பழியெல்லாம் பொய் என்று நீ சொன்னுல் அதுவே எனக்குப் போதுமானது. அவையனைத்தும் வீண்பழிகளே என்று நான்நிச்சயமாக நம்புவேன்' என்ருள். அவள் அவ்வாறு தன் வாயினுல் சொன்னுளேயொழிய செல்வநாதர் சாட்டிய பழி உண்மையானதாகவே

இருக்கும் என்றுதான் அவள் மனம் நிச்சயமாக நம்பிற்று. தன் தாயார் தன்னை ஏமாற்ற முயற்சிக்கிறாள் என்றே தெரிந்து கொண்டாள். தாயின் முகத்தை உற்றுப் பார்த்தாள். அவளுடைய மனச்சாட்சி உள்ளே குத்துவது அவளுடைய முகத்தில் காணப்பட்டது. இதனாலும் கற்பகம் ஒரு விஷயத்தைக் கற்றுக் கொண்டாள். மனதில் ஒன்றை வைத்துக் கொண்டே வேறு விதமாகத் தன் தாய் பேசுவது அவளுக்கு அவ்விஷயத்தில் ஒரு பாடம் போதிப்பது போல் இருந்தது. கற்பகம் மனமாரத் தன்னை நம்பவில்லை யென்பதை அவளது முகத் தோற்றத்தால் தெரிந்து கொண்ட தாயார், 'பெண்ணே! நான் சொன்னதை நீ நம்புவதாக வாயால் சொன்னாயே யொழிய மனமார அதை நம்பியதாகத் தெரியவில்லையே' என்று கேட்டாள். அதற்குக் கற்பகம், 'தாயே! நீ ஏன் அவ்வாறு நினைக்கிறாய். நான் மனமார நம்புவதாகவே நினைக்கக் கூடாதா,' என்று கேட்டாள்.

இதைக் கேட்டதும் தாயார், 'கற்பகம்! உன் முகத் தோற்றத்தால் நீ சொன்னதை நீ நம்பவில்லை என்று நான் அறிந்து கொண்டேன். மோகனதாஸ் விஷயத்தில் நான் பரிசுத்த மானவளாகவே இருக்கிறேன் என்று சத்தியம் செய்தால் நீ என்னை நம்புகிறாய் அல்லவா? நானும் பத்தொன்பது வருஷங்களாக விதவையாகத் தான் இருக்கிறேன். இந்த உலகில் எந்த ஒரு மனிதனுக்காகவும் நான் என் கற்பைப் பறி கொடுத்ததில்லை என்பதற்குத் தெய்வமே சாக்ஷி' என்று கூறினாள். தன் தாயார் மனம் சம்பந்தப்பட்ட வரையில் எப்படி இருந்தாலும் தேகம் சம்பந்தப்பட்ட வரையில் பரிசுத்தமாகவே இருப்பாள் என்று நம்பியதாலும், தன்னிடம் வந்து தன் தாயார் இவ்வளவு தூரம் சொல்லிக்

கொள்வதாலும், அவளிடம் அனுதாப மடைந்து, 'தாயே! நீ என் இதையெல்லாம் என்னிடம் சொல்லவேண்டும். நான் உன் வார்த்தைகளை நம்புகிறேன். இனி அப்படி யொன்றும் பேசவேண்டாம்,' என்று சொன்னாள். அப்போது ஹேம வதி சீமாட்டி, 'பெண்ணே! நான் உன் கடமையைச் செய் யும்படி தூண்டி உன்னிடத்திலிருந்து ஒரு பிரதிக்ஞையும் வாங்க வேண்டி யிருக்கிறது. நான் ஒழுங்கான வழியில் இல்லை என்று நீ தெரிந்துகொண் டிருந்தால் அப்படிப்பட்ட பிரதிக்ஞை எப்படி வாங்க முடியும். ஆதலால் முதலில் என் யோக்கிதையை நிலை நிறுத்திக் கொள்ளவேண்டியது அவசிய மாகிறது' என்று கூறியதும் கற்பகம் ஆச்சர்யமும் பீதியும் அடைந்து, 'என்னிடத்தி லிருந்து பிரதிக்ஞையா வாங்கப் போகிறாய்!' என்று கேட்டாள்.

அதற்கு ஹேமவதி சீமாட்டி, 'ஆம்; பிரதிக்ஞைதான் வாங்க வேண்டும். ஏனெனில் உங்களுடன் எல்லாம் கேளிக் கை செய்யும் காலம் மலையேறி விட்டது. நான் மட்டும் சிறிது கண்டிப்பாக நடந்துகொண் டிருப்பேனே யாயின் தினகரனோ அல்லது ராஜேஸ்வரியோ இப்போது இருப் பதைப் போல இருக்க மாட்டார்கள். என்னுடைய குழந்தை களில் ஒருத்தியாகிய உன்னையாவது அவமானம், ஆபத்து ஆகியவைகளினின்றும் காப்பாற்ற வேண்டாமா? நீ இன்ன மும் அந்த துளசிங்கம் பிரபுவுடன் இரகசியக் கடிதப் போக்கு வரத்து வைத்துக்கொண் டிருப்பதாக நான் நம்பு கிறேன்' என்றதும் கற்பகம், 'இல்லை. நான் அப்படிப்பட்ட கடிதப் போக்கு வரத்து எதையும் வைத்துக்கொண் டிருக்க வில்லை' என்றாள். அதைக் கேட்ட தாயார், தன் குமாரி சொன்னது பொய்யாக இருக்குமென்று நினைத்தா ளென்றா லும், 'சரி, அப்படியானால் நான் கேட்கும் பிரதிக்ஞை

செய்து கொடுப்பது இன்னும் சுலபமான வேலையாகும்' என்றாள். தன் தாயார் கேட்பது இன்ன பிரதிக்ஞையாய்த் தான் இருக்குமென்பதை ஒருவாறு யூகித்து அறிந்து கொண்ட கற்பகம் உள்ளத்தில் நடுங்கினாளென்றாலும் வெளிப் பார்வைக்கு அமைதியுடன் இருப்பவள் போல், 'தாயே! எவ்விதமான பிரதிக்ஞை உனக்கு வேண்டும்' என்று நிதானமாகக் கேட்டாள்.

அப்போது ஹேமவதி சீமாட்டி, 'இனி நீ எந்த விதத்திலும் துளசிங்கம் பிரபுவுக்கு உன் காதல் விஷயத்தில் உற்சாகத்தைக் கொடுக்கக் கூடாது. இனி நீ அவனுடைய கடிதத்தை இரகசியமாகவும் பெறக் கூடாது. அப்படி ஏதேனும் கிடைத்தால் அதற்குப் பதிலும் எழுதக் கூடாது. அவனைப் பற்றியே நீ நினைக்கலாகாது,' என்றாள். அதைக் கேட்டதே கற்பகத்துக்கு அடி வயிற்றில் இடி விழுந்த மாதிரி ஆகிவிட்டது. முகம் வெளுத்தது. பதுமைபோல் மௌனமாக ஒன்றும் பேசாமல் உட்கார்ந்து கொண்டாள். அதைப் பார்த்த தாயார், 'பெண்ணே! இவ்விஷயத்தில் உன்னை நிர்ப்பந்தப் படுத்தவும் எனக்கு அதிகாரமிருக்கிறது. நீ இவ்வாறு மௌனமாய் இருப்பதில் பிரயோசனமில்லை. உனக்கும் சிலநிமிஷங்கள்வரை சாவகாசம் தருகிறேன். நன்றாக யோசித்து முடிவைச் சொல்லிவிடு,' என்று கூறிக் கொண்டே பக்கத்திலிருந்த அறைக்குள் சென்று கதவை மூடிக்கொண்டாள். ஹேமவதி சீமாட்டி பக்கத்து அறையில் சென்று மறுநிமிஷமே கற்பகத்தின் அந்தரங்க வேலைக்காரியான அழகும் யௌவனமும் வாய்ந்த பார்வதி கற்பகம் இருந்த அறையின் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தாள். கற்பகத்தின் முகத்தைப் பார்த்ததும் அவள்

ஏதோ விசாரத்துடன் உட்கார்ந்திருக்கிறாள் என்பதைத் தெரிந்துகொண்டாள். ஆனால் கற்பகம் பக்கத்து அறையைக் காட்டி அதில் தன் தாயார் இருப்பதாகவும், எந்த நிமிஷத்திலும் இங்கு வரலாமென்றும் ஜாடையாகத் தெரிவித்தாள். ஆகவே பார்வதி ஒரு வார்த்தையும் பேசாமல் தான் கொண்டு வந்திருந்த கடிதத்தை மட்டும் கொடுத்து விட்டு வெளியே போய்விட்டாள். அக்கடிதத்தின்மீது எழுதப்பட்ட எழுத்தைப் பார்த்ததுமே அது தன் காதலன் துளசிங்கம் பிரபுவினுடையது என்று தெரிந்ததால் உடனே அதைப் படித்துப் பார்க்கவேண்டு மென்னும் ஆவல் அதிகரித்தது. ஆகவே அவள் உடனே அக்கடிதத்தைப் பிரித்துப் படித்துப் பார்க்கவே அதில் துளசிங்கம் தனக்கு பரிதிபுரம் சர்க்காரில் ஒரு நல்ல கௌரவமான உத்தியோகம் கிடைத்திருப்பதாகவும், இன்னும் நான்கு தினங்களில் அவன் இரத்தினபுரியை விட்டுப் புறப்பட்டுப் போவதாகவும், அவள் வாக்களித்திருக்கிறபடி அப்போது தன்னுடன் புறப்பட்டுவிட வேண்டுமென்றும், இருவரும் வெளியேறியதும் உடனே கலியாணத்துக்கு ஏற்பாடு செய்வதாகவும் எழுதியிருந்தான். அதைப்படித்ததும் கற்பகம் அளவிலா சந்தோஷமடைந்தாள். ஆனால் அதைப் பற்றி அதிகநேரம் யோசிக்கச் சாவகாசமில்லை. ஏனெனின் பக்கத்து அறையில் சென்றிருக்கும் தாயார் எந்த நிமிஷத்திலும் திரும்பி வரலாமல்லவா! ஆகவே அவள் அக்கடிதத்தைத் தன் இடுப்பில் வைத்துக்கொண்டு விட்டு ஒன்றும் தெரியாதவள்போல் உட்கார்ந்திருந்தாள்.

கடிதத்தைக் கொண்டுவந்து கொடுத்த பார்வதி அவ்வறையைவிட்டு வெளியே சென்றாளேயொழிய அதிக தூரத்தில் எங்கும் போய்விடவில்லை. தாய்க்கும் மகளுக்கும் என்ன சம்பாஷணை நடக்கிறது? கற்பகம் ஏன் துக்கத்துடன் இருக்

கிறாள்? என்னும் விஷயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டு மென்னும் ஆவல் அதிகமாயிருந்ததால் அவள் அங்கேயே ஒரு கதவின் பின்னால் மறைந்திருந்து அங்கு நடப்பதைக் கவனித்து வந்தாள். கற்பகம் கடிதத்தைப் படித்து முடிக்த சொற்ப நேரத்துக்கெல்லாம் ஹேமவதி சீமாட்டியும் திரும்பி வந்து, 'கற்பகம்! நான் கேட்டபடி பிரதிக்ஞை செய்து கொடுத்து உன் அன்பை வெளிப்படுத்துகிறாயா? இல்லையா? உடனே பதில் சொல்' என்று கேட்டாள். அப்போது கற்பகம், 'என் வார்த்தையில் உனக்கு நம்பிக்கையில்லையா? சத்தியம் செய்து கொடு என்று நீ கேட்கவேண்டிய அவசியமென்ன?'' என்றுவினவ, ஹேமவதி சீமாட்டி, 'வெறும் வாக்குக் கொடுத்தால் அதை அலட்சியமாக அனைவரும் மீறி விடுகின்றனர். சத்தியம் என்றால் சிறிது பயமும் மதிப்பும் இருக்கிறது. என் இஷ்டப்படி சத்தியம் செய்து கொடுக்க நீ ஏன் பின்வாங்குகிறாய் என்பது தெரியவில்லை. உன் நன்மைக்காகத் தானே நான் இம்மாதிரியெல்லாம் செய்துகொண்டிருக்கிறேன். நீ இன்னமும் அந்த துளசிங்கம் பிரபுவினுடன் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொண்டிருக்கிறாய் என்றே தெரிகிறது. நான் பலமுறை தெரிவித்திருப்பதுபோல் இப் இப்போதும் கூறுகிறேன் கேள். அவனுக்குக் கலியாணமாய் இருக்கிறது, ஆகவே நீ அவனுடன் சம்பந்தம் வைத்துக் கொண்டால் அதனால் நீ அவனது கள்ளக் காதலியாக இருக்கமுடியுமே யொழிய மனைவி ஆக முடியாது' என்று சொன்னாள்.

கற்பகம் ஒன்றும் பதில் கூறவில்லை. அவள் எவ்வாறு நடந்துகொள்வதென்பதுபற்றிப் பலமாகச் சிந்தித்தாளென்றாலும் எத்தகைய முடிவுக்கும் வரமுடியவில்லை. கடைசியாகத் துணிந்து, 'தாயே! நான் எல்லாவற்றையும் நன்றாக

யோசித்துப் பதில் கூறுவதற்காக ஒரு வாரம் அல்லது குறைந்தபட்சம் மூன்றுநாள் சாவகாசமாவது கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்,' என்றுள். இதைக் கேட்டதும் சீமாட்டி அதிக ஆத்திரமடைந்து, 'ஆ! அப்படியானல் நீ இப்போதே இது விஷயமாக முடிவுக்கு வர முடியாதா? ஆனல் இந்த இடைக்காலத்தில் நீ உனக்குச் சௌகரியமான ஏற்பாடுகளைச் செய்து கொண்டுவிடுவாய். நாம் நாளை மறுநாள் கிருஷ்ணகிரிக்குப் போகவேண்டியிருக்கிறது. அதற்குள் உன்னிடமிருந்து பிரதிக்ஞை பெற்றுவிட வேண்டுமென்று நினைத்தேன். நான் உனக்குச் சாவகாசம் கொடுக்கமுடியாது உடனே சத்தியம் செய்து கொடுக்கவேண்டும், மறுப்பாயானல் என் இஷ்டப்படி உன்னை நடத்த ஆரம்பிப்பேன்' என்று கடுமையாகச் சொன்னுள். இதனல் தாயை எதிர்க்கவேண்டியதைத்தவிர வேறு வழியில்லையென்பதை உணர்ந்த கற்பகம், 'தாயே! நீ என்னைப் பயமுறுத்துகிருய் போலிருக்கிறது. புது முறையில் பாஷையை உபயோகிக்கிருயே' என்று கேட்கவும், ஹேமவதி சீமாட்டி ஆத்திரத்துடன், 'என் கோரிக்கையை மறுக்கப்போவதாக உடனே தெரிவித்து விடுவது தானே! ஏன் காலப்போக்கு செய்கிருய். எனக்கும் உனக்குமிடையில் பெரிய போராட்டம் நடக்கும் என்பது நிச்சயம். நீயும் பொய் பேசுபவளாகத்தான் இருக்கிருய். இதுவரை என்னிடத்தில் மிக்கமரியாதையும் அன்பும்உடையவள்போல் நடித்தாயே, என் நிலைமைக்கு அனுதாபப்படுவது போலவும் தினகரன், ராஜேஸ்வரி நடந்துகொள்ளும் விதத்தைப் பற்றி வருத்தப்படுவதுபோலவும் பாசாங்கு செய்தாயே, இப்போது அவர்களைப்போல் நீயும் என்னை எதிர்க்க ஆரம்பித்து விட்டாய். துளசிங்கம் பிரபுவின் முகத்தையும் பார்க்கமாட்டேன் என்று சத்தியம் செய்து கொடு; இல்லாவிட்டால் நான் உன்னையே கவனித்து வருவேன். எல்லா சேவகர்களிடமும்

சொல்லி உனக்கு காதல் விஷயத்தில் எவ்வித உதவியும் புரியக்கூடாதெனச் சொல்லிவிடுவேன். உன்கூடவே நானும் சாப்பிடுவேன், தூங்குவேன், இருப்பேன். ஒருவருடனும் பேச உன்னை அனுமதிக்கமாட்டேன்' என்று கூறினாள்.

அப்போது கற்பகம் துணிவுடன், 'தாயே! என்மனதில் உன்பாலுள்ள அன்பையும் மரியாதையையும் நீயாக அழித்துவிடுவதென்று கங்கணங் கட்டிக்கொண் டிருக்கிறாயோ?' என்று கேட்டாள். அதற்குத் தாயார், 'நான் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. அன்பாவது மரியாதையாவது உனக்கு ஒன்றுமே கிடையாது. அதெல்லாம் வெறும் பேச்சுதான். நீயும் உன் சகோதரனைப்போலவும் சகோதரியைப் போலவும் தான் இருக்கிறாய். நீ எவ்வளவுதான் எதிர்த்தாலும் உன்னை நான் அழிவினின்றும் காப்பாற்றுவதென்று தீர்மானித்துவிட்டிருக்கிறேன்! என்றாள். அதனால் ஆத்திரமும் துக்கமும் அடைந்த கற்பகம் இதுவரையில் என்றும்இல்லாத முறையில் அடக்கமற்ற தன்மையில் எதிரில் இருப்பது தாய் என்பதையும் மறந்து, 'நான் இம்மாளிகையையே விட்டுப் போய் விடுவதாகத் தீர்மானித்தால் நீ என்ன செய்வாய்' என்று கேட்டாள். அதற்கு அவள் மிக்க அதிகார தோரணையுடன் 'நான் உன்னை எப்படியாவது தடுத்து விடுவேன். தினகரன் இப்போது மைனராக இருக்கிறபடியால் இந்த வீட்டுக்கும், சொத்துக்களுக்கும் நான் தான் அதிகாரி. எல்லா வேலைக்காரர்களும் என் வேலைக்காரர்களே. இவ் வீட்டிலுள்ள அனைவரும் என் இஷ்டப்படி நடக்கவேண்டும். நான் சொல்வதை நீ அறிந்து கொண்டாயா' இன்னும் தீவிரமான முறைகளை நான் அனுஷ்டிக்க வேண்டிய நிலைமையை ஏற்படுத்திவிட வேண்டாம்' என்றாள். தாய் கூறியதன் கருத்தை ஒருவாறு உணர்ந்த கற்பகம் அச்சத்தாலும் ஆத்தி

சத்தாலும் நடுக்கிக்கொண்டே, 'அப்படியானல் நான் இம் மாளிகையில் சிறையிலடைப்பட்ட ஒரு கைதியைப் போல் இருக்க வேண்டியது தானு?' என்று கேட்டாள்.

அதற்கு ஹேமவதி சீமாட்டியும் உறுதியான தொனி யில், 'ஆம்; நீ கைதிதான் என்னைக் கேட்காமல் நீ வெளியே போனல் உடனே உன்னை அறையில் போட்டுப் பூட்டும் படி சேவகர்களுக்குக் கட்டளை யிட்டு உன்னை அவமானப் படுத்தி விடுவேன். மேலும் உன் நடத்தை ஒவ்வொன்றை யும் கவனித்துக் கொண்டுதான் வருவேன்,' என்றுள். இதைக்கேட்டதும் கற்பகம் அதிக துக்கத்துடன் ஓவென்று அழுதாள். முகம் வெளுத்துப்போயிற்று. எண் ஜாண் உடம் பும் ஒரு ஜாணுகக் குறுகும்படி அடங்கிவிட்டாள். இதைக் கண்டு தாயார் அவளை அடக்கி விட்டதற்காக உள்ளூர சந் தோஷப்பட்டாள். உடனே அந்த சோபாவை விட்டு எழுந்து அதே அலையில் மற்றொரு மூலையிலிருந்த சோபா வில் போய் உட்கார்ந்துகொண்டு கற்பகத்தின் நடவடிக்கை களை கவனித்து வந்தாள். கற்பகத்துக்குத்தான் எவ்வாறு நடந்துகொள்வதென்று ஒன்றும்தோன்றவில்லை. தன் காதல ஞன துளசிங்கம்பிரபு தன்னுடைய பதிலுக்காக ஆவலுடன் காத்திருப்பானே என்னும் எண்ணம் அவள் மனதில் தோன் றிற்று. இன்னும் நான்கு தினங்களில் இரத்தின புரியையே விட்டுச்செல்ல ஏற்பாடு செய்யவேண்டும்; எவ்வாறு அதைச் செய்வது என்னும் எண்ணம் மேலிட்டது. காலதாமதம் செய்வதற்கோ வேளையில்லை. ஹேமவதி சீமாட்டி பூனையைப் போல் காவல் காத்து வந்தால் என்னதான் செய்ய முடியும். போலும் தாயார் வலுக் கட்டாயப்படுத்தி நாளை மறுநாள் பலாத்கார மாக வண்டியில் போட்டு கிருஷ்ணகிரிக்கு அழைத்துச் சென்று விட்டால் என்னசெய்வது? தன்னிட

மிருந்து எத்தகைய பதிலும் கிடைக்காமல் இருந்தால் துளசிங்கம் பிரபுதான் என்னவென்று நினைப்பான். மிகுந்த துக்கத்துடன் நகரை விட்டுப் போய்விடமாட்டானு? அவன் போய்விட்ட பிறகு தன் கதி என்ன, என்று பலவாறுக அவள் சிந்தித்தாள். தன்முகத்தை வேறுபக்கமாகத் திருப்பிக் கொண்டு தாய்க்கும் தெரியாமல் கண்ணீர் விட்டு அழுதாள். மிகுந்த பிரயாசையுடன் பெருமூச்சை அடக்கிக் கொண்டாள்.

ஆனுல் கற்பகம் தன் அந்தரங்கதோழி இங்கு நடந்தவைகளை யெல்லாம் கேட்டுக்கொண் டிருக்கிருள் என்று கனவிலும் கருதவில்லை. அதுபோலவே ஹேமவதியும் தன் மிரட்டலையும் தடபுடலையும் ஒருவர் மறைந்து நின்றுகேட்டுக் கொண்டிருக்கிருர் என்பதை அறியாள். இவ்வாறு நடப்பது உலகில் சகஜம். நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் ஒரு சமயத்தில் இல்லாவிட்டாலும் மற்ருெரு சமயத்திலாவது யாரேனும் பார்த்துவிடுவது நிச்சயம். யாருக்கும் தெரியாது என்று நாம் செய்யும் காரியத்தை யாரேனும் அறிந்து விடுவது நிச்சயம். இதுபோலவே பார்வதி அந்த அறையில் தாய்க்கும் மகளுக்கும் நடந்த வாக்குதத்தங்களை யெல்லாம் கவனித்துக்கொண் டிருந்தாள். பிறகு அவர்கள் பேசுவதை நிறுத்திவிட்டதால தனக்கு இனி அங்கு வேலையில்லை யென நினைத்து அவ்விடத்தை விட்டுப் போய் விட்டாள். அப்படிப் போகும்போது உண்மையான காதலானது ஹேமவதியைப் போன்ற முட்டாள் தாய்மார்களின் நிர்ப்பந்தத்தையும்,பெரிய பூட்டுகளைச் செய்து கொடுக்கும் கருமானையும் கண்டு சிரிக்கிறது. என்று மனத்தில் நினைத்துக்கொண்டே சென்ருள். அதாவது உண்மைக்காதல் பரஸ்பரம் இருவரிடையே ஏற்பட்டு விடுமாயின் அதைத் தடுக்க இந்த உலகில் எந்த சக்தி

யாலும் முடியாது. ஆதலால்தான் காயனரும் கற்பைப் பாது காத்துக் கொள்ள வேண்டுமென்னும் நற்குணம் பெண் களுக்கு இருந்து அதை அவர்களாகக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமே யொழிய எப்படிப்பட்ட அறையில் போட்டு எவ்வளவு உறுதியான பூட்டைக்கொண்டு பூட்டி வைத் தாலும், பெண்கள் இஷ்டப்படாதபோது கற்பைக் காக்க முடியாது என்று கூறி யிருக்கிறார். இதை அனேக பெற் றோர்களும் கணவன்மாரும் அறியாமல் தாங்களே தங்கள் பெண்கள் அல்லது மனைவியரின் கற்பைக் காத்து வருவ தாக மனப்பால் குடிக்கின்றனர், அந்தோ அறியாமை! பெண்கள் கற்பின் மேன்மையையும், உண்மைக் காதலின் சிறப்பையும் நன்கு அறிந்து கொண்டு விட்டால் பிறகு அவர் கள் எக்காரணத்தைக் கொண்டும் தவறான வழியில் செல்ல மாட்டார்கள். ஆதலின் பெண்களுக்குத் தக்க அறிவைக் கொடுப்பதுதான் நமது கடமையாக இருக்க வேண்டுமே யொழிய அதைவிடுத்து பந்தோபஸ்துப் ஏற்படுத்துவது அறி யாமையேயாகும்.

53-வது அத்தியாயம்.

ராஜேஸ்வரி

நாம் முன் அத்தியாயத்தில் கூறியபடி கற்பகம் ஒரு சோபாவிலும் அவளது தாயார் ஹேம வதி மற்றொரு சோபாவிலுமாக எதிர் எதிராக சாப்பாட்டு வேளை வரும்வரையில் உட்கார்ந்திருந்தனர். பின்னர்சீமாட்டி தன் குமாரியின் அருகில் சென்று மெதுவான குரலில், 'இப்

போது இங்கு நடந்த விஷயங்களை ராஜேஸ்வரியிடம் சொல்வதா இல்லையா என்பது உன் அபிப்பிராயத்தைச் சேர்ந்தது. நான் மட்டும் என் உறுதியினின்றும் ஒரு அணுவளவும்தவற மாட்டேன். நமது வேலையாட்கள் எதிரில் நீ திருப்தியாக இருப்பதுபோல் நடந்துகொள்,' என்றாள். கற்பகம் ஒரு வார்த்தையும்பேசாமல் தன் ஆசனத்தினின்றும் எழுந்து தன் தாயின் பின்னால் நடந்து அவ்வறையை விட்டுச் சென்றாள். அவர்கள் இருவரும் மாடிப்படிகட்டுக்களின்மீது ஏறிச்சென்று சாப்பாட்டு அறைக்குச் சென்றனர். அங்கே நால்வருக்கென ஆகார வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. எனினும் தினகரன் அங்கு இருக்கவுமில்லை; பின்னர் வரவுமில்லை; ராஜேஸ்வரிமட்டும். அவர்களிருவரும் வந்து சேர்ந்த இரண்டொரு நிமிஷங்களுக்குள் அங்கு வந்து சேர்ந்தாள். அங்கு வந்ததும் தன் சகோதரி கற்பகம் ஏதோ வருத்தத்துடன் இருப்பதாக அவள் முகத் தோற்றத்திலிருந்தே தெரிந்து கொண்டாள். அதை விசாரித்து அறிந்துகொள்வதற்காகத் தக்கசமயத்தை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். சாப்பாடும் முடிந்தது. சமையல்காரனும் பரிமாறுவோனும் வெளியே போய்விட்டார்கள். அவர்கள் இருவரும் இருந்தபோது ஏதோ மேற்போக்குக்காகத் தாயாரும் இருகுமாரிகளும் எதையோ பேசிக்கொண்டிருந்தனரேயன்றி உண்மையில் அன்புடனாவது அபிமானத்துடனாவது பேசவில்லை. ஹேமவதி சீமாட்டியின் சாப்பாடு முடிந்ததும் அவள் எழுந்துபோய் பொது ஹாலுக்குச்செல்வாள் என்று ராஜேஸ்வரி நினைத்தாள். ஆயினும் தாயார் அவ்வாறு செல்லாமல் பிடிவாதமாக அந்த இடத்திலேயே உட்கார்ந்து கொண்டிருந்தாள்.

186580

ஆகவே ராஜேஸ்வரிக்கு உண்மை விஷயத்தை அறிந்து கொள்ள வேண்டுமென்னும் ஆவல் அதிகரித்தது. ஆதலின்

அவள் தன் சகோதரியைப் பார்த்து, கற்பகம் நீ என் அறைக்குவந்து புதிய பாட்டை அப்பியசிக்கின்றாயா?' என்று கேட்டாள். அதற்குக் கற்பகம் எத்தகைய பதிலும் கூறாமல் தலையைமட்டும் அசைத்துவிட்டுக் கவலையோடு கூடிய பார்வையால் தன் தாயின் முகத்தை நோக்கினாள். இதனால் ராஜேஸ்வரியின் சந்தேகமும் ஆவலும் அதிகரித்தது. மூவரும் சொற்பநேரம் பேசாமல் மௌனமாக இருந்தனர். பிறகு ராஜேஸ்வரி மீண்டும் தன் சகோதரியைப் பார்த்து, 'இன்று மாலை நீ தனியாக எங்கும் வரமுடியாதா? என்ன விசேஷநிலைமை ஏற்பட்டிருக்கிறது?' என்று கேட்கவும் கற்பகம், 'எல்லாவற்றையும் நமது தாயைக் கேள்,' என்று தன்னையுமறியாமல் சொல்லிவிட்டாள். ஆனால் ராஜேஸ்வரி தன் தாயின் விஷயத்தில் தலையிடக்கூடாதென்றும், தாய் அவளுடைய விஷயத்தில் தலையிடலாகாதென்றும் பரஸ்பரம் முடிவு செய்து கொண்டிருப்பதால் ஒன்றும் கேட்க முடியாமல் மௌனமாக இருந்துவிட்டாள். ஆயினும் தாயாராக ஏதையேனும் சொல்வாளோ என்று எதிர்பார்த்தாள். ஆயினும் சீமாட்டியோ வாய்திறந்து பேசவில்லை. கற்பகம் தாயின் பின்னாலேயே எழுந்துபோக நேரிடுமென்பதை அறிந்த ராஜேஸ்வரி அங்கேயே வீணில் காத்திருக்க இஷ்டப்படாமல் தன் ஆசனத்தினின்றும் எழுந்துபோய் விட்டாள். அவள் போனபின்னர் சீமாட்டி தன் குமாரியைப் பார்த்து, 'நாம் இங்கேயே இருக்கலாமா அல்லது பொதுஹாலுக்குப் போகலாமா' என்று கேட்டாள். பாவம் கற்பகம் தன் நிலைமை தடுமாறி இருப்பதைக் கண்டு தன்னிஷ்டப்படி ஒன்றும் செய்ய முடியாததலால் பேசாமல் எழுந்து தாயின் பின்னாலேயே சென்றாள். அவர்கள் பொதுஹாலுக்குச் சென்றார்கள். அங்கே ராஜேஸ்வரி காணப்படவில்லை. கற்பகம் மாலையிலாவது தன் அறைக்கு வருவாள். என நினைத்து அவள் தன் அறைக்குப் போய்விட்டாள்.

மாலையில் காபி தயாரானதும் அதை ராஜேஸ்வரியிடம் சொல்வதற்காகப் பார்வதி என்னும் வேலைக்காரி போனாள். அவள் ராஜேஸ்வரியிடம் வேறு ஏதோ சங்கதியும் சொல்ல விரும்புபவள்போல் நடித்ததால் ராஜேஸ்வரியும் அது என்ன என்று விசாரித்தாள். அப்போது பார்வதி அன்று பகல் கற்பகத்துக்கும் அவளது தாய்க்கும் இடையில் நடந்த விஷயங்களையெல்லாம் விவரமாகச் சொல்லிவிட்டாள்.

அதைக் கேட்டதும் ராஜேஸ்வரி, 'ஓ. அப்படியா சங்கதி! என் தாயாரின் இந்தத் திட்டத்தை நாம் தோற்கடித்துவிடவேண்டும். பார்வதி, நீ உடனே துளசிங்கம் பிரபுவின் இடத்துக்குச் சென்று நடந்ததையெல்லாம் சொலலிவிடு' என்று இன்னும் ஏதோ சொல்வதற்குள் பார்வதி, 'அம்மா, நான் முன்னரே போய் வந்துவிட்டேன். நீங்கள் மூவரும் ஆகாரம் எடுத்துக் கொண்ட சமயத்தில் நான் அங்குபோய் வந்தேன். அப்பிரபு இச் செய்தியைக் கேட்டதும் பீதியடைந்துவிட்டார். ' நான் அவருக்கு ஆறுதல்கூறிக் கற்பகத்தை விடுவிப்பதற்கு ஏதேனும் மார்க்கம் தேடவேண்டுமென்று சொன்னேன். நான் ஏதாவது சமாசாரம் கொண்டு வருவேனென்று அவர் ஆவலுடன் இன்று மாலையும் நாளையும் வெளியில் எங்கும் போகாமலும் வீட்டிலேயே இருப்பார். ஹேமவதி சீமாட்டியோ பிரயாணத்துக்குத் தயாராவதாகத் தெரிகிறது. வண்டியைப் புதுப்பித்துக் கொண்டிருக்கிறார்,' என்றாள். அதற்கு ராஜேஸ்வரி, 'ஓ, சீமாட்டி எங்களையும் கிருஷ்ணகிரிக்கு அழைத்துக்கொண்டு போவதாக இருக்கிறாளோ. எப்படி நடக்கிறதென்று பார்க்கலாம். வண்டி புறப்பட வேண்டிய வேளை, எது என்று அவள் சொல்கிறாளோ அதைத் தெரிந்துகொண்டு வா. பிறகு தக்க ஏற்பாடுகளை நான் செய்கிறேன்' என்றாள்.

பிறகு பார்வதி போய் விட்டாள். ராஜேஸ்வரியும் சொற்ப நேரத்துக்கெல்லாம் காபி, அருந்துவதற்காகப் பொதுஹாலுக்குச் சென்றாள். அப்படிப் போவதற்கு முன் தான் தனியாய் இருந்தபோது ராஜேஸ்வரி, 'ஓகோ, நமது தாயார் எங்களையெல்லாம் கிருஷ்ணகிரிக்கு அழைத்துக்கொண்டு போய் விடுவாள் போலத் தெரிகிறது. கற்பகத்தைப் பலவந்தப் படுத்தி அழைத்துக்கொண்டு போய் விடலாமென்று நினைக்கிறாள். நானும் கௌரவத்துக்காகவாவது அவள் வார்த்தையைத் தட்டாமல் வருவேன் என நினைக்கிறாள். வாஸ்தவந்தான். நானும் கௌரவத்துக்காவது, பிறர் நானும் தாயின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு அடக்கத்துடன் இருப்பதாகத் தெரிந்து கொள்வதற்காகவாவது போவேன் என்பது வாஸ்தவம்தான். ஏனென்றால் இந்தக் கொடிய தாயினின்றும் விடுதலை யடைவதற்கு எனக்கும் கலியாணம் ஆகவேண்டியது அவசியமாக இருக்கிறது. என்னை யார் கலியாணம் செய்து கொள்வதாக முன் வந்தாலும் அவரையே ஒப்புக்கொண்டு கலியாணம் செய்துகொண்டுவிடவேண்டியதுதான். பிறகு நான் எனது மனமார்ந்த காதலனை மோகனசுந்தரத்தைக் கண்டுபிடித்து என் இஷ்டப்படி அவனிடம் கூடிக் குலவவேண்டும். ஆனால் இதற்கிடையில் பாவம்! எனது தங்கை கற்பகத்தைத் தாயின் கொடுமையினின்றும் விடுவிக்க வேண்டும். துளசிங்கம் பிரபுவினுடன் ஓடிப்போவதைவிட அவளுக்கு வேறு நல்ல மார்க்கமில்லை' என்று தன்னுள்ளேயே நினைத்தாள். இவ்வாறு தன் மனதில் திடப்படுத்திக்கொண்ட பிறகு தான் பொது ஹாலுக்குச் சென்றாள். அங்கே தாயார் ராஜேஸ்வரியைக் கவனிக்கவே யில்லை. அதுதான் சமயமென அவளும் தன் தங்கைக்கு எப்படியோ ஒரு வித ஜாடை காட்டி அவளை விடுவிக்க ஏற்பாடு செய்வதாகவும் அவள் நம்பிக்கை

யுடன் தைரியமாக இருக்கலாமென்றும் விஷயத்தைக் குறிப்பாகத் தெரிவித்துவிட்டாள். கற்பகம் இதை அறிந்து சந்தோஷப்பட்டாளென்றாலும் விவரம் தெரியாமல் சிறிது சந்தேக புத்தியுடனேயே இருந்தாள்.

இவ்வாறாக மாலை முழுதும் கடந்தது. இரவு பத்துமணி சுமாருக்கு ராஜேஸ்வரி அவ்விடத்தை விட்டுப் போய்விட்டாள். அவள் போனபின்னர் ஹேமவதிசீமாட்டி தன் இளைய குமாரியிடம், 'கற்பகம்! எப்போது படுக்கப் போகலாமென நீ நினைக்கிறாயோ அப்போது நானும் எழுந்திருப்பேன். இரவெல்லாம் இப்படியே உட்கார்ந்திருப்பதாக நினைத்தால் நானும் அதற்குத் தயாராக இருக்கிறேன்' என்றாள். கற்பகம் மனத்திலும் தேகத்திலும் களைப்பு அடைந்திருந்ததால், 'இப்போதே போவோம்' என்றாள். ஆகவே ஹேமவதி சீமாட்டியும் கற்பகமும் அவ்விடத்தை விட்டுச் சென்று சீமாட்டியின் படுக்கையறைக்குப் போனார்கள். யாராவது வேலைக்காரிகூட இருந்தாலும் எப்படியாவது கற்பகம் தன் நிலைமையை அவளிடம் கூறிக்கொண்டு விடுவாளென்று நினைத்து எந்த வேலைக்காரர்களையும் சேர்க்காமல் தானே படுக்கையைப் போட்டுக்கொண்டு கற்பகத்தையும் பக்கத்திலேயே படுக்கவைத்துக்கொண்டு அறையின் உட்பக்கம் பூட்டிக்கொண்டு சாவியைப் பத்திரப்படுத்திக் கொண்டாள். மறுநாள் காலை எழுந்ததும் மறுபடியும் அவ்வாறே பெண்ணைக் காவல் காக்க ஆரம்பித்தாள். முன்னாள் பகல்முழுதும் இரவும் தான் ஜாக்கிரதையாக நடந்துகொண்டு இச்செய்தியின் இரகசியம் ராஜேஸ்வரிக்கும் தெரியாதபடி செய்ததற்காகச் சந்தோஷப் பட்டாள். காலை ஆகாரத்துக்கு மறுபடியும் மூவரும் கூடினர். ஆகாரம் முடிந்ததும் சீமாட்டி ராஜேஸ்வரியைப் பார்த்து, 'நானும் கற்பக

மும் நாளைய தினம் கிருஷ்ணகிரிக்குப் போகப் போகிறோம். நீயும் எங்களுடன் வருவாய் என்று நம்புகிறேன்' என்றாள். அதற்கு அவளும், 'ஆகா! அதற்கென்ன? நானும் உங்களுடனேயே கிருஷ்ணகிரிக்கு வருவேன். இங்கிருப்பதைவிட உங்களுடன் அங்கு இருப்பதுதான் எனக்கும் சந்தோஷத்தைத் தரும்' என்று விடையளித்தாள்.

பிறகு ஆகாா அறையினின்றும் வெளியேபோனபோது தன் அறைக்குச் செல்லும் வழியில் தினகரன் வருவதைக் கண்டாள். அவன் முன்னாள் இரவு முழுதும் தூங்காதவனைப் போல் காணப்பட்டான். முகத்தில் தெளிவு இருக்கவில்லை. ஏதோ மதுபானத்தை நன்றாகக் குடித்து விட்டவனைப்போல் இருந்தான். அவன் ராஜேஸ்வரியைப் பார்த்ததும், 'ராஜி! நீ சௌக்கியம் தானே,' என்று கேட்டான். அவள், 'தம்பி! இந்த வழியாக வா. நான் உன்னுடன் சில சங்கதிகளைப்பேச வேண்டியிருக்கிறது' என்று அழைத்தாள். ஆகவே அவர்களிருவரும் பக்கத்திலிருந்த ஒரு அறைக்குச் சென்று அதன் கதவை மூடிக்கொண்டு பேசஆரம்பித்தனர். முதலில் ராஜேஸ்வரி தன் சகோதரனிடம், 'நாங்கள் யாவரும் நாளை காலை கிருஷ்ணகிரிக்குப் போகவேண்டுமே, அது உனக்குத் தெரியுமா' என்றதும் அவன், 'யார் போவது? தாயாரும் இரு பெண்களும் வேண்டுமானால் போகலாம். நான் கட்டாயம் வர முடியாது. இப்போது நான் யாருக்கும் அடங்கி இருக்க வேண்டியதில்லை. நான் நேற்றிரவு முழுதும் தூங்கவில்லை. ஆதலால் நான் போய்த் தூங்கப்போகிறேன். தூங்கி விழித்ததும் உடனே நான் என தன்புள்ள கமலத்தின் வீட்டுக்குப் போகவேண்டும்' என்றான். அப்போது சகோதரி, 'ஓகோ, அது யார் கமலம் என்பது?' என்று கேட்க அவன், 'அதையும் தெரிந்துகொள்ள வேண்டியதுதான் உனக்கும் வயதாய்

விட்டது. ஆதலால் இப்படிப்பட்ட விஷயங்களை 'அறிவதால் தோஷமொன்றுமில்லை' என்றான். அதற்கு அவள், 'ஓ, அவள் உன் கள்ளக் காதலிபோலும், இது நியாயமா? ஷண்பகவல்லிக்குத் தெரிந்தால் அவள் மனம் நோகாதா' என்று கேட்டாள்.

அதற்கு அவன், 'இந்த சங்கதி அவளுக்கு ஏன் தெரிய வேண்டும், கமல குமாரியை நான் பெற்ற விதம் மிக விசித்திரமானது, அதை நீ விவரமாக அறிய வேண்டியதுதான். நான் முதலில் நாடக உலகில் பெயர் பெற்ற ராஜலட்சுமியின் மீது மோகித்து அவளுக்காகத் தேடி அலைந்தேன். கடைசியில் அவள் அகப்படாமல் இந்தக் கமல குமாரி அகப்பட்டாள். நான் இடையில் எவ்வளவு கஷ்டப்பட்டேன் என்பதைச் சொல்லுகிறேன், கேள். ராஜலட்சுமி நகருக்கு மேற்கே வெளியில் ஒரு அழகிய கட்டடத்தில் இருப்பதாக விசாரித்தறிந்து சென்றதில் அதற்கு அருகில் தோட்ட மத்திய வீடுதி ஒன்றில் ஒரு மாதைக் கண்டேன். அவள் நடுத்தா வயதுடையவளாயும், சிறிது நரைத்த மயிரையுடையவளாயும், ஆடவன் போன்ற பலமும் தைரியமும் உடையவளாயும், பெண் வேடம் போட்டுக்கொண்ட ஆடவன் போலவும்' என்றதும் ராஜேஸ்வரி அவள்தான் முன்பு தன் தாயைக் காணவந்த மாதாக இருக்கவேண்டுமென்று மோகனசுந்தரம் அவளது உருவத்தைப்பற்றிக் கூறியதிலிருந்து தெரிந்து கொண்டு, 'ஆ, அப்போது தினகான், 'சகோதரியே! ஏன் பயப்படுகிறாய். இன்னும் வேடிக்கை சொல்லுகிறேன் கேள், அவளைத்தான் நான் எனக்கும் ராஜேஸ்வரி என்று நினைத்த அம்மாதுக்கும் இடையில் பேசி முடிக்கும் தூதுக் காரியாக நியமித்துக் கொண்டேன் ஆனால் அன்றிரவு அம்மாது திடீரென்று என்னை எழுப்பி

கத்தியைக் காட்டி பயமுறுத்தி அவ்விடத்தை விட்டு ஓடிப் போகும்படி சொன்னாள். அங்கிருந்து புறப்பட்டு நடுராத்திரியில் ரஸ்தாவில் நடந்துகொண் டிருந்தபோது ஐந்தாறு கொள்ளைக்காரர்கள் என்னைத் தாக்கினார்கள். அக் கூட்டத்துக்கு ஒரு அழகிய பெண் ஆண் வேடம் தரித்து தலைமை வகித்தாள். அவள்தான் நமது வக்கீல்களையும் மடக்கி யடித்தவள் என்று நான் நினைக்கிறேன். ஏனெனின் அவள் சந்திரா பாய் என்பது தன் பெயரென அப்போதே சொல்லிக் கொண்டாள்' என்றான்.

இதைக் கேட்டதும் அவள் மனதில் சிறிது வருத்தம் ஏற்பட்டது. ஏனெனின் அவள்தான் தன்னால் காதலிக்கப் படும் மோகன சுந்தரத்தின் சகோதரியாய் இருக்க வேண்டு மென்று அவளுக்குத் தோன்றியது. ஆகவே அவள் 'சகோதரா! அம்மாது எங்கு வசிக்கிறாள். உன் அனுபவங்களெல்லாம் திடுக்கிடக் கூடியவைகளாய் இருப்பதால் அதை அறிய வேண்டியதுதான்' என்றாள். ஆகவே தினகரன் தான் கொள்ளை யடிக்கப்பட்ட அந்த ரஸ்தாவில் ஒரு சத்திரம் இருப்பதாகவும் அதற்கப்பால் சிறிது தூரத்தில் ஒரு தனியான சிறு மாளிகையில் அவள் வசிப்பதாகவும் தெரிவித்துவிட்டுத் தனக்குத் தூக்க மயக்கம் அதிகமாய் இருப்பதால் போததாகச்சொல்லிப் போய்விட்டான். அவன் போன பிறகும் ராஜேஸ்வரிமட்டும் அங்கேயே சிறிது நேரம் தங்கி பலவித சிந்தனைகளைச் செய்தாள். தினகரன் இரவில் தங்கி யிருந்ததாகவும், நடு இரவில் அவ்விடத்தின் மாது பயமுறுத்தியதாகவும் சொன்ன அம்மாதைக்காண வேண்டு மென்னும் ஆசை அதிகரித்தது. ஏனெனின் அவளுக்கும் தன் தாய்க்கும் இருக்கும் இரகசிய விவகாரந்தான் என்ன என்பதைத் தெரிந்து கொள்ளலா மென்பது ஒன்று. எப்

படியாவது அவள் ஒத்துழைப்பின் மூலம் சகோதரி கற்பகத்தை விடுவித்து விடலாமென்பது மற்றொன்று. ஆகவே அவசரப்படாமல் அன்றிரவு எப்படியாவது போய் அம்மாளைச் சந்திப்பது என்று தீர்மானித்தாள்.

அன்று பகல் முழுவதும் ஹேமவதி சீமாட்டி எப்படி அரண் செய்து வந்தாள் என்பதை விவரமாகக் கூற வேண்டியதில்லை. ஒரு போலீஸ்காரன் ஒரு கைதியை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு அழைத்துச் செல்லும்போது எவ்வளவு ஜாக்கிரதையாக இருப்பானோ அதைவிட ஜாக்கிரதையாகச் சீமாட்டி காவல் காத்து வந்தாள். எனினும் அப்போதைக் கப்போது ராஜேஸ்வரி ஜாடையாகவாவது அவள் எதற்கும் பயப்பட வேண்டியதில்லையென்றும், தக்க ஏற்பாடுகளைச் செய்து வருவதாகவும் தெரிவித்து வந்தபடியால் கற்பகம் ஒருவாறு சந்தோஷத்தையே அடைந்து வந்தாள். ஆனால் ராஜேஸ்வரி என்ன ஏற்பாடு செய்து வருகிறாள், எந்த வகையில் செய்கிறாள் என்பது ஆகியவைகளும் அவளுக்குத் தெரியவில்லை. அன்று இரவு ஒன்பது மணி சுமாருக்கு ராஜேஸ்வரி மீண்டும் தனியே தன் அறையில் தான் என்ன நடவடிக்கையை எடுத்துக்கொள்வது என்று யோசிக்க ஆரம்பித்தாள். மறுநாள் தாயார் என்ன மணிக்கு கிருஷ்ணகிரிக்குப் போக நிச்சயித்திருக்கிறாள் என்பது தெரியவில்லை. ஆதலால் முடிவாக எந்தத் திட்டத்தையும் போட முடியவில்லை. அவள் இவ்வாறாக யோசித்துக்கொண்டிருந்தபோது அவ்வறையின் கதவு திறக்கப்பட்டு உள்ளே பார்வதி வந்தாள். வந்ததும் அவள், 'அம்மா! உனது தாயார் இப்போதுதான் சேவகர்களிடம் சொல்லி நாளை காலை சரியாக ஒன்பது மணிக்கு வண்டி தயாராக வேண்டும்

என்று தெரிவித்திருக்கிருள், அதை உன்னிடம் சொல்லி விட்டுப் போகவே வந்தேன்' என்ருள். ராஜேஸ்வரி யும், 'ஓ, அதுதான் எனக்கும் வேண்டும். பார்வதி நீ உடனே துளசிங்கம் பிரபுவின் வீட்டுக்குச் சென்று அவர் காலை காலை அதிவேகமாகச் செல்லக்கூடிய வண்டி ஒன்றை அமர்த்திக்கொண்டு சரியாக ஒன்பது மணிக்கெல்லாம் நமது தெருவுக்கு அருகில் எங்கேனும் மறைவாக இருக்கும்படி சொல். அவர் அப்போது பிரயாணத்துக்குத் தயாராக இருக் கவேண்டும். மற்றவைகளை யெல்லாம் நான் பார்த்துக்கொள் கிறேன். நீ நமது பின்புறவாயிலின் சாவியை மட்டும் எப்படி யாவது சம்பாதித்துக் கொண்டுவா. நான் இன்று இரவு வெளி யில் போகவேண்டியிருக்கிறது,' என்று கூறினுள்.

இதைக் கேட்டதும் ஆச்சர்யமடைந்த பார்வதி, 'நீயா வெளியே போகிருய்? எங்கே, என்ன காரியமாகப் போகி ருய்' என்று ஆவலுடன் கேட்டாள். அதற்கு ராஜேஸ்வரி 'ஆம்; நான்தான் போகிறேன். இப்போது ஒரு விஷயத்தை யும் கேட்கவேண்டாம். என் காரியங்களெல்லாம் சரிவர முடி ந்தபின் தானே சொல்வேன். நமது திட்டம் வெற்றியடைந்து என் சகோதரி காலை காலை தப்பிச் செல்வாளானல் நீயும் அவ ளுடன் போய் விடவேண்டும். இப்போது நீ வேலையை வீணுக்காமல் உடனே துளசிங்கம் பிரபுவின் வீட்டுக்குப் போய் வா!' என்ருள். பார்வதியும் அவ்வாறே தன் வேலை யைக் கவனிப்பதற்காகப் போய்விட்டாள். ராஜேஸ்வரியும் பொது ஹாலுக்குச் சென்ருள். அங்கே அவள் எதிர்பார்த்த படி ஹேமவதி சிமாட்டியும், கற்பகமும் போலீஸ்காரனும் கைதியும்போல் உட்கார்ந்திருந்தார்கள். அன்று பகல் முழு தும் தூங்கிக்கொண்டிருந்த தினகரன் அப்போது அங்கே தற்செயலாய் வந்தான். அவன் தன் தாயைப் பார்த்ததும்

'தாயே நீங்களெல்லாம் நாளை காலை கிருஷ்ணகிரிக்குப் போவதாகக் கேள்விப்பட்டேன். உண்மைதானா?' என்று கேட்டான். உடனே சிமாட்டியும், 'ஆம், அப்படித்தான் உத்தேசித்திருக்கிறேன்' என்றாள். அப்போது தினகரன், 'சந்தோஷம்; போய் வாருங்கள். சௌக்கியமாகத் திரும்புங்கள். நான் மட்டும் இனி அந்தப் பக்கமே திரும்புவதில்லை யென்று தீர்மானித்திருக்கிறேன்' என்றான். அவன் விஷயத்தில் சிறிதும் கவலை இல்லாதவள்போல் சிமாட்டி, 'உன்னை யார் வரச்சொன்னார்கள்? ஆகையால் நீ ஒன்றும் வியாக்யானம் செய்யவேண்டியதில்லை. நீ உன் கடன்லிஸ்ட்டை எடுத்துக்கொண்டு மனமோகனரிடம் சென்றால் அவர் அவற்றைத் தீர்த்து விடுவார். மற்றப்படி உன் செலவுக்குவேண்டிய பணமும் முறைப்படி கிடைக்கும்' என்றாள். உடனே அவன் வந்தனம் செலுத்திவிட்டு அலட்சியமாகவும் அரட்டைத்தனமாகவும் அங்கிருந்து நடந்து சென்றான். அவன் அங்கிருந்து போனதில் அவனைப் பெற்ற தாயார் திருப்தியே அடைந்தாள்.

அவன் போனபின்னர் ராஜேஸ்வரி தன் தாயைப் பார்த்து, 'எனது சகோதரன் உன்னைக் கேட்டது வாஸ்தவமாயின் நீ நாளைய தினம் கிருஷ்ணகிரிக்குப் போவது நிச்சயமென்று தெரிகிறது. அதுஉண்மைதானா?' என்று கேட்டாள் அதற்குத் தாய், 'ஆம், நான் நாளைய தினம் போவதென்று தான் நிச்சயித்திருக்கிறேன்.' எனவும் ராஜேஸ்வரி, 'சரி, சந்தோஷம். நாளை காலை எத்தனை மணிக்குப் புறப்படுகிறாய் என்பதைச் சொல்லமுடியுமா? ஏனெனின் நானும் பிரயாணத்திக்குத் தயாராகவேண்டு மல்லவா?' என்று கேட்டாள். அதற்கு ஹேமவதி சிமாட்டி, 'எத்தனை மணிக்கு என்பதை நான் இன்னும் முடிவுசெய்யவில்லை,' என்று சொன்னாள். உண்மையில் எத்தனை மணிக்கு என்பதை அவள் முடிவு செய்யாமல்

இல்லை யென்பது வாசகர்கள் அறிந்ததே. ராஜேஸ்வரிக்கும் தெரியக் கூடாதென்பதும் தெரிந்தால் ஏதேனும் சூழ்ச்சி செய்து விடுவார்களாதலால் அதற்கு இடம் கொடுக்கக் கூடா தென்பதுமே சீமாட்டியின் அபிப்பிராயம். ராஜேஸ்வரிக்கு அவர்கள் புறப்படும் வேளை தெரிந்திருந்தும் ஒன்றும் அறி யாதவளைப்போல், 'அப்படியானால் நான் இன்று இரவே என் வேலைகளை யெல்லாம் முடித்துக்கொண்டு நாளை காலை எழுந்திருக்கும்போதே பிரயாணத்துக்குத் தயாராய் விடு கிறேன்,' என்று சொன்னாள்.

ஹேமவதி சீமாட்டி அதற்கொன்றும் பதில் சொல்லா மல் எதிரிலிருந்த ஒரு புஸ்தகத்தைப் படிப்பவள் போல அதைக் கையில் எடுத்தாள். அப்போது ராஜேஸ்வரியும் தன் சகோதரியைப் பார்த்து எதற்கும் பயப்பட வேண்டாம் என்று தைரியம் சொல்வதுபோல் ஜாடை காட்டி விட்டுத் தன் தாயாரை லட்சியம் செய்யாமலும், அவளிடம் சொல்ல வேண்டுமென்னும் கவலை இல்லாமலும் அங்கிருந்து போய் விட்டாள். அவள் தன் அறைக்குச் சென்றதும் சிறிது நேரம் இரத்தினபுரி நகரின் படத்தை எடுத்து வைத்துக் கொண்டு தினகரன் தெரிவித்த மாது இருக்கும் இடத்துக்கு வழி தெரிந்து கொண்டாள். அப்போது பார்வதியும் அங்கே வந்து, 'துளசிங்கம் பிரபு சம்பந்தமான ஏற்பாடுகளெல்லாம் முடிந்து விட்டன. அவர் நாளை காலை ஒன்பது மணிக்கெல் லாம் ஒரு டாக்ஸியுடன் நமது தெருவுக்கு வடவண்டை சந் தில் மூட்டை முடிச்சுகளுடன் காத்திருப்பார். இதோ பின் புற வாயிலின் சாவியைக் கொண்டுவந் திருக்கிறேன். இன் னும் ஏதேனும் வேலை இருக்கிறதா' என்று கேட்டாள். அதற்கு அவள், 'வேலை ஒன்றுமில்லை. நீ அதிக நேரம் இங்கு இருக்க வேண்டாம். நீ போய் வீட்டில் எல்லாரும் தூங்கிய

பிறகு நிசப்தமானதும் என்னிடம் வந்து சொல் எனக் கூறியதும் பார்வதி போய்விட்டாள். பிறகு ஒரு மணி நேரமும் கழிந்தது.

சுமார் பதினொரு மணி இருக்கும், அப்போது பார்வதி ராஜேஸ்வரியின் அறைக்கு வந்து வீட்டில் எல்லாரும் தூங்குவதாகவும், எங்கும் நிசப்தமாகவே இருப்பதாகவும் தெரிவித்தாள். ராஜேஸ்வரி உடனே அழுக்கானதும் கிழிந்து தைக்கப்பட்டதுமான உடைகளை அணிந்துகொண்டும் ஒரு பழைய கம்பளியைப்போர்த்துக்கொண்டும் ஒரு எளிய மாதைப்போல் வேடமணிந்துகொண்டு புறப்பட்டாள். பார்வதி இரவெல்லாம் தனக்காக விழித்திருக்க வேண்டியதில்லை என்று சொல்லிவிட்டுத் தான் பின்புற வாயிலைத் திறந்துகொண்டு வெளியே போய் வெளிப்பக்கம் பூட்டிக்கொண்டு விரைந்து சென்றாள். சிறிது தூரம் சென்றதும் வாடகை வண்டிகள் நிற்கும் இடத்திலுள்ள ஒரு வண்டியை அமர்த்திக்கொண்டு தான் போகவேண்டிய ரஸ்தாவைக் குறிப்பிட்டாள். வண்டியும் வேகமாகச் சென்றது. வண்டியை ரஸ்தாவில் நிறுத்திவிட்டுத் தான் இரண்டொரு மணி நேரம் பொறுத்து வருவதாகவும் அதுவரை காத்திருக்கும் படியும் சொல்லிவிட்டு இரவு பன்னிரண்டுமணி வேளையில் தன் ஜன்மத்திலேயே முதல் முறையாக மனித சஞ்சாரமில்லாத ஓரிடத்தில் நடந்து சென்றாள். நிலா வெளிச்சம் பிரகாசமாய் இருந்ததால் அவள் தைரியமாக நடந்தாள் என்றாலும் அதுவே முதல் முறையாதலால் இடையிடையே சிறிது அஞ்சினாள். அப்படிப்பட்ட இடங்களில்தான் கொலையும்களவும் நடக்கும் என்று அவள்கருதியதால் பயப்படக் காரணமாயிற்று. ஆகவே அதற்குமேல் அடி எடுத்து வைக்கவும் அஞ்சினாள். ஆயினும் தான் வந்த காரியத்தை முடிக்கவேண்டாமா? எனவே தைரி

யமாக முன்னோக்கி நடந்தாள். சிறிது தூரம் சென்றதும் தோட்டமத்ய விடுதியாகிய தினகரன் குறிப்பிட்ட கட்டடத்தை அடைந்தாள். உடனே கதவைத் தட்டினாள்.

சொற்பநேரம் வரை எத்தகைய பதிலும் வரவில்லை. நிசப்தமாகக் காணப்பட்டது. அம்மாது வீட்டில் இல்லையோ என்று ராஜேஸ்வரி சந்தேகித்தாள். ஆகவே அவள் மறுபடியும் ஒருமுறை பலமாகத் தட்டினாள். அந்த ஓட்டை மாளிகையின் ஜன்னல் கதவு திறக்கப்பட்டது. அங்கே இருந்து கொண்டு, 'யார் அது?' என்று கேள்வி கேட்கப் பட்டது. அது ஒரு பெண்மணியின் தொனிபோல் இருந்தது. ஆகவே ராஜேஸ்வரியும் தைரியமாய், 'நான் முக்கியமாக உன்னுடன் ஒரு விஷயத்தைப் பற்றிப் பேசவேண்டி யிருக்கிறது' என்று பதில் அளித்தாள். அப்போதும் அம்மாது அங்கிருந்து கொண்டே, 'நீ யார்? எங்கிருந்து வருகிறாய் என்பதைச் சொல்,' என்று கேட்டாள். அப்போது ராஜேஸ்வரி, 'ஹேமவதி சீமாட்டியின் மாளிகைக்கு இரண்டொரு முறைவந்தது நீதானே' என்று கேட்கவும் அவள், 'ஆம்; நான்தான் சிறிது நேரம் இரு. நான் வந்து கதவைத் திறக்கிறேன்' என்று கூறி விட்டு மாடியிலிருந்து கீழே கையில் ஒருவிளக்குடன் இறங்கி வந்து கதவைத் திறந்தாள். அம்மாதைப் பார்த்ததும் ராஜேஸ்வரி தான் தேடிவந்த மாது அவளே என்று நிச்சயித்துக் கொண்டாள். மரகதம் ராஜேஸ்வரியை உள்ளே அழைத்துச் சென்று, 'நீ ஹேமவதி சீமாட்டியின் குமாரியா?' என்று கேட்டாள். அதற்கு ராஜேஸ்வரியும், 'ஆம்; நான் ஹேமவதி சீமாட்டியின் குமாரிதான். என் தாயாரே என்னை மிகமுக்கியமான வேலையாக இங்கே அனுப்பினாள்' எனத்தெரிவித்தாள்

உடனே மரகதம், 'என்ன முக்கிய வேலை' என்று ஆவலுடன்கேட்டாள். அதற்கு ராஜேஸ்வரி, 'ஹேமவதிசீமாட்டி

உன்னை நாளை காலை சரியாக ஒன்பது மணிக்கு ஒரு முக்கிய வேலையாகப் பார்க்க விரும்புகிறாள். அக்குறிப்பிட்ட வேளையில் நீ எங்கள் வீட்டுக்கு வர முடியுமா?' என்று வினவினாள். இவ்வாறு அவசரமாக அழைப்பு வந்திருப்பதைக் கண்டு ஆச்சர்யமடைந்த மாகதம், 'கட்டாயம் நான் காலைகாலை ஒன்பது மணிக்கு அங்கே இருப்பேன். என்ன அவசரம்? ஏதேனும் தவறு ஏற்பட்டுவிட்டதா?' என்று கேட்டாள். அப்போது ராஜேஸ்வரி விஷயத்தை மழுப்பும்பொருட்டு, 'நீ அங்குவரும் போது என் தாயாரே விவரிப்பாள். பெரும்பாலும் அது உனக்கும் அவளுக்கு மிடையிலுள்ள இரகசியம் சம்பந்தப் பட்டதாகவே இருக்கும்! என்று சொல்லி முடிக்கு முன்னர் பிரமையுடன் மாகதம், 'ஓ, இந்த இரகசியம் உனக்கும் தெரியும்படி உன் தாயார் நடந்துகொண் டிருப்பாள் என நான் நினைக்கவில்லையே,' என்றாள். அதற்கு ராஜேஸ்வரி, 'நீ கேட்பது ஆச்சர்யமாக வல்லவோ இருக்கிறது. அந்த இரகசியம் எனக்குத் தெரியும்படி அவள் நடந்து கொண்டிரா விட்டால் இந்த வேளையில் அதுவிஷயமாக என்னை அனுப்புவாளா என்பதை நீயே யோசித்துப்பார். என் தாயாரை நீ அடக்கிவைத்திருப்பதற்கு ஆதாரமான இரகசியம் எனக்குத் தெரியாமல் இல்லை;' என்று சொல்லி அம்மாது ஏதேனும் அது சம்பந்தமாகத் தன்னுடன் பேசுவாள் என ஆவலுடன் எதிர்பார்த்தாள். மாகதமும் தந்திரசாலியே யென்றாலும் வேளையின் பயனாக அவள் ஏமாந்து ராஜேஸ்வரியிடம் அந்த இரகசிய சம்பந்தமாய் மேலும் மேலும் பல விஷயங்களைப் பேச ஆரம்பித்தாள். அவளும் எதையும் விட்டுக் கொடுக்காமல் எல்லாம் தெரிந்தவள்போல் பக்குவமாகப் பேசிக்கொண்டிருந்து மாகதத்தினிடமிருந்து இரகசியத்தை இழுத்துவிட்டாள். ஆகவே ராஜேஸ்வரி அவ்விடத்தை விட்டுப் புறப்படும்போது அவளுக்கு வேண்டிய விஷயங்களை யெல்லாம் அறிந்துகொண்டு

விட்டாள். மேலும் ராஜேஸ்வரி புறப்படும்போது மாகதத்தினிடம் பத்து பவுன்களைக் கொடுத்ததால் அவள் தவறாமல் மறுநாள் ஒன்பது மணிக்கு அங்கு வந்துவிடுவதாக உறுதி கூறினாள்.

ராஜேஸ்வரி மாகதத்தின் வீட்டைவிட்டு வெளியே வந்ததும் தான் ஏறிவந்த வண்டியின் அருகில் வருவதற்குள் பலவிதமாகச் சிந்தித்தாள். அவளது தாயாரின் இரகசியத்தை அறிந்துகொண்டு விட்டாள். அதைக் கேட்ட மாத்திரத்தில் அவள் மனம் நடுங்கியது. தான் கேட்டதும் நடப்பதும் கனவோ நனவோ என்றும் நினைத்தாள். ஆகவே இரண்டொருமுறை அவள் ரஸ்தாவில் இடையிடையேநின்று தான் நடப்பதும் விழித்துக்கொண் டிருப்பதும் மெய்தானு என்று தெரிந்துகொள்ள வேண்டியதாயிற்று. உலகமே பொய்யோ என்றும் நினைத்தாள். இவ்வாருகத் தான் ஏறிவந்த வண்டியின் அருகில்சென்ருள். இரவுகழிந்து விடியற்காலை என்னும் நேரம் வந்துவிட்டது. உறங்கிக்கொண்டிருந்த உலகமானது மறுபடியும் விழித்துக்கொண்டு தன் வேலையைக் கவனிக்கத் தயாராகும் நிலைமையில் இருக்கிறது. விடியற்காலை நான்கு மணி சுமாருக்கு அவள் தன் வீட்டுக்குச் சிறிது தூரத்திலுள்ள ரஸ்தாவிலேயே வண்டியை விட்டிறங்கி அவனுக்குச் சேரவேண்டிய வாடகையைக் கொடுத்து நன்ருகப் போர்வையால் மூடிக்கொண்டு யாருக்கும் தெரியாதபடி சாசரவென்று நடந்து பின்புற வாயிலைத் திறந்துகொண்டு பழையபடி பூட்டிவிட்டு அவள் போனதும் வந்ததும் யாருக்கும் தெரியாதபடி தன் அறைக்குச் சென்று படுத்துக்கொண்டுவிட்டாள். இரவு முழுதும் தூங்காமல் இருந்ததுடன் தனக்கு முன்பின் வழக்கமில்லாத பல வேலைகளையும் செய்ததால் களைப்புற்றிருக்கவே நன்ருகத் தூங்கிவிட்டாள். தான் மாகதத்தினிடம் பேசியதெல்லாம் மீண்டும் அவளுக்கு கனவில் தோன்றிற்று.

மறுநாள் காலை மணி எட்டு அடித்ததும் ராஜேஸ்வரி விழித்துக் கொள்ளாமல் தூங்கிக்கொண்டிருக்கிறாள். அப்போது பார்வதி அவ்வறையின் கதவைத்தட்டினாள். உடனே ராஜேஸ்வரி எழுந்து கதவைத்திறந்தாள். அறையில் நுழைந்த பார்வதி தன்னிடம் ராஜேஸ்வரி முன்நாள் இரவு போய்வந்த விவரங்களை யெல்லாம் சொல்வாள் என்று மிக ஆவலுடன் எதிர் பார்த்தாள். ஆனால் ராஜேஸ்வரியோ எதையும் சொல்ல விருப்பமில்லாதவளாய்ப் பிறகு நல்ல சந்தர்ப்பம் கிடைக்கும் போது சொல்வதாக வாக்களித்துவிட்டு உடனே அவள்செய்யவேண்டிய வேலையொன்றைச் சொல்லி அனுப்பிவிட்டாள். பார்வதியும் தான் ஏமாற்றப் பட்டுவிட்டதாக உணராமல் ராஜேஸ்வரி எல்லாவற்றையும் பிறகு தன்னிடம் சொல்வாள் என்னும் நம்பிக்கையுடன் சந்தோஷமாக இருந்தாள். அவள் போனபிறகு சுமார் எட்டரை மணிக்கு மற்றொரு வேலைக்காரியாகிய இந்திராணி என்பவள் ராஜேஸ்வரியின் அறைக்கு வந்து 'சீமாட்டியார் சரியாக ஒன்பது மணிக்கெல்லாம் புறப்படுவார்கள். நீங்கள் பிரயாணத்துக்குத்தயாராய் இருப்பீர்கள் என்றும் காலை ஆகாரத்துக்கு வருவீர் என்றும் அவர் எதிர்பார்க்கிறார்' என்று தெரிவித்தாள். அதைக் கேட்டதும் ராஜேஸ்வரி, 'இதோ, நான் எடுத்துக்கொண்டு வரவேண்டிய பெட்டி இங்கே இருக்கிறது, யாராவது ஒரு ஆளைக் கூப்பிட்டு அதைக் கீழே கொண்டுவரச் சொல்' என்று சொல்லிக் கொண்டே அவளும் கீழே இறங்கி ஆகார அறைக்குச் சென்றாள்.

அங்கு தன் தாயும் சகோதரியும் முன்னமே வந்திருந்தார்கள். ராஜேஸ்வரியைக் கண்டதும் அவளது தாயார் ஏதேனும் பேசவேண்டுமென்று நினைத்தாள். ஏனெனில் சொற்ப நேரத்துக்கெல்லாம் அவர் பிரயாணம் புறப்படப் போகிறார்

கள். நீண்ட நேரம் வண்டியில் ஒன்றாக இருந்து பிரயாணம் செய்ய வேண்டியிருக்கும். அப்போதும் மூவரும் ஒருவருக் கொருவர் பேசாமல் மௌனமாய் இருப்பதென்றால் கஷ்ட மாகத்தானே இருக்கும். ஆதலால் இப்போது முதலே உபா யமாகப் பேசிவைத்தல் நலம் என்று கருதினாள். ஆகவே சீமாட்டி தன் மகளைப் பார்த்து, 'ராஜேஸ்வரி! உன் முகம் சிறிது வெளுத்திருக்கிறதே, என்ன காரணம்' என்று பரிவு டன் கேட்பதுபோலக் கேட்டாள். அதற்கு அவள், 'தாயே! எனக்கு நேற்றிரவு நல்ல தூக்கம் வரவில்லை. அதனால் கடுமை யான தலைவலியாய் இருக்கிறது,' என்றாள். அப்போது சீமா ட்டி, 'அப்படியானால் நாம் செய்யும் பிரயாணத்தால் உன் உடம்பு குணப்பட்டுவிடும்' என்றதும் ராஜேஸ்வரியும், 'ஆம், நானும் அப்படித்தான் நம்புகிறேன்' என்றாள். இவ்வாறாக அவர்கள் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். ஒன்பது அடிக்கப் பத்து நிமிஷம் இருந்தபோது ஹேமவதி சீமாட்டி, 'நாம் பிரயாணப் படவேண்டிய வண்டி தயாராக வாயிலில் வந்து நின்றுவிடும். ஆதலால் நாமும் தயாராக வேண்டியது தான். நமது இரட்டைக் குதிரை வண்டியில் முன் பக்கம் இரு சேவகர்கள் உட்காருவார்கள். வேலைக்காரிகளாகிய பார்வதியும் இந்திராணியும் நம்முடன் வண்டியின் பின் பெட் டியில் உட்காருவார்கள்,' என்று தெரிவித்தாள்.

பிறகு ராஜேஸ்வரி தன் அறைக்குச் சென்றாள். சீமாட் டியும் கற்பகமும் சீமாட்டியின் அறைக்குச் சென்றார்கள். ஆனால் அப்போதும் ராஜேஸ்வரி தன் தாயையும் சகோதரியை யும் விட்டுப் பிரியும்போது எப்படியோ தன் சகோதரிக்குமட் டும் தெரியும்படி ஜாடைகாட்டி அவளை விடுவிக்க ஏற்பாடு செய்திருப்பதாகத் தெரிவித்தாள். ஆயினும் தன்னைவிடுவிக்க ராஜேஸ்வரி என்ன வழியை அனுஷ்டித்து வருகிறாள் என்ற

பதே தெரியாதவளாய்க் கற்பகம் சந்தேக புத்தியுடனேயே இருந்தாள். இருந்தாலும் எப்படியாவது விடுதலையடைந்தால் போதும் என்று நினைத்துக்கொண்டு சிறிது ஆறுதல் அடைந் தாள். அவர்கள் பிரயாணம் புறப்படவேண்டிய வண்டியும் அம்மாளிகையின் முன் வந்து நின்றுவிட்டது. சாமான்களை யெல்லாம் கொண்டுவந்து சேவகர்கள் வண்டியில் வைத்தார் கள். வேலைக்காரிகளும் வேலைக்காரர்களும் பிரயாணத்துக்குத் தயாராக வந்து நின்றிருந்தார்கள். ஹேமவதி சீமாட்டியும் அவளது இரு குமாரிகளும் வரவேண்டியதுதான் பாக்கி. அவர்களும் பிரயாணத்துக்கான உடையை அணிந்துகொண்டு மாடியைவிட்டு இறங்கி வந்தார்கள். மணியும் ஒன்பது அடித் தது. கற்பகம் எங்கும் ஓடிப்போகாதபடி இப்போதுதான் சர்வ ஜாக்கிரதையுடன் கவனித்துக்கொள்ள வேண்டுமென் னும் எண்ணத்துடன் ஹேமவதி சீமாட்டி அவள் கையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டிருந்தாள். அவளுக்குப் பின் னல் ராஜேஸ்வரி நடந்துவந்தாள். அவர்கள் மூவரும் ஹாலைக் கடந்து மாளிகையினின்றும் வெளியே வந்தார்கள். வேலைக் காரன் ஒருவன் வண்டியின் கதவைத் திறந்து பிடித்துக் கொண்டிருக்கிறான். தான் நினைத்தபடி எல்லாக் காரியங்க ளும் நிறைவேறிவிட்டதைக் கண்டு தான் ஜெயித்துவிட்டது போல் ஹேமவதி சீமாட்டி மனத்திலேயே ஒருவிதமான சந் தோஷத்தை யடைந்தாள். ஆனல் தான் நினைத்தபடி காரி யம் நடக்கப் போகிறது என்பதை அறிந்து ராஜேஸ்வரியும் தாயைப்போலவே சந்தோஷப்பட்டாள்.

ஏனெனின் சிறிது தூரத்தில் தன் ஏற்பாட்டின்படி மாகதம் மிக வேகமாக வந்து கொண்டிருப்பதைப் பார்த் தாள். சீமாட்டி, 'கற்பகம்! நீ முதலில் வண்டியில் ஏறு

என்று சொல்லி முடிந்ததும் எதிரில் மாகதம் வந்து நிற்ப தைக்கண்டாள். உடனே சீமாட்டியின் முகம் வெளுத்துவிட்டது. பீதியால் உடம்பு முழுதும் நடுங்க ஆரம்பித்தது. தான் மெய்மறந்தவளாய்த் தான் செய்வது இன்னதென்றே தோன்ருதவளாய் கற்பகத்தையும் விட்டுவிட்டு அம்மாதை நோக்கிச்சென்ருள். அப்போது ராஜேஸ்வரி மிக அவசரமாகத்தன் தங்கையினிடம், 'ஓடிப்போ, நிற்காதே நமது தெருவுக்கு அடுத்த சந்தில் வண்டி தயாராக இருக்கிறது. ஓடு' என்று மெதுவாகச்சொன்னுள். அவள் சொன்னதுதான் தாமதம். கற்பகம் தன் மூத்த சகோதரியான ராஜேஸ்வரியை ஒரு முறை அன்புடன் பார்த்துவிட்டு அவள் குறித்த இடத்துக்கு ஓடிப்போனுள். நம்பிக்கைக் குரியவளும் கற்பகத்தினிடம் அதிக அனுதாபமும் அபிமானமும் கொண்டவளுமான பார்வதியும் கற்பகத்தின் பின்னுலேயே ஓடலானுள். அவர்கள் இருவரும் இவ்வாறு ஓடுவதைக்கண்டு இதர வேலைக்காரர்கள், வேலைக்காரி இந்திராணி மற்றும் அங்குக் கூடியிருந்த சிலஜனங்கள் ஆகிய எல்லாருமே ஆச்சர்யப் பட்டனர். ஆனல் ராஜேஸ்வரி மட்டும் நின்ற இடத்திலேயே ஏதோ பெரிய வெற்றி பெற்று விட்டவள் போல் சந்தோஷத்துடன் சிரித்துக்கொண்டே நின்றிருந்தாள். இப்போது நாம் கூறியதெல்லாம் எழுதவும் படிக்கவும் சிலநிமிஷங்கள் ஆகின்றதே யொழிய அங்கு உண்மையில் நிகழ்ந்த காரியங்கள் அரை நிமிஷத்தில் நடந்து முடிந்துவிட்டன.

ஹேமவதி சீமாட்டி மாகதத்தைப்பார்த்து, 'இந்த வேளையில் எங்கேவந்தாய், என்று கேட்பதற்குள் இவ்வளவு காரியங்களும் நிகழ்ந்திருக்கின்றன. ஹேமவதி சீமாட்டி கேட்டகேள்வியைக் கண்டு மாகதம் ஆச்சர்ய மடைந்தவளாய், 'உன் கட்டளையின் படிதான் இங்கோத்தில் குறிப்

பிட்டபடி வந்தேன்,' என்று சொன்னாள். விஷயம் விளங்கா மல் சீமாட்டி திக்பிரமை யடைந்து, 'என்னுடைய கட்டளை யா? நீ சொல்வதொன்றும் எனக்கு விளங்கவில்லையே?, என்று கேட்டான். அப்போது மாகதம், 'உன் குமாரிகளில் ஒருத்தியை நீ என்னிடம் நேற்று இரவு அனுப்ப வில்லையா? என்று வினவவும் ஹேமவதி சீமாட்டி ஒன்றும் தோன்றாத வளாய் ஓவென்று அலறிப் பின்பக்கம் திரும்பிப் பார்த்தாள் ராஜேஸ்வரி மட்டும் நிற்பதைக் கண்டாள். உடனே அச் சீ மாட்டி வண்டியின் அருகில் ஓடிவந்து வண்டியில் எட்டிப் பார்த்தாள். உள்ளே அவள் எதிர்பார்த்தபடி கற்பகத் தைக்காணோம். ஏதோ சூழ்ச்சியும் தந்திரமும் நடந்திருக்கிற தென்று தெரிந்து கொண்டாள். உடனே ராஜேஸ்வரியின் முகத்தை உற்றுப் பார்த்தாள். அவள் தான் ஏதோ சூழ்ச்சி செய்திருக்கிறாள் என்றும் அந்த சூழ்ச்சியில் அவள் வெற்றி பெற்று விட்டதற்காக அதிக சந்தோஷத்துடன் இருக்கிறாள் என்றும் தெரிந்து கொண்டாள். என்ன செய்வ தென்று தோன்றாமல் சீமாட்டி ஒரு நிமிஷ நேரம் திக்பிரமையுடன் நின்றாள். பிறகு தனக்குள் ஏதோ முடிவு செய்து கொண்ட வள் போல் ராஜேஸ்வரியை ஒருமுறை விரைத்துப் பார்த்து விட்டு மாகதத்தை உள்ளே வரும்படி அழைத்துக் கொண்டு வீட்டில் நுழைந்தாள்.

சீமாட்டி உள்ளேபோய் விட்ட பின்னர் தான்மட்டும் ஏன் தெருவில் பலர் பார்க்க நின்று கொண்டிருக்க வேண்டு மென்னும் எண்ணத்துடன், ஒரு சேவகனைக் கூப்பிட்டு, 'என் தாயார் என்னைத் தேடும்போது நான் என் அறையில் இருப்பதாகச் சொல்லிவிட்டு உடனே என்னை வந்து கூப்பிடு என்று சொல்லிவிட்டு அவளும் வீட்டில் தன் அறைக்குப் போய்விட்டாள். வேலைக்காரர் களெல்லாம் ஒருவரை யொ

ருவர் பார்த்து விழித்தனர் என்ன ஆச்சர்ய மென்று ஒரு வரை யொருவர் விசாரித்தனர். ஆனால் ஒருவருக்காவது இந்த மர்மம் விளங்கவில்லை. கற்பகம் தன் வேலைக்காரியாகிய பார்வதியுடன் ஓடிப்போனதையும் ஹேமவதி சீமாட்டி யாரோ ஒரு மாதைக் கண்டு திடுக்கிட்டுப் பீதியடைந்ததையும் ராஜேஸ்வரி இதனாலெல்லாம் ஏதோ வெற்றி யடைந்தவள் போல் சந்தோஷ மடைந்ததையும் கண்டு ஆச்சர்யப் பட்டனர். கற்பகம் மட்டும் வேறு யாருடனோ ஓடிப்போகவே அவ்வாறு சென்று விட்டிருக்க வேண்டு மென நினைத்தனர். மற்ற விஷயங்கள் தான் ஒன்றும் புலனாகவில்லை. ராஜேஸ்வரி தன் அறைக்குச் சென்று பத்து நிமிஷத்துக் கெல்லாம் அவளுடைய தாயாரே அங்கு வந்தாள். தாயின்முகம் பிணம் போல் வெளுத்திருந்தது. கண்களின் பிரகாசம் மறைந்து விட்டது. முகத்தில் தெளிவில்ல. பேசவே முடியாமல் அவள் அவஸ்தைப்பட்டாள் சீமாட்டி தன்மகள் ராஜேஸ்வரியிடம், 'நான் புறப்படத்தயாராக இருக்கிறேன்.என்றாள்.தன் தாயார் இன்னமும் பிரயாணத்தைக் கைவிடாமல் என்பதை அறிந்ததும் ராஜேஸ்வரி ஆச்சர்யப் பட்டாள். எனினும் அவள் தன் தாயினுடன் புறப்பட்டாள். ஹேமவதி சீமாட்டி தன் முகத்தில் ஏற்பட்டிருக்கிற மாறுதலை யாரும் அறிந்து கொள்ளலாகா தென்னும் எண்ணத்துடன் தன் முகமூடியால் முகத்தை மூடிக் கொண்டாள். சர சர வென்று நடந்துசென்று வண்டியில் ஏறிக் கொண்டாள். ராஜேஸ்வரியும் தாயின் பின்னாலேயே வண்டியில் ஏறியதும் ஒருகால் தன் சகோதரி கற்பகத்தை மீண்டும் பிடித்துக் கொண்டு வந்துவிட்டார்களோ என்னும் எண்ணத்துடன் நன்றாகக் கவனித்தாள். வண்டியில் எங்கும் அவள் இல்லாததால் மறுபடியும் சந்தோஷத்தையடைந்தாள்.

அவ்விருவரும் வண்டியில் ஏறிக்கொண்ட பின்னரும் வண்டியோட்டி, 'சீமாட்டியே! இன்னும் சிறிது நேரம் காத்திருப்பதா அல்லது வண்டியைச் செலுத்தலாமா?' என்று கேட்டான். சீமாட்டியும், உடனே, 'நாம் காத்திருக்கவேண்டியதில்லை; உடனே புறப்படவேண்டியதுதான். வண்டியைச் செலுத்து' என்றாள். அவள் அவ்வாறு சொன்னதைப் பார்த்தால் யாரோ ஒரு பைத்தியக்காரி உளறியதுபோல் காணப்பட்டதேயொழிய அறிவுள்ளமாது சொன்னதுபோல் தெரியவில்லை. வண்டிக்காரனும் தன்பீடத்தில் ஏறிக்கொண்டு வண்டியைச் செலுத்த ஆரம்பித்தான். வண்டியும் மாளிகையை விட்டுப் புறப்பட்டுவிட்டது. ராஜேஸ்வரியின் காதலனை மோகன சுந்தரத்தைச் சீமாட்டி பலவிதமாக மிரட்டித் திட்டுரொன்று மாளிகையினின்றும் அனுப்பிவிட்டு அதனால் சீமாட்டி ஏதோ வெற்றியடைந்துவிட்டதுபோல் சந்தோஷப் படவில்லையா? அப்போதே ராஜேஸ்வரியும் தனக்கும் ஒரு காலம் வருமென்றும் அச்சமயத்தில் தான் சீமாட்டியின்மீது வெற்றிகொண்டு சந்தோஷப்பட முடியுமென்றும் கூறியிருக்கவில்லையா? அதுபோலவே இப்போது தான் திட்டங்களையெல்லாம் தோற்கடித்ததுடன் கற்பகத்தையும் விடுவித்துவிட்டுத் தாயின் மீது வெற்றி கொண்டு ராஜேஸ்வரி சந்தோஷப்படுவது சகஜமே. யானைக்கொரு காலம் வந்தால் பூனைக்குமொரு காலம் வருமென்பது நிச்சயம். உயர்ந்த நிலைமையில் உள்ளவன் அநாவசியமாகத் தாழ்ந்த நிலைமையிலுள்ள வனைத் தொந்தரை செய்தால் அந்த உயர்ந்த நிலைமையிலுள்ளவனுக்கும் எப்போதாவது ஒரு சமயத்திலாவது தொந்தரை ஏற்படுமென்பது நிச்சயம். ஆதலால் யாரும் யாரையும் தொந்தரை செய்யாமல், ஒருவர் மீது ஒருவர் வெற்றி கொண்டு விட்டதாக வீண் கர்வமடை

யாமல் எல்லாரும் சௌகரியமாக இருக்க வேண்டு மென்னும் எண்ணத்துடன் ஒவ்வொருவரும் வாழ்க்கையை நடத்தினால்தான் உலக வாழ்க்கையே எல்லா மனிதர்களுக்கும் இன்பமானதாக இருக்கும்.

54-வது அத்தியாயம்

—:(o):—

வண்டியில் சம்பாஷணை

ஹேமவதி சீமாட்டியின் மாளிகையி னின்றும் புறப்பட்ட வண்டி வேகமாகச் சென்று இரத்தினபுரி யினின்றும் முக்கிய தெருக்களைக் கடந்து அதன் சுற்றுப் பக்கத்திலுள்ள கிராமங்களையும் தாண்டிற்று. பிறகு வயல்களையும், ஊர்களில்லாத ரஸ்தாக்களையும் தாண்டிக் கொண்டிருக்கிறது. அதற்குள் அவர்கள் புறப்பட்டு ஒருமணி நேரமாய் இருக்கும். அது வரையிலும் ஒருவராவது வாய் திறந்து பேசவில்லை. ஹேமவதி சீமாட்டி வண்டியின் ஒரு மூலையில் சாய்ந்த வண்ணம் உட்கார்ந்து கொண்டு மௌனமாக இருந்தாள். அவள் தன் முகத்தின் மீது இருந்த முகமூடியை அப்புறப்படுத்தாததால் அவளுடைய உணர்ச்சிக ளெல்லாம் எவ்வாறு இருக்கிறதென்று தெரிந்து கொள்ள ராஜேஸ்வரியால் முடியவில்லை. ராஜேஸ்வரி மட்டும் முன்னாள் இரவு நடந்தது, கேட்டது ஆகியவற்றையும், அன்று காலை நடந்ததையும் சிரித்துப் பல விதமாக நினைத்துக்கொண் டிருந்தாள். அவளுடைய சகோ

தரியாகிய கற்பகமும் அவளது காதலனை துளசிங்கம் பிரபுவும் அந்த நேரத்தில் எங்கே இருப்பார்கள் என்று யோசித்தாள். அப்படியே அவள் மனதில் அந்த வேளையில் தன் மனமார்ந்த காதலனை மோகனசுந்தரம் எங்கு இருப்பானோ என்னும் எண்ணமும் உதயமாயிற்று. அவள் அவ்வாறு பல விஷயங்களைப்பற்றி நினைத்துக்கொண்டிருந்தபோது ஹேமவதி சீமாட்டியும் மெதுவாக எழுந்து உட்கார்ந்துகொண்டு தன் முகமூடியையும் அப்புறப்படுத்தினாள். ராஜேஸ்வரி தன் தாயின் முகத்தைப் பார்த்ததும் பீதியடைந்தாள் சீமாட்டியின் முகத்தில் ராட்சதத்தன்மை வீசிற்று. ஹேமவதி அழகில் பெயர் பெற்றவள் என்று பெயர். அப்படியிருந்தும் அப்போது அவளுடைய முகம் விகாரமாகக் காணப்பட்டது. பழிவாங்க விரும்பும் கோரரூபத்துடன் விளங்கும் காளியைப் போல் காணப்படடாள். கோபத்தணல் அவளது அங்கம் முழுவதிலிருந்தும் வீசிக்கொண்டிருந்தது.

அப்படிப்பட்ட நிலைமையிலிருந்த ஹேமவதி சீமாட்டி தன் குமாரியைப் பார்த்து, 'ஏ, வெறுக்கத்தக்க பெண்ணே! நீ என்னதான் சாதித்து விட்டதாகத் தெரிந்துகொண்டிருக்கிறாய்?' என்று அகங்காரத்துடன் கேட்டாள். ராஜேஸ்வரி எதற்கும் பயப்படாமல் அடக்கத்துடனும் நிதானமாகவும், 'தாயே! நீ பிரஸ்தாபிப்பது கற்பகம் சம்பந்தப்பட்டதாக இருந்தால் நான் அது விஷயத்தில் வெற்றி பெற்றுவிட்டதாகவே நினைத்துப் பெருமை அடைகிறேன்,' என்றாள். அப்போது சீமாட்டி மிக ஆத்திரத்துடன், 'கற்பகமா! அவள் இறந்துபோகட்டும்; அதைப்பற்றி எனக்குக் கவலை இல்லை அவள் விஷயத்தில் நான் முழுகிவிட்டதாகவே நினைத்துக் கொள். அவள் இனி என் மகளே அலல. அவள் கலியாண

மான ஒருவனுடைய கள்ளக் காதலியாக இருக்கட்டும், அதைப்பற்றி எனக்கென்ன? அவமானம், பழிச் சொல் ஆபத்து இவற்றினிடையே அவள் தன் வாழ்க்கைய நடத் தட்டும். அந்தப் பரிதிபுரப் போக்கிரிக்கு அவளிடமிருக்கும் மோகம் தணிந்ததும் அவன் அவளை நாட்டாற்றில் விடுவது போல கைவிட்டுவிடுவான். அப்போது அவள் உலக அனு பவமென்னும் பாடத்தைக் கற்றுக்கொண்டு தான்செய்த காரி யத்துக்காக வருந்தி மன்னிப்புக்கேட்டுக்கொள்ள என்னிடம் வருவாள். அப்போதும் நான் அவளை ஏற்றுக்கொள்ளாமல் துரத்திவிடுவேன். அவள் வேறு விதியில்லாமல் இன்னொரு வனை மோகித்து அவனிடம் போவாள். அவனும் சொற்ப காலத்துக்குப் பின்னர் அவளை விட்டு விடுவான். இவ்வாறாக அவள் பலபேர் கைக்குமாறி அதனால் சமூகத்தில் அதிக இழி வை யடைந்து கடைசியில் தெருச் சந்தியில் நின்று விபசாரம் செய்யும் குச்சுக்காரியாய்ப் போவாள். கடைசியில் அவள் நோயுடன் எங்கேயாவது ரஸ்தாவின் ஓரத்தில் விழுந்து இறப் பாள். முனிசிபாலிட்டியார் தான் அவளது பிணத்தை எடுத் துப் போடவேண்டும்,' என்று சொல்லி முடித்தாள்.

அப்போது ராஜேஸ்வரி, 'தாயே! நீ கூறிய இந்த விவ ரத்தை நான் கேட்டுப் பீதியும் துக்கமும் அருவருப்பும் அடைகிறேன். எனினும் உன்னுடைய கொடுமையைப் பொறுக்க முடியாமல்தான் கற்பகம் அவ்வாறு போய் விட்டாள். அவள் எவ்வாறு அழிந்து போகவேண்டு மென்று நீ விரும்புகிறாயோ அதைத் தான் இப்போது சொல்லி இருக்கிறாயே தவிர அப்படித்தான் நடக்குமென் பது நிச்சய மில்லை,' என்று சொன்னாள். அதைக் கேட்ட தும் ஹேமவதி ஒரு புலி சீறி விழுவது போல் ராஜேஸ்வரி யின் மீது சீறி விழுந்து, 'அயோக்கியப் பெண்ணே! என்ன

கர்வத்துடனும் அரட்டைத்தனமாகவும் பேசுகிருயே! நேற்று இரவு நீ என்ன சூழ்ச்சியும் வஞ்சனையும் செய்தாய்?' என்று கேட்டாள். அப்போதும் அவள் சிறிதும் பணிந்து கொடுக்காமல், 'ஆ! நேற்று இரவு நான் எப்படிப்பட்ட இரகசியத்தைத் தெரிந்து கொண்டேன் தெரியுமா?' என்ருள். அப்போது ஹேமவதி, 'ஆ, இரகசியமா? ஆம், இரகசியம் தான். நீ அதைக் கிரகித்திருப்பாய் என்பதை நான் உணர்ந்து கொண்டேன். அந்த மாது மிகத் தந்திரசாலியாய் இருந்தும் உன்னுடைய சூழ்ச்சியிலும் சாமர்த்தியத்திலும் அவள் மயங்கி விட்டாள். ஓ, அந்த இரகசியம்; சரி. இஷ்டமிருந்தால் நீ ஊர் ஊராகப் போய்த் தண்டோரா போட்டு அதை எல்லாருக்கும் தெரிவித்து விட்டு வா. நீ அப்படிச் செய்ய விரும்புகிருயா? நான் இதுவரை அந்த இரகசியத்தை மூடி வைத்தேன். இனி அது தானுக வெளியாய் விடுவதில் எனக்கொன்றும் கஷ்டமில்லை. ஆதலால் நீ இந்த இரகசியத்தைத் தெரிந்துகொண்டிருக்கிருய் என்பதற்காக நான் கவலைப்படப் போவதில்லை. ஆகவே நான் உன் அதிகாரத்தில் இருப்பதாகவும், நீ என்னை மிரட்டலாமென்றும் நினைக்க வேண்டாம்,' என்று சிறிதும் லட்சியமில்லாமல் உலகத்தையே மதிக்காதவள் போல் பேசினுள். தன் தாயார் இவ்வளவு அலட்சிய புத்தியுடன் எதையும் பேசியதை ராஜேஸ்வரி எப்போதும் பார்த்ததில்லை. சீமாட்டி இன்னும் அதிகமாகவும் பேசியிருப்பாள்; ஆயினும் அதற்குமேல் ஒன்றும் பேசமுடியாமல் களைப்படைந்து மறுபடியும் வண்டியின் மூலையில் சாய்ந்து விட்டாள்.

அப்போதும் ராஜேஸ்வரி விடாமல், 'தாயே! இந்த இரகசியம் சம்பந்தமாய் நீ இவ்வாறு அலட்சியமாய் இருப்பது போல் பேசுவது பயன் படாது. இதுவரை நீ சொன்ன

தெல்லாம் பொய்யாக இருப்பதுடன் பொருத்தமற்றதாக வும் இருக்கிறது. நீ உயிரோடு இருக்கும் வரையில் அந்த இரகசியத்தை வெளியிட மாட்டாய். இதற்கிடையில் தற் கொலை செய்து கொள்வது என்று யோசித்தாலும் அப்போ தும் அதை எவருக்கும் சொல்லமாட்டாய். இறக்கும்போது காகிதத்தில் எழுதி வைத்து விட்டு அதனால் நீ இப்போது யாரை அதிகம் வெறுக்கிறாயோ அவனுக்குக் கஷ்டம் ஏற் படும்படி செய்வாயே யொழிய உன் உயிர் இருக்கு மட்டும் நீ உன்செயலை வெளியில் சொல்ல முடியாது,' என்றாள், அப்போது வெறிபிடித்த சிங்கம்போல் பதறி ராஜேஸ்வரி யை ஏதேனும் தொந்தரை செய்ய வேண்டு மென்னும் எண் ணத்துடன, 'எனக்கு எவ்வளவு தைரிய மிருக்கிறது? என் எண்ணம் என்ன? என்பதெல்லாம் உனக்கென்ன தெரியும்? நீ ஏன் இங்கே இருக்கிறாய். நீயும் உன் சகோதரியுடன்ஓடிப் போயிருக்கக் கூடாதா? அல்லது அந்தக் கள்ளக் காதலனை மோகன சுந்தரத்தின் பின்னால் போய் விட்டிருக்கக் கூடா தா? நீயார்; கேவலம் ஒரு வேலைக்காரனுக்கு உன் அங்கத் தையே ஒப்படைத்தவள் அல்லவா? சீ;' என்று சொன்ன போது ராஜேஸ்வரி அதிக ஆத்திரமும் பரபரப்பும் அடைந்தா ளென்றாலும் அதைக் காட்டிக் கொள்ள இஷ்டப்படாமல் ஒருவாறு அடக்கிக் கொண்டு நிதானமாகவே, 'தாயே, இன் னும் என்ன சொல்கிறாயோசொல். அப்போதும் உன்னுடன் அடி தடி சண்டைக்கு வரும்படி என்னைச் செய்ய உன்னால் முடியாது. அதுதான் உன்னுடைய எண்ணமென்று எனக் குத் தெரிகிறது. ஹேமவதி சீமாட்டியும் அவளது குமாரி ராஜேஸ்வரியும் பிரயாணம் செய்யும் போது வண்டியில் இரு பூனைகளைப் போல் சண்டை போட்டுக் கொண்டார்கள் என்று நமது சேவகர்கள் வெளியில் சொல்வதற்கு நான் இடம் தரமாட்டேன்,' என்றாள்.

இதைக்கேட்ட சீமாட்டி, பலவிதத்திலும் மனக்குழப்பம் அடைந்தவளாய், 'ராஜேஸ்வரி! இதையெல்லாம் எப்படித்தான் முடிவுக்குக் கொண்டுவருவது? ஐயோ கடவுளே. இவைகள் எல்லாம் நடைபெறுவதும் சாத்தியமாக இருந்ததே! இப்பால் எனக்கு எல்லாம் மனக்கஷ்டமாகவே நேர்ந்திருக்கிறது. உண்மையிலேயே நான் உலகத்தை வெறுத்து விட்டேன். அதனுல்தான் இந்த இரகசியத்தை உலகம் அறிந்தாலும் கவலைப் படப்போவதில்லை யென்று சொன்னேன் ஆ, தற்கொலை என்று பிரஸ்தாபித்தாயே; ஆம் நானும் அந்த முடிவுக்குத்தான் வந்திருந்தேன். மறுபடியும் நான் உன்னைக் கேட்கிறேன். இதையெல்லாம் எவ்வாறு முடிவுக்குக் கொண்டுவருவது? ராஜேஸ்வரி! நீயும் நானும் இந்த முறையில் அதிககாலம் ஒத்துவாழ முடியாது' என்று கூறினுள். அப்போது அவள், 'கிருஷ்ணகிரிக்கு உன்னுடன் வருவதாக நானுக விண்ணப்பம் செய்து கொள்ளவில்லை. நீ அழைத்த பிறகு நான் வாராமல் இருப்பது நியாயமல்ல என்று நினைத்தே புறப்பட்டேன். புறப்படுவதற்கு முன் நீ அந்தமாதிஉடன் பேசிக்கொண் டிருந்தாயே அது முடிந்த பின்னர் நீ தானே என் அறைக்கு வந்து புறப்படத்தயாராக இருப்பதாகத் தெரிவித்தாய்,' என்று கேட்டாள். அப்போது ஹேமவதிசீமாட்டி, 'ஐயோ! அப்போது நான் பாதி பைத்தியக்காரியாக இருந்தேன். நான் என்ன செய்கிறேன் என்பது எனக்கே தெரியவில்லை. வண்டியோ வீட்டு வாயிற்படியில் நின்றிருந்தது. எப்படியாவது வீட்டைவிட்டு எங்கேயாவது ஓடிப்போனுல் போதுமென்று இருந்தது, மேலும் எல்லாம் தயாராக இருந்தபோது பிரயாணம் புறப்படாமல் நின்றுவிட்டால் வீட்டிலுள்ள வேலைக்காரர்கள்தான் என்ன நினைப்பார்கள். ஆ! கற்பகம் திடீரென்று ஓடிப்போனதைப் பற்றி அவர்கள் எல்லாம் என்ன நினைக்கிறுர்களோ தெரியவில்லை. நான் வண்

டியில் ஏறும் சமயத்தில் வந்த அந்த மாதைத் தனியாக அழைத்துக்கொண்டுபோய்ப் பேசியதால் அவர்கள் என்ன நினைப்பார்களோ? கற்பகத்தின் பின்னாலேயே ஒரு ஆளை ஓடும்படி அனுப்பி அவளைக் கண்டுபிடிக்க முயற்சி செய்யாமற்போனது என் தவறுதலேயாகும். ஆதலால் நாம் உடனே திரும்பிப் போவோம். அதுதான் சரியான வழி என்று சொல்லிக்கொண்டே வண்டியைத் திருப்பும்படி செய்வதற்காகத் தன் தலையை வெளியே நீட்டினாள்.

அப்போது ராஜேஸ்வரி தன் தாயின் தலையை உள் பக்கமாக இழுத்து, 'கற்பகத்தைத் தேடிக் கண்டு பிடிக்கலாமென்னும் எண்ணத்துடன் நீ இரத்தினபுரிக்குத் திரும்புவதாயின் அப்படித் திரும்பிப் போகும் கஷ்டத்தைக் குறைத்துக் கொள். ஏனெனின் நீங்கள் எவ்வளவுதான் தேடினாலும் அகப்பட முடியாதபடி அவ்வளவு பக்குவமான ஏற்பாடுகள் செய்யப் பட்டிருக்கின்றன,' என்று சொன்னாள். அதைக்கேட்ட ஹேமவதி சீமாட்டி, 'இந்த ஏற்பாடுகளையெல்லாம் நீ தான்செய்திருக்க வேண்டும். நீ பெரிய சூழ்ச்சிக்காரியாகவும் புரட்டுக்காரியாகவும் இருக்கிறாய். நான் உன்னை அடிமுதல் நுனிவரை வெறுக்கிறேன் உன்னைக் கண்டாலே எனக்கு எரிகிறது,' என்றாள், அதற்கு ராஜேஸ்வரி, 'என்னையா சூழ்ச்சிக்காரி என்கிறாய்? அப்படியே இருக்கட்டும் குமாரிகள் தங்கள் தாயை எல்லாவகையிலும் பின்பற்றி நடப்பதில் என்ன குற்றமிருக்கிறது!' என்றாள். இதைக் கேட்டதும் அடக்கமுடியாத கோபமும் ஆத்திரமும் அடைந்த சீமாட்டி அதைத் தாங்க முடியாமல், 'ஓ, இதைப் பொறுக்கமுடிய வில்லையே! என்று அலறினாள்.

மிக்க கர்வமும் தற்பெருமையும் உடைய ஹேமவதி சீமாட்டி உண்மையிலேயே அப்போது அழுதாள். பெரு

மூச்சு விட்டாள். அவள் அடக்கப் பட்டவள் போலவும் தோல்வியடைந்தவள் போலவும் தன்னைக் கருதினாள். தன் எதிரில் நிற்கும் தன் குமாரியை எப்படியாவது பழிவாங்க வேண்டுமென்று நினைத்தாள். ஆனால் எந்த முறையில் பழியைத் தீர்த்துக் கொள்வதென்று தெரியவில்லை. அவள் மீது பாய்ந்து அவளது கண் மூக்கு முதலியவைகளைப் பிடுங்கியெறிந்து அவளை அழித்துவிடலாமா என்று பதட்டமடைந்தாள். ஆயினும் அவ்வளவையும் எப்படியோ அடக்கிக் கொண்டாள். அதைச்செய்ய முடியாமையால் அவ்வளவு ஆத்திரமும் துக்கமாக மாறி அவள் ஓவென்று வாய்விட்டு அலறி அழுதாள். இவ்வாறு சிறிது நேரம் அழுது புரண்ட பின்னர் அவளது மனம் சிறிது நிம்மதியை அடைந்தது. ஆகவே அவள் மறுபடியும் தன் முகமூடியை இழுத்துக் கொண்டு அப்படியே தூங்குபவள் போல் மௌனம் சாதித்தாள்.

கிருஷ்ணகிரிக்குச் செல்லும் வழியில் இன்னும் என்னென்ன நடந்தது என்று அநாவசியமாக விவரித்துக் கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. அன்று மாலை வரை அப்பிரயாணம் நடைபெற்றது. என்று மட்டும் சொன்னால் போதுமானது. தாயும் மகளும் இடையிடையே ஏதோ சச்சரவு செய்து கொண்டேதான் போனார்கள். சூரியனும் மறைந்தான். அவர்களுடைய வண்டியும் கிருஷ்ணகிரியில் நுழைந்து சென்று சுந்தர விலாச மாளிகையின் முன் நின்றது. தாயையும் குமாரியையும் வரவேற்பதற்காக வேலைக்காரர்கள் காத்திருந்தார்கள். சீமாட்டி முன்னரே தெரிவித்திருந்த கடிதத்தின்படி அவர்கள் காத்திருந்தார்கள். சீமாட்டி முதலியவர்கள் கிருஷ்ணபுரியில் இல்லாமல் இரத்தினபுரியில் இருக்குங் காலத்திலும் சுந்தரவிலாச மாளிகை

யில் பல சேவகர்கள் இருப்பது வழக்கம். அம்மாளிகையின் முன் வண்டி வந்து நின்றதும் வேலைக்காரர்கள் தங்கள் எஜமானி மூத்தகுமாரியுடன் மட்டும் வந்திருக்கிறாள் என்றும் தெரிந்து கொண்டார்கள். வண்டியை விட்டு இறங்கிச் சீமாட்டியும் ராஜேஸ்வரியும் மாளிகையில் நுழைந்த பின்னர் வெளியில் இருந்த வண்டியோட்டியும் சேவகர்களும் கிருஷ்ணகிரி சேவகர்களிடம் சீமாட்டியின் இளைய குமாரியாகிய கற்பகம் தன் வேலைக்காரியாகிய பார்வதியுடன் எவ்வாறு ஓடிப்போனாள் என்பதைப் பற்றிச் சொன்னார்கள். ஆகவே எல்லாருமாக ஆச்சரியப் பட்டனர்.

ஹேமவதி சீமாட்டி கிருஷ்ணகிரிக்கு வந்து இரண்டு வருஷங்களாய் விட்டிருந்தது. அவள் எப்போதுமே அடிக்கடி அங்கு வருவதில்லை. எப்போதாவது வரும்போதும் நீண்டகாலம் இருந்ததில்லை. நகரத்தை விட்டுக் கிராமத்தில் வசிக்க அவள் அதிகம் பிரியம் கொண்டதில்லை. அம்மாளிகை முன்பு பத்தொன்பது வருஷங்களுக்கு முன் எப்படியிருந்ததோ அப்படித்தான் இருந்தது. அதில் ஒன்றும் விசேஷ மாறுதல் ஏற்பட்டிருக்கவில்லை. மாளிகைக் கட்டடத்துக்குச் சேர்ந்த மடமும் அப்படியே இருந்தது. ஹேமவதி சீமாட்டியும் ராஜேஸ்வரியும் ஒவ்வொரு வேலைக்காரிகளுடன் தங்கள் படுக்கையறைக்குச் சென்றார்கள். பிரயாணத்தின்போது ஏற்பட்ட களைப்பைத் தீர்த்துக் கொள்ளும் பொருட்டு சோப் நீரால் முகத்தைக் கழுவிக்கொண்டார்கள். பிறகு அவர்கள் ஆகார அறைக்குவந்து ஆகாரத்தை உட்கொண்டனர். பிறகு அவர்கள் பொது ஹாலுக்குச் சென்றார்கள்.

அப்போது ஹேமவதி சீமாட்டியின் மனதில் பலவித எண்ணங்கள் தோன்றலாயின. பத்தொன்பது வருஷங்

களுக்கு முன் இந்த அறையில் தான் ராஜசேகரன் அவளைச் சந்தித்து அவள் கையில் வைத்துக் கொண்டிருந்த குழந்தை காணமற் போன அவளுடைய குழந்தைதானு என்று ஆராய்ந்தான். அவள் எந்தப்பக்கம் திரும்பிப் பார்த்தாலும் அங்குக் காணப்பட்டவைகளெல்லாம் அவளுக்கு ஏதோ பழைய ஞாபகத்தையே உண்டாக்கின. அக்குழந்தை அவள் கையிலிருந்தபோது மந்தரை உட்கார்ந்திருந்த இடம் எதிரில் காணப்பட்டது. தன் தந்தையாரான கோவிந்தானந்தர் நின்று கொண்டு, 'குழந்தை மீண்டும் திரும்பக் கிடைத்ததற்காக இறைவனுக்கு வணக்கம் செலுத்தவேண்டும்' என்று கூறிய இடமும் அங்கே இருந்தது. அவளும் ராஜசேகரனும் நின்று கூடிப்பேசி மறுபடியும் இரவில் மடத்தில் சந்திப்பதென்று முடிவு செய்த இடமும் அங்கே காணப்பட்டது. அவளுக்கு ஏன் இந்த இடங்களெல்லாம் ஞாபகத்துக்கு வந்தன. இராஜசேகரனே ஆச்சர்யமான விதத்தில் இறந்து போனுன். ஆனல் அவனுடைய பிரேதம் டாக்டர் குணசிங்கம் ரசாயன அறையில் இருந்ததைச் சீமாட்டியே கண்டாள். அவளுடைய தந்தை கோவிந்தானந்தர் இறந்து பல வருஷங்களாய்விட்டன. மந்தரையும் இறந்துவிட்டாள். ஆனல் அவள் இறந்து சொற்ப தினங்களே ஆகியிருந்தன. பத்தொன்பது வருஷங்களுக்குமுன் அங்கே மந்தரையின் கையில் இருந்ததும் தன் தந்தையின் ஆசீர்வாதத்திற்கு ஆளானதும் ராஜசேகரனுடைய பொருமைக்கும் கவலைக்கும் காரணமாயிருந்ததுமான குழந்தை மட்டும் இப்போது நன்ருக வளர்ச்சியடைந்து ஹேமவதி சீமாட்டிக்கே ஒரு பெரிய சாபம் போல் அவளுடைய வெறுப்புக்காளாகி அவளாலேயே, 'என்னைக் கொட்டும் தேளையே நான் பெற்றிருக்கிறேன்.' என்று சொல்லப்படுவனுக இருக்கிருன்.

சீமாட்டி கிருஷ்ணகிரிக்கு வந்த முதல் நாள் இரவே இவ்வாறெல்லாம் பல விஷயங்களைப் பற்றிச் சிந்தித்து துக்கப் பட்டாள். சுந்தர விலாச மாளிகைக்கு வந்ததற்காக மிகவும் கஷ்டப் பட்டாள். எங்கு பார்த்தாலும் நிசப்தமாக இருக்கிறது. ஆனால் இரத்தின புரியிலோ வேடிக்கையும் ஜனத்திரளும், சத்தமும் அதிகம். அங்கே சதா ஜனங்கள் வந்து கொண்டும் போய்கொண்டு மிருப்பார்கள். தன் மாளிகையின் முன் சதா வண்டிகள் ஓடிக்கொண்டே இருக்கும். ஆனால் கிருஷ்ணகிரியிலோ வருவாரும் இல்லை. போவாருமில்லை. பக்கத்திலுள்ள ஆற்றில் நீர் ஓடும் சத்தம் தவிர வேறொன்றும் கேட்பதில்லை. தனியாகவோ அல்லது தன்னால் பெரிதும் வெறுக்கப்படும் ராஜேஸ்வரியுடனேதான் காலங் கழிக்க வேண்டும். இதையெல்லாம் நினைக்கவே ஏன் இரத்தின புரியை விட்டு இங்கு வந்தோமென்றும் நினைத்துக் கொண்டாள். ராஜேஸ்வரியோ எதிரில் சாய்வு நாற்காலியில் சாய்ந்த வண்ணம் தாயார் முகத்தில் எத்தகைய குறிகள் தோன்றுகின்றன என்பதைக் கவனித்துக்கொண் டிருந்தாள். அவளுக்கும் ஏதோ தனிக்காட்டில் விட்டமாதிரி இருந்ததால் இங்கு ஏன் வந்தோம் என்று தோன்றிற்று. அங்கேயே இருந்திருந்தால் கற்பகம் போன இடத்திலுள்ள நிலைமைகளை விசாரித்து அறிந்திருக்கலாம் என்றும், தனக்கு ஏதேனும் ஒருவரைக் கணவனுக ஏற்பாடு செய்து அவரை மணந்ததும் தன் இஷ்டப்படி மோகன சுந்தரத்தைத் தேடிப் பிடித்து அவனுடன் இன்பமனுபவிக்க வழி செய்திருக்கலாம் என்றும் ஆனல் இங்கோ தன் நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ள ஒரு வழியுமில்லாமல் இருப்பதுடன் சிறிது காலம் சென்று இரத்தினபுரிக்குச் சென்றாலும் மோகன சுந்தரம் இருக்கு மிடத்தை அறிவதே கஷ்டமாய்ப் போய்விடுமென்றும் நினைத்தாள். இவ்வாருகத் தாயும் குமா

ரியும் தாங்கள் ஏன் வந்தோமென்று வருத்தப்பட்டனர். சுந்தா விலாச மாளிகை அவர்களுக்குக் கசப்பைத் தரும் ஒரு இடமாக இருந்தது.

அவர்கள் இருவரும் அவ்வாறு சிந்தித்துக்கொண்டே பொது ஹாலில் உட்கார்ந்திருந்தபோது மாளிகையின் மீது கோபுரத்தில் வைக்கப் பட்டிருந்த கடிகாரம் பத்து மணி அடித்தது. உடனே சீமாட்டி திடுக்கிட்டு எழுந்து பலமாக மணி அடித்தாள். உடனே ஒரு சேவகன் ஓடி வந்தான். அவனிடம் தன் வேலைக்காரி இந்திராணியை மெழுகுவர்த்தி விளக்குடன் அனுப்பும்படி சொன்னாள். உடனே அவனும் வெளியேபோய் இந்திராணியை அனுப்பினான். அவள் வந்ததும் ஹேமவதி சீமாட்டி அவளைப் பார்த்தாள். அவள் முகம் வெளுத்துக்கிடந்தது. ஏதோ அதிக பீதியடைந்தவள் போல் காணப்பட்டாள். ஆகவே சீமாட்டி மற்றொரு முறை உற்றுப் பார்த்தாள். அவள் அவ்வாறு பார்ப்பதை அறிந்த இந்திராணி தன் முகத்தில் காணப்படும் தோற்றத்தை மறைத்துக் கொள்ள முயன்றும் முடியவில்லை. இந்திராணியின் முகம் வெளுத்திருக்கிறதென்பதை சீமாட்டி தெரிந்து கொண்டு விட்டாள்.

ஆகவே சீமாட்டி அவளைப்பார்த்து, 'ஏதேனும் விசேஷமிருக்கிறதா? உன் முகம் ஏன் வெளுத் திருக்கிறது,' என்று கேட்டாள். அதற்கு இந்திராணி உண்மையை மறைக்கும் எண்ணத்துடன், 'விஷயமா? ஒன்றுமில்லையே' என்றாள். அதை நம்பாமல் சீமாட்டி, 'இந்திராணி! பொய் பேச வேண்டாம். உண்மையைச் சொல். விஷயமென்ன? நீ ஏதோ பயந்திருக்கிறாய்போலத் தெரிகிறது,' என்று கேட்டாள். அப்போதும் உண்மை விஷயத்தைச் சொல்வதற்குப் பயந்து

கொண்டே, 'நீங்கள் கோபித்துக் கொள்வீர்கள் என்று அஞ்சுகிறேன்' என்றாள். அப்போதும் சீமாட்டி, 'நீ பயப்படாமல் உண்மை விஷயத்தை நன்றாகச் சொல்லலாமென்று முன்னமே சொன்னேனே' என்றாள். அதற்கு இந்திராணி 'சீமாட்டியே! வேலைக்காரர்களுக்கென ஏற்படுத்தப்பட்டுள்ள அறையில் நான் இருந்தபோது கேட்ட ஒருவித சங்கதியால் பயந்திருக்கிறேன். வேறு விசேஷமில்லை' என்றாள். உடனே ஹேமவதி சீமாட்டி, 'என்ன சங்கதியைக் கேள்விப்பட்டாய். விஷயத்தையாவது என்னிடம் சொல். எல்லாரும் என்ன பேசிக்கொள்கிறார்கள் என்பதையாவது தெரிந்து கொள்ளலாம்; என்று கேட்டாள். அதற்கு அந்த வேலைக்காரி, 'சீமாட்டியே' நேற்று இரவு நமது மாளிகையின் மேற்குப்புற மூலையில் ஏதோ பிசாசு ஒன்றைக் கண்டதாக நமது வேலைக்காரர்கள் சொன்னார்கள்,' என்றாள்.

அக்கட்டடத்தின் அந்தப் பாகம் நீண்டகாலமாகவே பிரயோசனப்படுத்தப் படாமல் அறைகளெல்லாம் மூடப்பட்டுக் கிடக்கின்றன என்பது வாசகர்களுக்குத் தெரிந்ததே. அங்கே சேவகர்கள் கூடப் போவதில்லை. மேலும் அதற்கடுத்ததும் அதிலிருந்து வழியை உடையதுமான கட்டிடமே மடமாகும். அதில்தான் ராஜசேகரன் சீமாட்டியைப் பத்தொன்பது வருஷங்களுக்கு முன் சந்தித்துப் பிறகு வெளிவாமலே அப்படியே எமனுலகம் நாடினன். ஏதோ பிசாசு இருந்ததைக் கண்டதாகச் சேவகர்கள் சொன்னார்கள் என்று இந்திராணி சீமாட்டியிடம் சொன்னதும் சீமாட்டியும் அங்கேயிருந்த ராஜேஸ்வரியும் சிரித்தார்கள். பிறகு ராஜேஸ்வரி அங்கிருந்து தன் அறைக்குப் போய் விட்டாள். ஹேமவதி சீமாட்டி அந்த வேலைக்காரியிடம், 'இன்னும், அதைப்பற்றி என்னென்ன பேசுகிறார்களோ அதையெல்லாம் என்னிடம்

வந்து சொல், என்று கட்டளை யிட்டாள். பிறகு சீமாட்டி தன் அறையை நோக்கி நடக்க ஆரம்பித்தாள். அப்போதும் இந்திராணி மேற்கொண்டு நடக்க பயந்து கொண்டு அந்த இடத்திலேயே நின்றாள். அதைக் கண்டதும் சீமாட்டி, 'உண்மையிலேயே அவர்கள் பேசிக்கொள்வதை விவரமாகச் சொல். ஏனெனின் அந்த இடங்கள் நீண்டகாலமாக சஞ்சார மில்லாம லிருப்பதால் ஏதேனும் பேய் பிசாசுகள் இருந்தாலும் இருக்கலாம். நாம் போவதற்கு முன் அதையெல்லாம் சுத்தப்படுத்திவிட்டுப் போவோம்! என்றாள்.

அதற்கு இந்திராணி, 'நேற்று பகல் நமது வேலைக்காரர்கள் வீடு முழுமையும் சுத்தப் படுததவேண்டுமென்னும் எண்ணத்துடன் மேற்கு மூலையிலுள்ள பாகத்தையும் அப்படியே மடத்தையும் சுத்தம் செய்வதற்காகச் சென்றபோது மடத்தில் யாரோஓடிய சத்தம் கேட்டதாம். அவர்கள் பிசாசு தானே என்று பயந்து உள்ளே போய்ப் பார்த்ததில் யாரும் காணப்படவில்லை. ஒருகால் காற்றினலும் அம்மாதிரி சத்தம் கேட்டதோ என்று திரும்பி வருகையில் மீண்டும் சத்தம் கேட்கவே அவர்கள் பயத்துடன் வந்து விட்டார்கள். மறுபடியும் இரவில் பல வேலைக்காரர்கள் மேற்கு மூலைக்குப் போனதும் அருகே யிருந்த மடத்தின் ஜன்னல் திறந்திருக்கக் கண்டு அவர்களால் பகலில் மூடப்பட்டதான அது எப்படி திறக்கப்பட்ட தென்பதை அறியும் பொருட்டு மடத்துக்கே சென்றதில் யாரோ ஒருவர் வருவதுபோல் தோன்றியதாம். உள்ளே போய் எந்த மூலையில் பார்த்தாலும் யாரும் காணேம். அங்கே பூமிக்குள் இறங்கிச் செல்லக் கூடிய படிக் கட்டுகளுக் கருகிலும் போய்ப் பார்த்தார்களாம். ஆனல் அவர்கள் உள்ளே இறங்கிப் பார்த்ததா

கத் தெரியவில்லை. எப்படியாயினும் மடத்தில் ஏதோ பிசாசு இருப்பதாய் நிச்சயமாக நம்புகிறார்கள். இதை யெல்லாம் கேட்ட நான் பயப்பட மாட்டேனே. இதற்காக நீங்கள் கோபிக்க மாட்டீர்களென்று நம்புகிறேன்' என்றாள். அதற்கு ஹேமவதி சீமாட்டி, 'கோபமென்ன? நீ பிறர் சொன்னதைத்தானே என்னிடம் சொன்னாய் அதிலென்ன; குற்றமிருக்கிறது? எனினும் இப்படியெல்லாம் எல்லாரும் பயப்படும்படி ஒரு சமாசாரத்தைக் கிளப்பி விடுவது சேவகர்களின் முட்டாள்தனமேயாகும்!' என்று சொன்னாள்.

ஹேமவதி சீமாட்டி தன் வேலைக்காரியுடன் தன் படுக்கையறைக்குச் சென்றதும் அது ஏதோ பயங்கரமானதாக இருந்ததைக் கண்டாள். இரத்னபுரியில் தன் படுக்கையில் இருந்தமாதிரியான ஆடம்பரங்கள் வேடிக்கைகள் முதலியன அங்கு இருக்கவில்லை. இரண்டும் மேஜைகளின் மீது இரு விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன வென்றாலும் அவளுக்கு மட்டும் ஏதோ பயமாகத்தான் இருந்தது. அந்த மனப்பான்மையை மாற்றிக்கொள்ள எவ்வளவோ முயன்றாள். உடனே தூக்கம் வந்து விடவில்லை. பிசாசு என்று ஏதோ சொன்னார்களே அது என்ன என்று அறிய வேண்டுமென்னும் ஆவல் அதிகரித்தது. அவள் அப்படிப்பட்ட மூடநம்பிக்கைகளை யெல்லாம் நம்புபவள் அல்ல. திடமான மனதையுடையவள் என்பது வாசகர்களுக்குத் தெரிந்ததே. ஆயினும் அவள் மனம் அன்று காலை முதல் அதிகம் நொந்து போயிருந்தாலும் பலவித கவலைகளை அடைந்தாலும் அவள் மனம் பலஹீனத்தை யடைந்திருந்ததால் அவள் பிசாசு பயத்துக்கு ஆளானாள். எனினும் தீரயோசித்தபின்னர் இதற்கெல்லாம் இப்படி பயப் படுவதா என நினைத்துத் தன்னைத்

தானே தைரிய மூட்டிக் கொண்டு படுக்கையின் அருகில் சென்றாள்.

ஆனால் தடுக்கமுடியாத ஏதோ ஒருவித உணர்ச்சி அவளைத் தூண்டியதால் அவள் குனிந்து தன் படுக்கையைச் சேர்ந்த துணிகளை யெல்லாம் ஒவ்வொன்றாக எடுத்துப் பார்த்தாள். அவளுக்குப் பயத்தைக் கொடுக்கக் கூடியது அங்கு ஒன்றும் இருக்கவில்லை. தன் முட்டாள் தனத்துக்காக அவளே தன்னைக் கடிந்து கொண்டாள். ஆயினும் படுக்கையில் படுப்பதற்குரிய தைரியம் அவளுக்கு வரவில்லை. ஆகவே அவள் தான் செய்வது இன்னதென்று தனக்கும் தெரியாமலே தன் கையில் விளக்கு ஒன்றை எடுத்துக்கொண்டு அறையை யெல்லாம் பரிசோதித்தாள். அப்படியே அவள் ஒவ்வொன்றாக அடுத்துள்ள ஆடைகளை அணியும் அறை, ஸ்நான அறை ஆகியவற்றையும் பரிசோதித்துப் பார்த்தாள். தன்னைப் பயப்படுத்தக் கூடியது ஒன்றும் இருக்கவில்லை. ஆகவே அவள் படுக்கை யறைக்குத் திரும்பி வந்து, 'இனி நான் படுத்துக் கொள்ள வேண்டியதுதான்' என்று தனக்குள் கூறினாள். ஆனால் படுப்பதற்குரிய தைரியம் வரவில்லை. ஏதோ ஒருவிதமான பயம் தோன்றியது. கையிலிருந்த விளக்கை ஒரு மேஜையின் மீது வைத்துவிட்டு அறையின் மத்தியில் நின்று கொண்டு யோசித்தாள். அப்படி நின்று கொண்டிருந்த போது எதிரிலிருந்த முகம் பார்க்கும் கண்ணாடியில் அவளது முகம் தெரிந்தது. அதிலிருந்து தன் முகம் பிணத்தினுடையதைப்போல் வெளுத்துப் போயிருப்பதைக் கண்டாள். அதனால் அவள் தேகம் முழுதும் அச்சத்தால் நடுங்கியது. ஆகவே ஒரு கற்சிலைபோல் அவள் அசையாமல் பிரமையுடன் நின்றாள்.

ஆயினும் அவள் இயற்கையிலேயே சிறிது மனோ உறுதி யடைந்தவளாதலால் தன் மனதில் தோன்றியுள்ள அச்சத்தை உதறித் தள்ளவேண்டுமென்னும் எண்ணத் துடன், 'அவ்வாறு ஒருகாலும் இருக்கமுடியாது. இறந்து போனவர்களின் ஆன்மா இவ்வாறு தரையில் நடக்காது. ஆனால் அவனுடைய ஆத்மா' என்று ஏதோ நினைத்தபோது திடீரென்று தன் முதுகில் யாராவது தட்டினால் எப்படி பயப் படுவாளோ அவ்வாறு பயந்தாள். அதற்குமேல எதையேனும் யோசிக்கவும் அவள் மனம் துணியவில்லை. ஆகவே அவள் சிந்தித்துப் பார்த்ததில் தான் அருகிலுள்ள மடத்துக் குச் சென்று அதைப்பூராவும் பரிசோதிப்பதுடன் பூமிக்குள் போகும் வழியையும் திறந்து படிக்கட்டுகளின் வழியே இறங்கி அங்கு என்ன இருக்கிறதென்று பார்த்து விடுவதே சரி என்னும் முடிவுக்கு வந்தாள். அவ்வாறு பார்த்து மனம் நிம்மதி யடைந்தால்தான் தைரிய முண்டாகும் என நினைத் தாள். இவ்வாறு நினைத்ததும் அவளுடைய தைரிய மனைத் தும் ஒன்றாகத்திரண்டு அவளுக்கு உற்சாகத்தை ஊட்டியது. அப்போது அவள், 'அவனுடைய ஆன்மாவானது பிறர் கண்ணில் விழுந்திருக்குமாயின் அது என் கண்ணில் விழுமா னால் அதற்காக பயப்படுவதைவிட என் படுக்கை யறையின் ஜன்னலையே அடைத்து விடுவேன். அப்படி விழாமற் போனால் வேலைக்காரர்களும் நானும் அனாவசியமாகத்தேடிப்பார்த் ததற்காகச் சிரித்துவிட்டு அதைப்பற்றிக் கவலைப்படாமல் இருப்பேன். பிறகு எனக்கு அந்தபயமே தோன்றாது' என்று நினைத்துக் கொண்டாள்.

18580

மனமோகினி

ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது தமிழபிமானிகட்குத் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று நமது "ஆனந்த போதினி"ச் சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இதனை 1922௵ பிப்ரவரி௴ 1௳ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாகவந்து ஆறுமாதங்களுக்கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். இதற்குமுன் மகா அற்புதம்பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி-துப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" "பவளத்தீவு" "ஞான செல்வாம்பாள்" "அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்" "கற்பகச்சோலையின் அற்புதக் கொலை" "கடற்கொள்ளைக்காரன்" "இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்" 'இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்" 'சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி" இரத்தினபுரி ரகசியம் 3-ம்,4-ம்,5-ம்,6-ம்,7-ம் பாகம் நாவல்கள் முடிவுபெற்று இப்பொழுது இரத்தினபுரிரகசியம் 8-ம் பாகம் என்றநாவல் ஆரம்பமாகி நடந்துவருகிறது. முடிவான நாவல்கள் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ளவேண்டும்; அவற்றின் தனிச் சஞ்சிகைகள் கிடையா. இச்சஞ்சிகைகள் ஒவ்வொன்றும் கிரௌன் 80-பக்கங்கொண்டது. அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன்பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரி௴ ஆரம்பமே இச்சஞ்சிகைக்கு வருஷ ஆரம்பம். எப்பொழுது சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அந்த வருஷம் பிப்ரவரிமாதம் முதற்கொண்டு கணக்கு வைக்கப்படும். உள் நாட்டிற்கு வருஷ சந்தா ரூ. 2—8—0

வெளி நாட்டிற்கு ,, 3—0—0

இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வெளிவந்திருக்கும் புஸ்தகங்கள்.

அமராவதி 2 பாகமும் ரூ. 4 0 பவளத்தீவு 2 பாகமும் ரூ. 3 0

ஞானசெல்வாம்பாள் 5 பாகமும்	ரூ.	9	10	0
அர்ஜுனஸிங், சுந்தர்	,,	0	2	0
அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்		1	12	0
கற்பகச்சோலையின் அற்புதக்கொலை	ரூ.	1	4	0
கடற் கொள்ளைக்காரன் 2-பாகமும்	,,	3	4	0
இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்	,,	2	0	0
இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்	,,	1	12	0
சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி	,,	2	0	0

மானேஜர்:—"ஆனந்த நிலையம்," தபால்பெட்டி நெ. 167, மதராஸ்

"ஆனந்தபோதினி"

ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915ளு ஜூலைமீ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகிக ஆசார ஒழுக்கங்களின் சீர் திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானபிவிர்த்தியையும், பெண்கல்வியையும் நோக்கமாய்க்கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதி சஞ்சிகையிலும் மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி பேர்பெற்றவர்களால் எழுதப்பட்ட அறிவு விருத்திக்கான மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரை யுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத் தக்கது. இது நமது நாட்டாரது நன்மையொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில் 80 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற் கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பினங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 2-0-0 மாதிரிக்காப்பி இனாம்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

இரத்தினபுரி இரகசியம்	ரூ.	அ.	தினகரசுந்தரி	ரூபா 1	0
7-பாகமும் ...	13	14	தபால்கொள்ளைக்காரர்	0	14
பவளத்தீவு 2-பாகமும்...	3	0	ரத்தினபாய் ...	1	18
கற்கோட்டை ...	2	0	வீரநாதன் ...	0	10
மின்சார மாயவன் ...	1	8	குணசுந்தரன் ...	0	12
தேவசுந்தரி ...	1	4	மஞ்சள் அறையின் மர்மம்	1	2
கனகபூஷணம்2பாகம்...	3	8	கமலசேகரன் ...	1	12
இராஜாமணி ...	2	0	பூங்கோதை ...	0	12
ஆனந்தவிங் ...	2	0	இந்திராபாய் ...	2	8
மதனபூஷணம் ...	1	0	அமராவதி 2 பாகமும்	4	0
ஞானசெல்வாம்பாள்			மதனம்பாள் 2 பாகமும்	3	0
5 பாகமும் ...	9	10	லோககாயகி	1	0

விலாசம் : மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,
6, லாயர் சின்னதம்பி முதலி வீதி, சௌகார்பேட்டை, மதராஸ்.